31/25

24

# உதயன்

■ பதிப்பு: ★ ■ சுடர் 28 ■ வள்ளுவர் ஆண்டு 2044
■ விலை: ரூபா 25 ■ கதிர் 122 ■ பங்குனி 15 வியாழன் 28.03.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

## பொதுநலவாய மாநாட்டுக்கு மன்மோகன் செல்லக்கூடாது



சென்னை, மார்ச் 28

இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கெடுக்கக் கூடாதென்பதை வலியுறுத்திக் காங்கிரஸ் ஆட்சியின் கீழுள்ள புதுவை சட்டசபை முதல்வர் ரங்கசாமி பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம் எழுதவுள்ளதாகத் தெரிவித்தார்.

புதுவை சட்டசபையில் வரவு-செலவுத் திட்டம் தொடர்பிலான விவாதம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர் அன்பழகன், இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய் மாநாட்டில் இந்தியா பங்கெடுக்கக்கூடாது என வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரினார்.

பார்க்க பக்கம் 04

# தனித் தமிழீழத்துக்கு பொது வாக்கெடுப்பு

## தமிழக சட்ட சபையில் ஏகமனதாகத் தீர்மானம்

சென்னை, மார்ச் 28

இலங்கையில் தமிழர்களுக்கெனத் தனித் தமிழீழம் அமைப்பதற்கான பொது வாக்கெடுப்பு விரைவில் நடத்தப்படவேண்டும் எனத் தமிழக சட்டசபையில் நேற்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தைச் சட்டசபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

தமிழக மாணவர்களின் ஈழ ஆதரவுப் போராட்டம் தொடர்பில் தமிழக சட்ட சபைக்கு நேற்று புதன்கிழமை சிறப்புக் கவனவீர்ப்பு விவாதம் நடத்தப்பட்டது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவினால் தமிழக சட்டசபையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

'தமிழன் யாருக்கும் தாழாமல், யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல், எவராலும் சுரண்டப்படாமல், எவருக்கும் எசமானாக இல்லாமல், உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களின் தலையாய கொள்கை' என்றார் பேறிஞர் அண்ணா.

பேறிஞர் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப, இலங்கை வாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, இலங்கையை நட்பு நாடு என்று சொல்லுவதை இந்தியா நிறுத்திக்கொள்ள

பார்க்க பக்கம் 04

## வடக்கில் ஐ.நா. குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடபகுதியின் தற்போதைய கள நிலைமைகள் தொடர்பில் இங்குள்ள ஐ.நா. முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன், யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகைதந்த பிரிட்டன் குழுவினர் கலந்துரையாடல் ஈடுபட்டனர்.

இதன்போது வடபகுதியில் சமூகத்தினர் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி நீல் கொம்ரென் தலைமையிலான குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்தனர்.

இவர்கள் பலாலியில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன்

பார்க்க பக்கம் 04

# விரைவில் மலரும் தனித் தமிழீழம்



## அடித்துக் கூறுகிறார் ஜெயலலிதா

சென்னை, மார்ச் 28

எமது தனித் தமிழீழக் கோரிக்கையை வென்றெடுக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை. விரைவில் இந்தக் கோரிக்கை நிறைவேறும் என்று அடித்துக் கூறினார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா.

தமிழகத்தில் மாணவர்கள் தொடர்ச்சியாக நடத்திவரும் ஈழ ஆதரவுப் போராட்டம் தொடர்பிலான சிறப்புக் கவனவீர்ப்பு விவாதம் தமிழக சட்டச் சபையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கை அரசின் மனிதாபிமானமுள்ள ஈவு இரக்கமற்ற மனிதநேயமற்ற செயல்களை, இனப்படுகொலையை

பார்க்க பக்கம் 04

## ஆயுதங்கள் தாருங்கள் போராடுவோம்

8

## சோமாலிய மக்கள் மீது பாலியல் துன்புறுத்தல்

9

## ஆகக் குறைந்த சம்பளம் 7,500

17

## 12 கோடியை உதறிய கிளார்க்

23

# தமிழக எதிர்ப்பை அரசு முறியடிக்கும்

## அமைச்சர் வாசு நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 28

தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக அதிகரித்துவரும் எதிர்ப்புகளை இல்லாதொழிப்பதற்கும், இலங்கை தொடர்பில் தமிழகத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் ஆளுந்தரப்பின் சிரேஷ்ட அமைச்சர்கள் வெகுவிரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர் என்று தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்கப்பாட்டுக்குமான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டி

பார்க்க பக்கம் 04

# நடு வீதியில் ஓட ஓட நபர் வெட்டிக் கொலை

## குடாநாட்டில் நேற்றுப் பயங்கரம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பட்டப்பகலில் சினிமாப் பாணியில் யாழ்.நகரில் பயங்கரக் கொலை ஒன்று நேற்று நிகழ்த்தப்பட்டது. வீதியில் ஓட ஓடத் துரத்தப்பட்ட நபரின் மீது அசிட் வீசித் தாக்கிய கும்பல் அவரது கையை வாளினால் வெட்டித் துண்டாடியது. இந்தப் படுபாதகச் செயலால் யாழ். நகரமே நேற்று அதிர்ச்சியில் உறைந்தது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் அவசரமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு விரையப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி நேற்றிரவு உயிரிழந்தார்.

இந்தக் கோரச் சம்பவம் யாழ்.ஐந்து சந்தியில் பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி வீதியைச் சேர்ந்த அப்துல் காதர் நவாஸ் (வயது -56) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரது சகோதரன் தெரிவிக்கையில்;

உயிரிழந்தவரின் மகனின் மனைவியை மகனின் நண்பர் சில வாரங்களுக்கு முன்னர் திருமணம் செய்துகொண்டு சென்றுவிட்டார். அது தொடர்பில் நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நிலையிலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் மூன்று பேர் கொண்ட குழுவினர் தலைக் கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் உயிரிழந்த நவாஸ் என்

பார்க்க பக்கம் 04

## வரலாறு பொன்மகுடம் சூட்டும்

### முதல்வருக்கு வைகோ பாராட்டு

சென்னை, மார்ச் 28

தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று ஈழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று நிறைவேற்றியுள்ள தீர்

பார்க்க பக்கம் 04

# மாணவர்- காங்கிரஸ் திருச்சியில் மோதல்

## 5 பேர் வைத்தியசாலையில்

சென்னை, மார்ச் 28

ஈழ ஆதரவுப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் தமிழக மாணவர் கூட்டமைப்பினருக்கும், காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களுக்கும் இடையில் திருச்சியில் நேற்று புதன்கிழமை கை கலப்பு இடம்பெற்றது. இதனால் 4 மாணவர்கள் உட்பட 5 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி மத்திய பஸ் நிலையத்துக்கு அண்மையில் காங்கிரஸ் கட்சியின் அலுவலகம் அமைந்துள்ளது. காங்கிரஸ் கட்சியின்

பார்க்க பக்கம் 04

# விடுதலைப் புலிகளாக நாங்கள் மாறுவோம்

## தமிழக மாணவர் எச்சரிக்கை

சென்னை, மார்ச் 28

தமிழகத்தில் மாணவர்களே விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடங்கி, தனி ஈழம் அமைவதற்கான போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என்று மாணவர் போராட்டக் குழு தெரிவித்துள்ளது.

மதுரை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து அனைத்துக் கல்லூரி மாணவர்கள் இன்று மாலை மோட்டார் சைக்கிள் பேரணி தொடங்கினார்கள்.


இப்பேரணியைத் தொடங்கி வைத்துப் பேசிய மாணவர் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் பகவான் தாஸ், இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிட்டுத் தனி ஈழம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காவிட்


பார்க்க பக்கம் 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் தமிழீழமே தீர்வு!

ஈழத் தமிழர்கள் விவகாரம் தொடர்பாக தமிழகத்தில் முன்னணி வார இதழான ஆனந்தவிகடன் நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவுகள்....




தர்மபுரி கலவரம், ராமதாஸ் நடவடிக்கை, கலப்புத் திருமணம், காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு, நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி, அடுத்த பிரதமர், விஜயகாந்தின் செயல்பாடு என இன்னும் பல கேள்விகளுக்கான முடிவுகள் அடுத்த இதழில்...

# நூலக விஞ்ஞானம் மறுபடியும் யாழ்.கல்வியியல் கல்லூரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு இந்த முறை 260 ஆசிரியப் பயிலுநர்கள் உள்வாங்கப்பட உள்ளனர். தவிர 2008 இல் இடைநிறுத்தப்பட்ட நூலக விஞ்ஞானத்துறை பாடநெறி இந்தவருடம் தொடக்கம் மீளவும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது என்று கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

கணித பாடத்தில் ஆங்கிலம், தமிழ்மொழி மூலம் 60 பேரும், விஞ்ஞான பாடத்தில் ஆங்கிலம், தமிழ் மொழி மூலம் 60 பேரும், ஆரம்பக் கல்வித்துறையில் 30 பேரும், நூலக விஞ்ஞானத்துறையில் 30 பேரும், ஆங்கில பாடத்தில் 60 பேரும், விசேட கல்விக்கு 20 பேருமாக 260 பேர் உள்வாங்கப்படவுள்ளனர்.

நூலகவிஞ்ஞானத்துறைப் பாட நெறி யாழ். கல்வியியல் கல்லூரியில் இருந்து வந்தது 2008 இல் இடைநிறுத்தப்பட்டது. அது இந்த வருடம் தொடக்கம் மீளவும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாணத்தில் ஆசிரியத் தேவைப்பாட்டில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரிகளில் அழகியல் பாடங்கள் மீண்டும் உள்வாங்கப்படுமெனவும் அழகியல் பாடத்துறை சார் வளங்கள் தொடர்ந்தும் பேணப்படும் என்றும் அதிபர் தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான ஆட்சேர்ப்பு முறைமை நாட்டின் தேசிய கொள்கைகளுக்கு அமைவாக காலத்துக்குக்காலம் மறுசீரமைக்கப்பட்டு வருகிறது. இந்த வருடம் ஒவ்வொரு மாகாணத்தினதும் பாடத்துறை சார்ந்த ஆசிரியர் தேவைப் பட்டியல் மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து பெறப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யத் திட்மிடப்பட்டது.

''வடமாகாணக் கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் அழகியல் துறைசார் ஆசிரியர்கள் 315 பேர் மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே வடமாகாணத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானம் ஆகிய பாடத்துறைகளில் காணப்படும் வெற்றிடங்களை கல்வியியல் கல்லூரிகளின் மூலமாகவே பூர்த்தி செய்யத் திட்மிடப்பட்டது.''- என்றும் தெரிவித்தார்.

(உ-4)

# சிறுவர் காய்ச்சலால் அச்சப்பட வேண்டாம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

''வழமையான காலநிலை மாற்றத்துக்கு அமைவாகவே குழந்தைகள் மற்றும் சிறார்கள் சாதாரண வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்படுகின்றனர். அவ்வாறு பீடிக்கப்படும் குழந்தைகள் மற்றும் சிறார்களை அருகில் உள்ள வைத்தியசாலைகளில் காட்டி சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்'' என்று யாழ்.போதனா வைத்திய சாலை குழந்தைகள் மருத்துவ நிபுணர் கே.அருள்மொழி 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

வழமையான காலநிலை மாற்றத்துக்கு அமைய தற்போது வெப்பநிலை அதிகரித்துள்ளது. அதனால் சாதாரண வைரஸ் காய்ச்சல் ஏற்படசந்தர்ப்பம் உண்டு. அதற்கு சாதாரணமாகச் சிகிச்சை பெறமுடியும். இது பெருளமவில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-4)

# கோத்தாவுக்கு 'விசர்'

## வைத்தியரை நாட வேண்டும் என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, மார்ச் 28

இலங்கை அரசுக்கு எதிராக அழுத்தங்கொடுக்கும் அனைவரையும் புலிகள் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கூறுகின்றார். அவ்வாறெனில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பிரிட்டன், இந்தியத் தலைவர்கள் அனைவரும் புலிகளா என்று கேள்வி எழுப்பிய நவ சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, இதுபோன்ற கருத்து தெரிவிக்கும் கோத்தபாயவுக்கு பைத்தியம் பிடித்துள்ளது என்று தெரிவித்தார்.

சர்வதேசத் தலைவர்களை ஒருபோதும் பகைத்துக்கொள்ள மாட்டோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறிவரும் நிலையில், அவரது தம்பிமார்கள் இருவரும் சர்வதேசத்தினரை எதிர்த்துக் கருத்து வெளியிடுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் அனைத்து நாடுகளும் புலி ஆதரவு நாடுகள். அங்குள்ள மக்கள் புலிகளே. புலிகள் தற்போது இலங்கையில் இல்லாவிட்டாலும், மேற்குலக நாடுகளிலிருந்துகொண்டு எமக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார். அப்படியெனில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரிட்டன் நாட்டுத் தலைவர்கள, இந்தியத் தலைவர்கள் முதலான அனைவரும் புலிகளா?

சர்வதேசத் தலைவர்களை இலங்கை அரசு ஒருபோதும் பகைத்துக் கொள்ளாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறிவந்தாலும், அவரின் சகோதரர்களான அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாம் எதற்கும் பயப்பட மாட்டோம். சர்வதேசத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கானோரை எம்மாலும் வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டம் நடத்த முடியும் என சூளுரைக்கிறார். மறுபுறத்தில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கைக்கு எதிராகவுள்ள சர்வதேச நாடுகள் அனைத்தும் புலிகள் வாழும் நாடு. சர்வதேசத் தலைவர்கள் அனைவரும் புலிகள் என்று கூறுகின்றார். தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தும் அனைவரும் புலிகள் என்றும் கூறிக் கொண்டிருக்கிறார்.

அத்துடன், அரசுக்கு எதிராகச் செயற்படும் எதிர்க்கட்சியினர்களாகிய நாமும், அந்நாட்டு மக்கள் என அனைவரும் புலிகளா? இவ்வாறு கூறுகின்ற பாதுகாப்புச் செயலருக்குப் பைத்தியம் பிடித்துள்ளது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இவரை நல்ல வைத்தியரிடம் அழைத்துச்சென்று பரிசோதிக்க வேண்டும்.

புலிகள் நாட்டில் உருவாவதற்கு இவர் போல, முன்பிருந்த கோத்தாக்களே வழிவகுத்தனர். அன்று இருந்த கோத்தாக்கள் தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகள் காரணமாகத்தான் புலிகள் உருவாகினர். தற்போது இந்த கோத்தாவும் அதே பாணியை பின்பற்றுகிறார். சர்வதேசத்திடம் இருந்து நாட்டுக்குப் பிரச்சினைகளையும், அழுத்தங்களையும் ஏற்படுத்த வழிவகுக்கிறார்.

இவரின் அறிவிப்புக்களினால், சர்வதேச நாடுகள் நம் மீது கொடுக்கும் அழுத்தங்களைத் தணிக்காது. அத்துடன், இலங்கை விவகாரத்திலிருந்து விலகி நிற்காது. சர்வதேச நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டுமெனில், அவர்களது வலியுறுத்தல்களுக்கமைய நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும், வடக்குத் தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும், வடக்குத் தமிழர்களிடமிருந்து அபகரித்த காணிகளை அவர்களிடம் அரசு மீளக் கையளிக்க வேண்டும். இதைச் செய்வதை விடுத்து சர்வதேசத்தினருக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கக் கூடாது - என்கிறார் பாகு.

(த-சி)

# கோயிலுக்குச் சென்ற பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

கெருடாவில் கிழக்கில் உள்ள வயற்கிணற்றிலிருந்து இளம்பெண் ஒருவர் சடலமாக நேற்று புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் மீட்கப்பட்டார்.

சீலாப்புலத்தைச் சேர்ந்த திருமதி சைலா சுதர்சன் (வயது-22) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கோயிலுக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து இவர் வெளியேறிச் சென்றார் எனவும், பின்னர் கிணற்றுக்குள் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டார் எனவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

இவரது இறப்புக் குறித்து வல்வெட்டித்துறைப் பொலிஸார் சாட்சிகளை முன்னிலைப்படுத்த, பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சசீந்திரசிங்கம் நடத்தினார்.

வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்திய சாலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட பின்னர், சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்ட அதிகாரி, மூச்சுத் திணறல் ஏற்பட்டதால் இறப்புச் சம்பவித்ததாகத் தீர்ப்பளித்தார். (உ-253)

# பட்டப் பகலில் பணத்தை அபகரிக்க முயன்ற பெண்கள்

## மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைப்பு

தென்மராட்சி, மார்ச் 28

பெண் அணிந்திருந்த கைப்பையினுள் சனநெருக்கடியைப் பயன்படுத்தி கையைவிட்டு பணத்தை அபகரிக்க முயன்ற மற்றொரு பெண்ணை கைப்பை உரிமையாளர் கையும் மெய்யுமாகப் பிடித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம்பெற்றது. மினி பஸ்ஸில் இருந்து இறங்க முற்படுகையில் சம்பவம் இடம்பெற்றது. கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மினிபஸ் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நின்றபோது இந்தத் திருட்டு முயற்சி இடம்பெற்றது.

பிடிக்கப்பட்ட இரு பெண்கள் அங்கு காவல் கடமையிலிருந்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த இரண்டு பெண்களும் வசதியுள்ளவர்கள் போல் காணப்பட்டனர். இவர்கள் மட்டக்களப்பு மற்றும் புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் பொலிஸாரிடம் சிங்களத்தில் உரையாடிய போதிலும் பொலிஸார் அவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பி வைத்தனர். (உ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மரியன்னை பேராலயத்தில் கிறிஸ்து இராவுணவு ஆராதனை

யாழ். மரியன்னை பேராலயத்தில் யேசுக்கிறிஸ்து நாதரின் இராவுணவு ஆராதனை இன்று வியாழக்கிமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெரிய வெள்ளிக்கிழமை ஆராதனை நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்குச் சிலுவைப் பாதை வழியாகத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு கல்லறை வழிபாடும் இடம்பெறும். நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யேசுக்கிறிஸ்துநாதர் தாம் சிலுவையில் தொங்கியபோது மரண வேதனையில் மொழிந்த ஏழு வார்த்தைகளின் தியான வழிபாடு நடைபெறும்.

தொடர்ந்து அன்றிரவு 10.30 மணிக்கு பாஸ்கா திருவிழிப்பு நள்ளிரவுத் திருப்பலி நடைபெறும். மறுநாள் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.45 மணிக்கு முதலாவது திருப்பலியும் தொடர்ந்து காலை

31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.45 மணிக்கு முதலாவது திருப்பலியும் தொடர்ந்து காலை 7 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

7.00 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

இதேவேளை அல்வாய் கற்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யேசுக்கிறிஸ்துவின் இராவுணவு ஆராதனை நடைபெற உள்ளது.

தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பெரிய வெள்ளிக்கிழமை வழிபாடும், மறுநாள் 30 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11.45 மணிக்கு பாஸ்கா திருவிழிப்பு ஆராதனையும் நடைபெற உள்ளன. (வ-51)

# தொடர்கிறது ஆபத்து அதிகாரிகள் அசட்டை



யாழ்ப்பாணம்,மார்ச் 28

*யாழ். மாவட்டத்தில் வீதி அபிவிருத்திப் பணிகளின் போது வெட்டப்பட்டுள்ள வீதிகள், பாலங்கள் ஆகியவற்றை அடையாளம் காண்பதற்காக இரவு வேளைகளில் அவற்றுக்கு அருகே வைக்கப்படும் சமிக்ஞை விளக்குகள் பல ஒளிராமல் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.*

இதனால் உடைக்கப்பட்டுள்ள அல்லது வெட்டப்பட்டுள்ள வீதிகள், பாலங்கள் என்பவற்றை இனங்காண முடியாத நிலைமை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதி புனரமைப்புக்காக வீதிகளில் வெட்டப்பட்ட வடிகால்கள், பாலங்கள் என்பவற்றைத் தாண்டி இரவு நேரங்களில் பயணம் செய்யும் பாதசாரிகளின் பாதுகாப்புக் கருதி அந்த இடங்களில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அண்மையில் இரு இடங்களில் உடைக்கப்பட்டிருந்த பாலங்கள், வெட்டப்பட்டிருந்த வீதிகள் காரணமாக ஏற்பட்ட விபத்துக்களில் மூவர் உயிரிழந்திருந்தனர்.

இதனை அடுத்து வீதிப் புனரமைப்பில் ஈடுபடும் நிறுவனங்கள் இரவில் அபாயமான இடங்களில் சமிக்ஞை விளக்குகளைக் கட்டாயம் பொருத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அவ்வாறான இடங்களில் இரவில் சமிஞ்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதும் அவை சரியாக ஒளிர்வதில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனவே இரவில் ஒளிராத நிலையில் காணப்படும் சமிக்ஞை விளக்குகளை உடனடியாக இனங்கண்டு அவற்றை ஒளிரச் செய்து பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. (த-17)

## விசர்நோய் தடுப்பு பணிகள் தீவிரம்



யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாநகர சபைப் பகுதியில் விலங்கு விசர்நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது யாழ். கரையோரப் பிரதேசங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் கட்டம் கட்டமாக இடம்பெற்று வருகின்றன.

ஏற்கனவே கொழும்புத்துறைப் பிரதேசத்தில் 800 க்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இந்த ஏ.ஆர்.வி தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

இதனைவிட குருநகர் பிரதேசத்தைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு இந்த விலங்கு விசர்நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று புதன்கிழமை சின்ன ஆஸ்பத்திரி வளாகத்தில் வைத்து நூற்றுக்கும் மேற்பட்ட நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. (த-17)

## சவச்சாலை நிர்வாகத்திடம் ஏப்ரல் 15 இல் கையளிப்பு

தென்மராட்சி, மார்ச் 28

சாவகச்சேரி வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சவச்சாலை கட்டடம் ஏப்ரல் 15 ஆம்திகதி வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் சவச்சாலைக்கு ஐந்து குளிரூட்டிகள் வழங்கப்பட்ட பின்னர் செயற்படுத்தப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சவச்சாலைக்கான கட்டட வேலைகள் கட்டடத் திணைக்

சவச்சாலைக்கு ஐந்து குளிரூட்டிகள் வழங்கப்பட்ட பின்னர் செயற்படுத்தப்படும்

களத்தின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இரு பஸ் தரிப்பு நிலையங்கள் கைதடியில் புதிதாக அமையும்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

கைதடி பிரதேச மக்களின் நலன்கருதி பிரதான வீதியில் இரண்டு பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கைதடி முதியோர் இல்லத்துக்கு அருகிலும் மற்றும் நவீல்ட் பாடசாலைக்குத் திரும்பும் பிரதான வீதியோரத்திலும் குறித்த 2 பஸ்தரிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

இரண்டு பஸ் தரிப்பு நிலையங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் மேற்படி பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, கைதடிப் பகுதியில் முதியோர் இல்லம், நவீல்ட் பாடசாலை, விழிப்புலனற்றோர் சங்கம் போன்றவற்றில் தங்கியிருப்போரின் போக்குவரத்துக் கருதி பஸ் தரிப்பிடம் ஒன்று அமைத்துத் தருமாறு தாம் பல தடவைகள் கோரிக்கை விடுத்ததாக யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் வி.கனகசபை தெரிவித்தார். (வ-17)

## இலவச வைத்திய முகாமில் 78 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள்

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து நெல்லியடி லயன்ஸ் கழகம் நடத்திய இலவச வைத்திய முகாமில் 78 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நெல்லியடி லயன்ஸ் கழகம் நடத்திய இவ் வைத்திய முகாமில் பொது வைத்தியத்துக்கு 74 பேரும், தொற்றாத நோய்க்கு 6 பேரும் சிகிச்சை பெற்றனர். 125 பேருக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களில் 78 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ரி. யோகேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி முகா

வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ரி. யோகேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி முகாமில் வைத்தியர்களான லயன் எஸ். சந்தோஸ், வி.உமாபதி சிவம், எஸ்.எஸ். அருளானந்தன் ஆகியோர் வைத்திய சேவைகளை மேற்கொண்டனர்.

மில் வைத்தியர்களான லயன் எஸ். சந்தோஸ், வி.உமாபதி சிவம், எஸ்.எஸ். அருளானந்தன் ஆகியோர் வைத்திய சேவைகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் எஸ்.சற்குணதேவனும் கலந்து கொண்டார். (வ-8)

## காசநோய் விழிப்புணர்வு குருநகரில் நிகழ்வுகள்



யாழ்ப்பாணம்,மார்ச் 28

யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினரால் உலக காசநோய் வாரத்தை முன்னிட்டு குருநகர் பிரதேசத்தில் காசநோய்க்கான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள் ,பொது நிறுவனங்கள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் போன்றவற்றில் காசநோய்க்கான சிறப்பு விழிப்புணர்வு கருத்தரங்குகள் மற்றும் கருத்துரைகள் நடத்தப்படுவதாக மாநகராட்சி மன்றத்தில் குருநகர் பிரதேசத்துக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.ராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருநகர் பகுதியில் காசநோய்க்கான தாக்கம் எதுவும் இல்லை. எனினும் மக்கள் மத்தியில் அதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் நெருக்கமான மக்கள் குடியிருப்புகள் உள்ளதால் இந்த நோயின் தாக்கத்தை முன்கூட்டியே தடுக்கும் முகமாகவே விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை குருநகர் சின்ன ஆஸ்பத்திரி சிகிச்சை நிலையத்தில் நேற்று இடம் பெற்ற காசநோய் விழிப்புணர்வு கருத்தரங்கில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

சுகாதாரப் பரிசோதகர் கே.ராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் குடும்பநல உதவியாளர்களும் கலந்து கொண்டனர். (வ-17)

## அறநெறிப் பாடசாலையில் மாணவர்கள் ஆர்வம்

50 மாணவர்கள் இணைந்து கற்று வருகின்றனர்.

வடமராட்சி, மார்ச் 28

புலோலி, புற்றளை சித்தி விநாயகர் கோயில் பரிபாலன சபையால் ஆரம்பிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலையில் 50 மாணவர்கள் இணைந்து கற்று வருகின்றனர்.

இந்தப் பாடசாலையின் ஆரம்ப விழா இளைப்பாறிய ஹாட்லிக் கல்லூரி பிரதி அதிபர், எம்.ராஜஸ்காந்தன் தலைமையில் நடைபெற்ற போது பரிபாலன சபைத் தலைவர் டாக்டர் எஸ்.கணேசலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

முன்பள்ளிப் பாடசாலைக் கட்டடத்தில் இயங்கி வரும் அறநெறிப் பாடசாலைக்கு பொறுப்பாசிரியராக இளைப்பாறிய ஆசிரியர் க.தர்மகுலசிங்கம் பணியாற்றி வருகின்றார். (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்காக ஆடை அணிந்து வருமாறு ஹிருணிகாவுக்கு நீதிபதி ஆலோசனை



கொழும்பு,மார்ச் 28

நாகரிகமான ஆடைகளை ஒழுங்காக அணிந்து வருமாறு கொல்லப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மகளான ஹிருணிகாவுக்கு நீதிவான் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதிவான் பிரகர்ஷ ரணசிங்க இந்த அறிவுறுத்தலை நேற்றுப் புதன்கிழமை வழங்கியுள்ளார்.

பொரளையிலுள்ள வர்த்தக நிறுவன உரிமையாளரொருவரை மிரட்டித் தாக்கினார் என்ற குற்றசாட்டுத் தொடர்பில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஹிருணிகா முன்னிலையானார்.

இதன்போதே மேலதிக நீதிவான் இந்த ஆலோசனையை வழங்கினார். இளஞ் சிவப்பு நிற குர்தா மற்றும் காற்சட்டை அணிந்து நேற்றைய வழக்கு விசாரணைக்காக ஹிருணிகா முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, குறித்த வர்த்தகரைப் பய முறுத்தித் தாக்கியதாகக் கூறப்படும் ஹிருணிகா மற்றும் நால்வர் மீதான வழக்கு நீதிவானினால் இணக்கப்பட்டுக்கு அனுப்பப்பட்டது.

முறைப்பாட்டாளர் இந்தப் பிரச்சினையை இணக்க முறையில் தீர்க்க முடியும் எனக் கூறியதாகப் பிரதிவாதிகளின் வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

ஆனால் பாதிப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையான வழக்குரைஞர் அதனை மறுத்தார். ஆயினும் சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு முறைப்பாட்டாளரான தம்மிக்க செனவிரத்னவிடம் மன்னிப்பு கேட்டால் மாத்திரமே இணக்க வழித் தீர்வைப் பற்றிக் கவனத்தில் எடுக்க முடியும் என நீதிவான் கூறினார்.

அத்துடன் சந்தேக நபர்களைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், அவர்கள் இணக்க சபைக்குப் போக வேண்டும் எனவும் ஜூலை 31ஆம் திகதி இணக்க சபையின் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (த)

## பொதுநலவாய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதற்குப் பதிலளித்த முதல்வர் ரங்கசாமி, பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கெடுக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி பிரமதருக்கு கடிதம் எழுதவுள்ளதாகத் தெரிவித்தார். (த-5)

## வடக்கில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போது இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக நலத்திட்டங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன்பின்னர் ''ஹலோரஸ்ட்'' நிறுவனத்தால் கதிரிப்பாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகளை இவர்கள் நேரடியாகப் பார்வையிட்டனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபரை அவர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிந்த போதும் அது திடீரென இரத்துச் செய்யப்பட்டது. வடமாகாண் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியை இந்தக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கிய ஆளுநர் வடமாகாணம் மிகப்பெரிய அளவிலான அபிவிருத்தியை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வர்த்தகர் சமூகத்தினரையும் இந்தக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர். இறுதியாக வடக்கில் பணியாற்றும் ஐ.நா.முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர்.

இதன்போது வடபகுதி சிவில் சமூகம் எதிர்நோக்குகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள், அழுத்தங்கள் தொடர்பாகவும் ஐ.நா. முகவர் அமைப்புக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (த-5)

## மாணவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தமிழகத் தலைவர் ஞானதேசிகன் தலைமையில் அந்த அலுவலகத்தில் நேற்றுக் கூட்டம் இடம்பெறவிருந்தது.

இதற்காக அந்தப் பகுதிகளில் காங்கிரஸ் கட்சியாளரின் ''கட் அவுட்'' பனர்கள் என்பன வைக்கப்பட்டிருந்தன. இதனை திருச்சி சட்ட மற்றும் கலைக் கல்லூரி மாணவர்கள் கிழித்தெறிந்து அடித்து நொருக்கினர்.

இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு காங்கிரஸ் அரசே உறுதியாக இருந்ததாகத் தெரிவித்தே மாணவர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் இந்த நடவடிக்கையில் ஆத்திரமடைந்த காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள், மாணவர்கள் மீது தடிகள், பொல்லுகள் கொண்டு திடீரெனத் தாக்குதல் நடத்தினர்.

இதனால் நிலைகுலைந்த மாணவர்கள் சிறிது நேரத்திலேயே திரும்பித் தாக்கினர். இதனால் இரு தரப்பினரும் மோதிக்கொண்டனர். சிறிது நேரத்தில் அங்கு வந்த பொலிஸார் நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

காங்கிரஸ் கட்சியினரின் தாக்குதலில் 4 மாணவர்கள் காயமடைந்ததுடன், மாணவர்களின் பதில் தாக்குதலில் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர் ஒருவரும் காயமடைந்தார்.

### மாணவர்களின் முற்றுகைப் போராட்டம்

மத்திய அரசின் அலுவலகங்களை முற்றுகையிடப் போவதாக எச்சரித்திருந்த தமிழக மாணவர் கூட்டமைப்பினர் நேற்று அதனைச் செயலில் காட்டினர்.

சென்னையிலுள்ள அகில இந்திய வானொலி நிலையத்தை நேற்றுக்காலை நூற்றுக் கணக்கான மாணவர்கள் முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

வானொலி நிலையத்துக்கு எதிரேயுள்ள வீதியை மறித்துப் போராட்டம் நடத்தினர். இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒப்பாரி வைத்து அவரின் உருவப் பொம்மையை அவர்கள் எரித்தனர்.

இதன் பின்னர் மாணவர்கள் வானொலி நிலையத்தை முற்றுகையிட முயன்றபோது பொலிஸார் தடுத்தனர். இதனால் பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் முறுகல் தோன்றியது.

பின்னர் நூற்றுக்கணக்கான மாணவர்களை பொலிஸார் கைது செய்துகொண்டு சென்றனர். (த-5)

## விரைவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கண்டித்து இங்குள்ள மாணவ மாணவியர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவர்களின் போராட்டம் ஒட்டுமொத்த தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக உள்ளது. மாணவ மாணவியரின் ஒட்டுமொத்தப் போராட்டம் அரசியல் கலப்பற்றதாக , இலங்கைத்தமிழர் நலனை மாத்திரமே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த உணர்வு பூர்வமான போராட்டங்கள், கவனவீர்ப்புகள் - தமிழகத்தில் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற போதும், இலங்கை அரசு தமிழர்களைத் தொடர்ந்தும் இரண்டாம் தர குடிமக்களாகவே நடத்தி வருகின்றது.

சொந்த நாட்டிலேயே இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இது மட்டுமல்லாமல் ஈழத் தமிழர்கள் வசிக்கின்ற பகுதிகளில் சிங்களவர்களை இலங்கை அரசு குடியமர்த்தி வருகின்றது. தமிழர் வழிபாட்டுத் தலங்கள் அகற்றப்படுகின்றன. மொத்தத்தில் இலங்கையில் அரசு ஓர் இனவெறி தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது.

இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய மத்திய அரசு, தமிழக மக்களின் உணர்வுகளுக்கு- தமிழ்நாட்டு அரசின் கோரிக்கைக்கு சற்றும் மதிப்பளிக்காமல் பாராமுகமாக இருந்து வருகின்றது. இது எமக்கு மிகுந்த வருத்தத்தையளிக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில் ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளை இந்திய மத்திய அரசுக்கு மீண்டும் எடுத்துரைக்கும் வகையில் தனித் தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்மொழிகின்றேன்-என்றார்.

இதனையடுத்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. எமது கோரிக்கைகளை வென்றெடுக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று தெரிவித்த முதல்வர் செல்வி ஜெயலலிதா, ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதால் தமிழக மாணவர்கள் போராட்டங்களைக் கைவிட்டுப் படிப்புக்குத் திரும்ப வேண்டும்

மேலும் கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இதே சட்ட சபையில், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தை இன்னமும் மத்திய அரசு நடைமுறைப்படுத்தவில்லை.

இதற்காக நாம் தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்காமல் இருக்க முடியாது. சென்னையில் இடம்பெறும் ஐ.பி.எல் போட்டிகளில் இலங்கை வீரர்கள் யாரும் பங்கெடுக்கக் கூடாது என்று பிரதமருக்கு நேற்று (நேற்று முன்தினம்) வலியுறுத்தியிருந்தேன். இதைப் போலத்தான் இந்தத் தீர்மானங்கள் வெற்றி பெறும் என்றும் அவர் கூறினார்.

அவர் தனது உரையில் 2009 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த தி.மு.க அரசு தமிழர்களை காக்கத் தவறிவிட்டதாகவும் கூறினார்.

உடனடியாக எதிர்ப்பு வெளியிட்ட தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். இதனால் சபாநாயகரின் உத்தரவின் பிரகாரம் தி.மு.க சட்ட உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

(த-5)

## தமிழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

லுள்ள முஸ்லிம்களுக்கு நேரடியாகவே எதிர்ப்புத் தெரிவிக்கும் பொதுபலசேனா அமைப்பின் காரியாலயத்தை அரச உயர் மட்ட அதிகாரியொருவர் திறந்துவைத்து அவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயும் மாநாடொன்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையில், தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்கப் பாட்டுக்குமான அமைச்சில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில், சிரேஷ்ட அமைச்சரான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டி.யூ.குணசேகர ஆகியோரும், மத குருமார்களும், புத்திஜீவிகள் ஆகியோரும் கலந்து கெண்டனர்.

நாட்டில் இயங்குகின்ற எந்த அமைப்புகளையும், குழுக்களையும் தடைசெய்ய முடியாது. இருப்பினும், நாட்டில் பிரிவினைவாதத் தீயை உருவாக்கும் வகையில் செயற்படும் குழுக்களது நடவடிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில், இந்த மாநாட்டில் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமைச்சரவையில் சமர்ப்பிக்க உள்ளோம்.

அத்துடன், [illegible] தலைவர்களுக்கு நாட்டின் தற்போதைய நிலை குறித்து தெளிவுபடுத்துவதுடன், நாட்டு மக்களைத் தெளிவுபடுத்தும் முகமாக எதிர்வரும் சிங்கள - தமிழ்ப் புத்தாண்டு முடிந்தவுடன் நாடளாவிய ரீதியில் மாபெரும் மாநாடொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

நாட்டில் இயங்குகின்ற எந்த அமைப்புகளையும் தடைசெய்ய முடியாது. இருப்பினும், இனங்களுக்கிடையில் பிரிவினையைத் தோற்றுவிக்கும் வகையில் அந்தக் குழுக்கள் செயற்படுமாயின் அவற்றுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுப்போம்.

தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் - என்று தெரிவித்தார் அமைச்சர் வாசு.

(த-சி)

## வரலாறு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மானம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. அதற்கு வரலாறு பொன் மகுடம் சூட்டும் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ பாராட்டு தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

துன்ப இருளில் துயரத்தில் பரிதவிக்கும் ஈழத்தமிழருக்கு, சுதந்திரத் தமிழ் ஈழம் ஒன்றுதான் ஒரே தீர்வு ஆகும் என்பதால் 1976 மே 14 இல் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தலைமையில் ஈழத்தமிழர்கள் அனைவரும் கூடி ஒருங்கிணைந்து, சுதந்திரத் தமிழ் ஈழத்துக்காகச் செய்த பிரகடனத்தின் வழியிலும், பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் வீரம் செறிந்த போர் நடத்தி, உன்னதமான உயிர்த் தியாகங்கள் செய்து, கட்டி எழுப்பிய தமிழ் ஈழத்தை, சிங்கள அரசு சிதைக்க முனைந்த போதும், அதை நிர்மாணிக்கின்ற விதத்தில், தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி இருக்கின்ற தீர்மானத்துக்கு வரலாறு பொன் மகுடம் சூட்டும்.

சுதந்திரத் தமிழ் ஈழம் மலரத்தான் போகிறது. இதே தீர்மானத்தை, இந்திய நாடாளுமன்றமும் நிறைவேற்றும் நாள் வரும். அனைத்து உலகம், அதைச் செயற்படுத்தும் நாளும் வந்தே தீரும். - இப்படி வைகோ கூறியுள்ளார்.

## தனித்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வேண்டும். இலங்கை இறுதிப்போரில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்த சுதந்திரமான, நியாயமான சர்வதேச விசாரணை நடத்த வேண்டும்.

இந்த விசாரணையின் அடிப்படையில் போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பாக நிறுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனை கருத்தில்கொண்டு ''தனி ஈழம்'' குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும், இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானத்தைக் கொண்டுவரவும் நட வடிக்கை எடுக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட தீர்மானங்களை நிறை வேற்றுமாறு தமிழ்நாடு சட்டசபை இந்திய அரசை வலியுறுத்துகின்றது. என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானங்களை இந்தச் சபை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டும்-என்றார்.

இதனையடுத்து சபையில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (த-5)

## சினிமா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பவரை ஓட்டுமடம் சந்தியினூடாகத் துரத்திச் சென்றனர். யாழ்.ஐந்து சந்தியில் வைத்து நவாஸ் மீது அசிட் மற்றும் கழிவு ஓயில் என்பவற்றை ஊற்றினர். தொடர்ந்து தாம் வைத்திருந்த கத்தி, வாள்களினால் நவாஸ் மீது தாறுமாறாக வெட்டினர். அவர் கீழே விழுந்த போது வலது கையில் வாளால் வெட்டினர். மணிக்கட்டுடன் கை துண்டாகியது. இரத்தம் பீறிட்டு வீதியை நனைத்தது.

உடனடியாக வாகனம் ஒன்றில் மயங்கிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றோம். இரு தரப்பினருக்குமிடையே ஏற்கனவே முரண்பாடு இருந்து வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது- என்றார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நவாஸ் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். செயற்கைச் சுவாசம் கொடுத்து அவரது உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள் போராடிய போதும் சிகிச்சை பயனின்றி சில மணிநேரத்தில் அவர் உயிரிழந்தார். சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளோம். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## விடுதலைப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டால், தமிழகத்தில் மாணவர்களே விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடங்கி, தனி ஈழம் அமைவதற்கான போராட்டத்தை முன்னெடுப்பார்கள்'' என்றார்.

இதனிடையே இப்பேரணி தெப்பக்குளத்தில் முடிவடைய உள்ள நிலையில், அந்த பகுதியில் காங்கிரஸ் அலுவலகம் இருப்பதால், மாணவர்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தெப்பக்குளம் பகுதியில் பொலிஸ் படை குவிக்கப்பட்டுள்ளது. (ங)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

தலைமையகம்:
மின் அஞ்சல்
செய்தி :
news@uthayan.com
கருத்து:
comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com




## தமிழகத்தின் இன்றைய எழுச்சிக்கு வித்திட்டது மத்திய அரசல்லவே

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக நாட்டில் அசம்பாவிதங்கள்-தாக்குதல்கள்-வெடித்தால் அதற்கு இந்திய மத்திய அரசே பொறுப்பு ஏற்க வேண்டும்.

இறைமையுள்ள நாடு எமது இலங்கை. அதனைத் தமது தலையாட்டிப் பொம்மையாக்குவதற்கு தமிழ் நாடு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எம்மால் ஏற்றுக்கொள்ள இயலாது; அனுமதிக்கவும் முடியாது.

மேற்கண்டவாறு அக்மீமன தயாரத்தின தேரர் கருத்து வெளியிட்டிருக்கிறார். இவர் ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர்; இப்போது சிங்கள ராவய (குரல்) என்ற அமைப்பின் தலைவராக விளங்குகிறார்.

தமிழ் நாட்டுக்குச் செல்லும் இலங்கை பௌத்த பிக்குகள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இலங்கையில் இருந்து சிங்கள மக்கள் எவரும் அங்கு வரக்கூடாது எனவும் எச்சரிக்கை-பயமுறுத்தல் விடப்படுகிறது.

இலங்கைக்கு எதிராகத் தமிழ் நாட்டில் எழுப்பப்படும் எதிர்ப்புக்களால் இலங்கை-இந்திய உறவில் பெரும் பாதிப்பு உண்டாகும். அதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. எமது நாடு, தனக்கென இறைமைகொண்டது. எமக்கு ஏற்றவகையிலேயே நாம் இயங்கமுடியும்; இயங்கவேண்டும்.

ஆனால், தனக்குக் கட்டுப்பட்டு தலையாட்டிப் பொம்மையாக எம்மை மாற்றத் தமிழகம் முனைகிறது. இதனை எவராலும் ஏற்க முடியாது-என்றும் தேரர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிராகத் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவும் திட்டமிடப்பட்ட சூழ்ச்சிகளே. இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே தமிழகத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அவற்றைத் தடுத்து நிறுத்த இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகரா தெரிவித்துள்ளார்.

சிங்களத் தேசியத்தின் காப்பாளர்களாகக் கருதப்படும் தேரர்கள் இருவரும் தமது நிலை நின்று கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

தமிழகத்தில் எழுந்துள்ள சூழ்நிலை குறித்து தமது நிலை நின்று கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். அவை தம் நிலை கருதியவை. அவ்வளவே.

தமிழ் நாட்டில் ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெற்றுவரும் சம்பவங்களே இலங்கையில் கடும்போக்கு அமைப்புக்களைச் சீற்றமடைய வைத்துள்ளன. முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டு வரும் பொதுபலசேனா, சிங்கள ராவய ஆகியவற்றின் பார்வை தற்பொழுது தமிழர்கள் பக்கம் திரும்புகிறது. அவர்களின் இலக்கு ஒரே சமயத்தில் ஈரினங்களுமாகவும் இருக்கலாம். இலங்கையில் பிற இன, மத அடையாளங்களை அழித்து பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதே அவர்களது நோக்கம்.

இலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் இனவாத நடவடிக்கைகள் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உதவப் போவதில்லை. நாட்டின் இன்றைய நிலைக்குக் கடந்த கால இன வன்முறைகளே காரணம். 1956இல் கல்லோயாக் கலவரம், 1958 தமிழர்கள் மீதான இனக்கலவரம், 1977 பொதுத் தேர்தலையடுத்து இடம்பெற்ற கலவரம், 1983 கலவரம் என்று 1948 சுதந்திரத்துக்குப் பின்னர் இந்த நாடு இன வன்முறைகளால் பாதிக்கப்பட்டது.

1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் காரணமாக உருவான இனமுறுகலை அடுத்து 1958 மே மாதம் இடம்பெற்ற கலவரத்தில் சுமார் 300 தமிழர்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று பதிவுகள் தெரிவிக்கின்றன. இதனைவிட எண்ணிக்கை அதிகமாகவே இருக்கும் என நம்பலாம். 1983 ஜூலைக் கலவரத்தில் மூவாயிரம் தமிழர் வரை கொல்லப்பட்டிருக்கலாம்.

83 கலவரத்துக்குப் பின் சுமார் 30 வருடங்கள் கழிந்த நிலையில் மற்றும் ஒரு கலவரத்துக்குத் தூபமிடப்படுகிறது. இனவாதிகளைத் தனது அமைச்சரவைக்குள் வைத்திருக்கும் ராஜபக்ஷ அரசு இனவாதம் பேசும் கடும் போக்காளர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

கடும் போக்காளர்களை அரசு உசுப்பி விடுகிறதோ என்று கொள்ளுமளவுக்கும் பல சந்தர்ப்பங்களில் கருத்துக்கள் வெளிவருவது வழமையாகிவிட்டது.

இனவாதம் பேசுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழக எதிர்ப்பின் எதிரொலியாக இலங்கையில் தமிழர்கள் தாக்கப்பட்டால் அதற்கு இந்தியா பொறுப்பல்ல. இலங்கை அரசுதான் பொறுப்பு. என்ற நிலையே யதார்த்தமாக உருவெடுக்கும்.

இலங்கையில் தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்கியிருப்பின் இத்தகைய நிலைமை உடையவித்து இருக்காது என்பதனை சிங்களப் பேரினவாதமும், அரசும் எப்போது உணர்ந்துகொள்ளப் போகின்றன.

விதைநடப்படாமல் முளைவருவதில்லை. தண்ணீர் பாய்ச்சப்படாவிடின் முளையும் கருகிவிடும். இயற்கையின் இவ்விதி நாடுகளுக்கும் அவற்றின் அரசுகளுக்கும் மெத்தப் பொருத்தமானவை.

# விவசாயிகளுக்கான ஓய்வூதியம் ஒன்றரை வருடங்களாக இல்லை

## பெரும் மன விரக்தியில் அவர்கள்

வலி.வடக்கு, மார்ச் 28

கடந்த ஒன்றரை வருடங்களாக விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமையால் ஓய்வூதியம் பெறுவதற்கான நிதிப் பங்களிப்பை அரசுக்குச் செலுத்திய விவசாயிகள் பெரும் துன்பத்துக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நாளாந்தக் கூலிவேலைகளில் ஈடுபடுவர்கள் எனப் பலரும் தமது பணப் பங்களிப்பை செய்திருந்தார்கள்.

இந்த நிலையில் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக குறிப்பிட்ட ஓய்வூதியப் பணம் வழங்கப்படாமல் உள்ளதுடன் அது குறித்த சரியான விளக்கம் எதுவும் விவசாயிகளுக்கு ஓய்வூதியத் திணைக் களத்தினால் வழங்கப்படவுமில்லை.

தமது வயது முதிர்ந்த காலத்தில் ஏதோ ஒரு தொகையையேனும் பெற்று சுய கௌரவத்துடன் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற நம்பிக்கையில் விவசாய ஓய்வூதியத்துக்குப் பணம் செலுத்தியவர்கள் இன்று தாம் செலுத்திய பணத்தை மீளப் பெற முடியாமலும் செலுத்திய பணத்துக்கான ஓய்வூதியத்தைப் பெற முடியாமலும் திண்டாடுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாய அமைப்புக்கள் தமது கோரிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களிலும் தெரிவித்து வருகின்றபோதிலும் இது வரை உரியபயனேதும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-86)

## ஆண்களை விட பெண்கள் இங்கு 5 இலட்சத்தால் அதிகம்

கொழும்பு மார்ச், 28

இலங்கையில் பெண்களின் மொத்த எண்ணிக்கை, மொத்த ஆண்களின் எண்ணிக்கையை விட 5 இலட்சத்து 98 ஆயிரத்தால் அதிகரித்துள்ளது.

பொதுசன மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றின் மூலம் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கமைய ஒட்டுமொத்த சனத்தொகையில் 51.5 வீதமானோர் பெண்களாவர். இலங்கையின் சனத்தொகையில் அதிகளவானோர் பெண்களே என்பது மதிப்பீடொன்றின் மூலம் முதற்தடவையாக 2001 ஆம் ஆண்டு வெளியாகியது.

அந்த மதிப்பீட்டுச் செயற்பாடுகள் முழுமையடைந்திருந்த 18 மாவட்டங்களின் சனத்தொகையில் 50.2 வீதமானோர் பெண்களாவர். ஆயினும் 1981 இலும் அதற்கு முன்னரும் மேற்கொள்ளப்பட்ட பொதுசன மதிப்பீடுகளின் போது ஆண்களின் தொகையே அதிகமாக இருந்து வந்தது. (த-22)

## மது மயக்கத்தில் ரயில் பாதையில் உறங்கியவர் உயிர் பிழைத்தார்

கொழும்பு, மார்ச், 28

மதுபோதையில் ரயில் பாதையின் நடுவே நித்திரையில் ஆழ்ந்திருந்த ஒருவருக்கு மேலாக ரயில் பயணித்தபோதும் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இந்த அதிசயச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கடந்த 17 ஆம் திகதி மாலையில் கொழும்புக் கோட்டையிலிருந்து சிலாபம் நோக்கிப் பயணமான ரயில் நாத்தாண்டியா ரயில் நிலையத்தையும் கடந்து வலஹபிட்டிய ரயில் நிலையத்தை நெருங்கிய வேளையில்தான் அதன் சாரதி ரயில் பாதையின் நடுவே ஒருவர் படுத்திருப்பதைக் கண்டுள்ளார்.

அவரது உயிரைக் காப்பாற்றுவதற்காக உடனடியாகச் செயற்பட்ட சாரதி ரயிலை நிறுத்தும் பொறியை அழுத்திய போதும் தண்டவாளத்தில் படுத்திருந்த அந்த நபரைக் கடந்து சென்றே ரயில் நின்றது.

அதற்கமைய அந்த நபரின் உடல் சிதறியிருக்கும் என அனுமானித்து சாரதி, ரயில் ஊழியர்கள், பயணிகள் ஆகியோர் அந்த நபர் படுத்திருந்த இடத்துக்கு இறங்கி ஓடோடிச் சென்றுள்ளனர்.

கடுகதியல்லாத அந்த ரயில் மெதுவாகவே பயணித்துள்ளது. திடீரென தமக்கு மேலாக ரயில் ஒன்று பயணித்ததால் விழித்துக் கொண்ட அந்த நபர் தம்மைச் சுதாகரித்துக்கொண்டு அசையாது படுத்திருந்துள்ளார். சற்றுத்தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரயிலையும் தன்னை நோக்கி ஓடிவரும் சனக் கூட்டத்தையும் கண்ட அவர் உடனடியாக எழுந்து தள்ளாடியபடியே ஓட்டம் பிடித்துள்ளார்.

அவரைத் துரத்திப் பிடித்து பொலிஸில் ஒப்படைக்கும் முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

(த-22)

## மத்தியஸ்தர் கொடுப்பனவு ஜனவரி முதல் அதிகரிப்பு

வலி.வடக்கு மார்ச், 28

இலங்கை மத்தியஸ்தர் சபைகளில் கடமையாற்றும் மத்தியஸ்தர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்தியஸ்தர் ஆணைக்குழுவின் பதில் செயலரினால் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மத்தியஸ்தர் சபைகள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இந்தச் சபைகள் இயங்குவதன் மூலம் சிறியளவிலான பிணக்குகளைச் சமாதானமான முறையில் தீர்ப்பதற்கு வழி ஏற்பட்டுள்ளது.

மத்தியஸ்தர் சபைகளில் அங்கத்தவர்களாகக் கடமையாற்றுபவர்கள் சேவை நோக்கின் அடிப்படையில் செயற்படுகின்ற போதிலும் மத்தியஸ்தர் ஆணைக்குழுவினால் பிரயாணக் கொடுப்பனவாக ஒரு அங்கத்தவருக்கு இது வரை காலமும் ஒரு அமர்வுக்கு நூறு ரூபா வழங்கப்பட்டு வந்தது.

இந்த ஆண்டு முதல் இந்தக் கொடுப்பனவுகளில் மத்தியஸ்தர் ஆணைக்குழுவினால் மாற்றங்கள் செய்யப்பட்டு ஒரு அமர்வுக்கான கொடுப்பனவு நூறு ரூபாவில் இருந்து நூற்றி ஐம்பது ரூபாவாகவும், தவிசாளர்களுக்கு வருடமொன்றுக்கு எழுதுவினைஞர் கொடுப்பனவாக வழங்கப்பட்ட இரண்டாயிரம் ரூபா, மூவாயிரம் ரூபாவாகவும் மத்தியஸ்தர் கூட்டங்களை நடத்தும் இடங்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு முன்னூற்றி ஐம்பது ரூபாவில் இருந்து ஐநூறு ரூபாவாகவும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்புடைய எழுதுவினைஞர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவு ஐநூறு ரூபாவில் இருந்து எழுநூற்றி ஐம்பது ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கொடுப்பனவுகள் கடந்த ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூல் கண்காட்சி 3 தினங்கள்

கொழும்பு, மார்ச், 28

கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள நூல் கண்காட்சி, நூல் விற்பனை, ஓவியக் கண்காட்சி ஆகியன எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளன.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா, தமிழ்ச் சங்க இலக்கியக் குழுச் செயலாளர் மு.தயாபரன், சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய துணைத் தலைவருமான மு.கதிர்காம நாதன், சங்கத்தின் துணைத் தலைவர் கி.இராஜகுலேந்திரா, சங்கத்தின் நூலகக் குழுச் செயலாளர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் அந்த மூன்று தினங்களிலும் காலையிலும் மாலையிலும் நடைபெறும் நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்குவர்.

கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகளின் மூத்த ஊடகவியலாளர்கள் இந்த நிகழ்வுகளில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சம்.

கண்காட்சியின்போது நூல்களை விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, இணைப்பாளர் அ.எதிர்வீரசிங்கம் ஆகியோர் செய்து வருகின்றனர். (த)

## ஆளுநர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடந்தோறும் வழங்கப்படும் வடமாகாண ஆளுநர் விருதுக்கான 'விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

50 வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்களுக்கே வடமாகாண ஆளுநர்களுக்கான விருதுகள் வருடாந்தம் வழங்கப்படுகின்றன.

இந்த விருதுக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடைய விண்ணப்பதாரிகள் தத்தமது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-400)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி அலுவலர் நியமனம்

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சிப் பிரதேசத்துக்கான காணி உத்தியோகத்தராக, யாழ்.செயலக காணிப் பிரிவின் பணியாற்றிய ந.இராஜரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் பருத்தித் துறை வடமராட்சிப் வடக்கு, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் காணி உத்தியோகத்தராக சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றார். (வ-8)


## வருடாந்த பொங்கல் உற்சவம்

கைதடி, நாவற்குழி தெற்கு, கைதடி, ஸ்ரீ மகா விஷ்ணு ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்

நாளை (29.03.2013) வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு காவடி, பாற்செம்பு வைரவர் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு மகா விஷ்ணு ஆலயத்தைச் சென்றடையும். அபிஷேக ஆராதனையுடன் விசேட மேளக் கச்சேரி இடம்பெறும். தொடர்ந்து இரவு 9 மணிக்கு மடைப்பண்டம் எடுத்தலும் பொங்கலும் இடம்பெற்று அதிகாலை பூசையுடன் நிறைவு பெறும். இரவு நிகழ்வாக இசைக்குழு இடம்பெறும்.

ஆலய பரிபாலன சபையினர்.

(34032) (2.8.7)



## மரண அறிவித்தல்

நேற்றைய உதயனின் 20 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய வல்லிபுரம் நாகராஜா என்பவரின் மரண அறிவித்தலில் சாந்தியின் கணவர் என்பதை சாந்தினியின் கணவர் எனத் திருத்தி வாசிக்கவும்.

(C/7359)


# ஒட்டுவெளியில் படையினர் வசமுள்ள வீடுகளை மீளப் பெற்றுத் தரவும்

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி,மார்ச் 28

தென்மராட்சி கிழக்கு கரம்பகம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒட்டுவெளி கிராமத்தில் படையினர் தங்கியுள்ள சுமார் 25 வீடுகளையும் மீளப் பெற்றுத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போதே மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிராமத்தில் உள்ள பல குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கப்பட்டன. படையினர் தங்கியுள்ள வீடுகளின் அயலில் வீடுகளை அமைத்தவர்கள் அங்கு குடியமர்வதற்கு அச்சம் கொண்டு ஏனைய இடங்களில் வசித்து வருகின்றனர்.

2000 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் அங்குள்ள 25 இற்கும் மேற்பட்ட வீடுகளில் தங்கியுள்ளனர்.

அந்தப் பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டு இரண்டு வருடங்களாகியும் படையினர் அங்கிருந்து வெளியேறவில்லை.

இதனால் தமது குடியிருப்புகளில் மீளக்குடியமர்வதற்கு அச்சம் கொண்ட நிலையில் ஒட்டுவெளியில் உள்ள படைமுகாமை அகற்றி வீடுகளை தம்மிடம் கையளிக்க வேண்டும்.- என்று அவர்கள் கோரியுள்ளனர். (வ-9-5)

## சில்லறைக்கு தட்டுப்பாடு

குருநகர்,மார்ச் 28

யாழ்ப்பாணத்தில் நாணயங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் வர்த்தகர்கள் மிகுதிப்பணத்துக்குப் பதிலாக பொருள்களை வழங்குகின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ். நகரில் இயங்கும் பல சரக்கு மற்றும் புத்தகசாலைகளில் 5 ரூபா 2 ரூபா நாணயங்கள் இல்லாத காரணத்தால் பொருள்கள் கொள்வனவு செய்யவரும் வாடிக்கையாளர்களுக்கு மிகுதி 5 ரூபாவுக்கு பலசரக்குப் பொருள்கள் விற்பனை செய்யும் கடைக்காரர்கள் தீப்பெட்டியையும், புத்தகசாலை உரிமையாளர்கள் அழிறப்பர்களையும் வழங்குகின்றனர்.

இதனால் பொதுமக்கள் வேண்டா வெறுப்பாக அவைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். சில்லறைத் தட்டுப்பாட்டை நீக்க அரசு உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என பொதுமக்கள் தெரிவித்தனர். சில்லறைக்குப் பதிலாக 5 ரூபா, 2 ரூபா தாள் காசுகளை அச்சிட்டு வெளியிட அரசு நடவடிக்கை எடுக்கலாம் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (வ-51)

# மாநகரக் கழிவகற்றல் திருப்திகரமாக இல்லை

## எதிரணி உறுப்பினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 28

யாழ்.கரையோரப் பகுதிகளில் யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் கழிவகற்றும் பணிகள் திருப்தி கரமாக இடம்பெறவில்லை என மாநகரசபையின் எதிரணி உறுப்பினர் பரஞ்சோதி குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கரையோரப் பிரதேசங்களில் யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவகற்றும் பணிகள் சீராக இடம்பெறவில்லை. அவை திருப்திகரமானதாகவும் இல்லை.

இதனால் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கழிவு நீர் வழிந்தோடும் வடிகால்களில் அநேகமானவை தூர்ந்து போன நிலையில் காணப்படுகின்றன. இதனால் கழிவு நீர் வழிந்தோட முடியாதுள்ளது.

இவ்வாறு கால்வாய்களில் கழிவு நீர் தேங்குவதால் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பதோடு சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுள்ளது.

அதனைவிட வடிகால்கள் சீராகத் துப்புரவு செய்யப்படாமையால் துர்நாற்றமும் வீசுகிறது.

கரையோரப் பிரதேசத்தில் கழிவகற்றல், சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் கையாளுமாறு பல தடவைகள் மாநகர சபையைக் கோரிய போதும் உறுதிமொழி வழங்கப்படுகின்றதே தவிர அது நிறைவேற்றப்படவில்லை என்றார். (த-17)

# யாழ். நூலக உசாத்துணைப் பகுதி நிர்வாகத்திடம் நேற்று கையளிப்பு



யாழ்ப்பாணம்,மார்ச் 28

சீன அரசின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். பொதுநூலகத் தின் உசாத்துணைப் பகுதி யாழ். பொதுநூலக நிர்வாகத் திடம் நேற்று கையளிக்கப் பட்டது.

கடந்த வருடம் யாழ். பொது நூலகத்துக்கு வருகைதந்த இலங்கைக்கான சீனத்தூதர், பொது நூலகத்தைப் பார்வையிட்ட பின்னர் நூலகத்தின் புனரமைப்புக்கு உதவி செய்வதாகத் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய சீனாவின் ரயில்வே- 05 நிறுவனம் இந்தப் புனரமைப்புக்கான நிதியுதவியை வழங்கியிருந்தது.

20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட யாழ். பொதுநூலகத்தின் உசாத்துணைப் பகுதி நேற்றைய தினம், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் முதன்நிலை செயலர் ஜிபிங்கினால் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராஜாவிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் உசாத்துணைப் பகுதிக்கு சீனா பெருமளவிலான நூல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07.04.1930

விண்ணில் 07.04.2012

### அமரர் ஆறுமுகம் பத்மநாதன்

### (சோதிடர் - வேலணை)

ஆண்டொன்று மறைந்ததப்பா நீங்கள் எங்களைப் பிரிந்து
நாள்தோறும் தவிக்கின்றோம் உங்களை இழந்து
எமை வாழ வைத்த தெய்வம் நீங்கள் அன்பு அப்பா
சென்றதெங்கே தினம் தோறும் தேடுகின்றோம்

பாசமுடன் பாங்காய் பழகி எமைப்
பரிதவிக்க விட்டுப் பறந்து போனீர்களே மாமா
எம் குழந்தைகள் தாத்தா, தாத்தா என
மழலை மொழி பேசுகின்றார்கள்
நாம் சுவரில் தொங்கும் தங்கள் படத்தைக் காட்டுகின்றோம்.

மறு பிறப்பென்பது மானிட உண்மையென்றால்
நாமெல்லாம் இறைவனிடம் வேண்டுவது ஒன்றே தான்
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் மறுபடியும்
எம்முடனே வந்து பிறந்து வாழ்ந்திடுங்கள்

ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
பாசமுடன் நீங்கள் பழகிய பசுமையான நினைவுகள்
பகலிரவாய் எம் மனதை வாட்டி
பாறாங்கல்லாய் கனக்கிறதே.

எங்கள் வாழ்வில் என்றும் உங்கள் ஆசீர்வாதம்
வேண்டிப் பிரார்த்திக்கும்

மகள்மார், மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.
இல.368, திருநகர், மல்லாவி,யோகபுரம்.

(C/7219)



## மரண அறிவித்தல்

### செபமாலை பர்னாந்து (துரைமணி)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை பர்னாந்து (துரைமணி) நேற்று (27.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை-அடைக்கலமுத்து தம்பதியரின் அன்பு மகனும், பிறிச்சிற்ரம்மாவின் அன்புக் கணவரும், ராசசிங்கம், யேசுதாசன், ராணி, ராசு, தங்கராணி (J.P), காலஞ்சென்ற அமலன் மற்றும் பவளராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவி, வசந்தி (கனடா), சாந்தி, சுகந்தி, செல்வன், செல்வராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெறோம், விஜயன் (கனடா), சின்னவன், காலஞ்சென்ற சங்கரி மற்றும் சேகர், வெள்ளையம்மா, டயஸ் ஆகியோரின் மாமனும், கொலின்டன் (லண்டன்), விதுஷன் (கனடா), கொண்சலிற்ரா, நிதர்ஷன், நிறோயன், றொசின்ரன், ஜெதுர்ஷா, சதுர்ஷா, சதுர்சன், மிதுஷா, தர்ஷா, தர்ஷிகா, பதுஷன், விதுஷா, யதுர்சன், கம்சா, டிதுர்சன், டிசானி, டிதுர்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.03.2013) வியாழக் கிழமை மு.ப. 9.00 மணியளவில் மண்டைதீவு, புனித பேதுரு வானவர் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம், மண்டைதீவு.

தொடர்புகளுக்கு:
வசந்தி விஜயன் (கனடா-0019052818627)
கொலின்டன் (லண்டன்-00447401515515)
டயஸ் - (0214911038)

தகவல்:
குடும்பத்தினர்.

(34933)(10.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளின் பெறுமதிக்கே வரி; இனி பளை சந்தையில் அறவீடு

பளை, மார்ச் 28

பளைப் பொதுச் சந்தையில் வியாபாரிகளிடம் இருந்து பொருள்களின் பெறுமதிக்கு ஏற்றதாக வரிப்பணத்தை அறவிடுவதற்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் செயலாளரான எஸ்.சிவப்பிரகாசம்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பளைப் பொதுச் சந்தையில் குத்தகைக்காரர்கள் அதிகளவு வரிப்பணத்தை அறவிடுவதாக வியாபாரிகள் முறைப்பாடு தெரிவித்துள்ளமை தொடர்பாக பிரதேச சபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**பிரதேச சபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

மேலும் பளைப் பொதுச் சந்தையில் மீன் வியாபாரிகளிடம் தினமும் அதிகளவு பணத்தை குத்தகைக்காரர் அறவிட்டு வருவதாகவும் மீன் வியாபாரிகளால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகவும் குத்தகைக்காரர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மீனின் பெறுமதி மற்றும் விற்பனை நேரத்துக்கு ஏற்றவாறு வரிப் பணத்தை அறவிடவுள்ளதாக குத்தகைக்காரர் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையினர் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் தனியார் ஒருவரிடம் பளைச் சந்தையைக் குத்தகைக்கு வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-14)

# கணக்காளர் நியமின்மையால் நிதி நடவடிக்கைகளில் தாமதம்

**விசனம் தெரிவிக்கின்றார் பூநகரி தவிசாளர்**

பூநகரி, மார்ச் 28

பூநகரிப் பிரதேச சபையில் கணக்காளர் பதவிக்கு நிரந்தரமாக நியமனம் வழங்கப்படாமையால் சபையின் நிதி தொடர்பான நடவடிக்கைகள் தாமதமடைவதாக பிரதேச சபைத் தவிசாளர் பொ.ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

பூநகரிப் பிரதேச சபையில் கடமையாற்றி வந்த கணக்காளர் பருத்தித்துறை பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுவிட்டார். தற்போது இந்தக் கணக்காளர் பதவி வெற்றிடமாகவே உள்ளது. இதன் காரணமாக வரவு, செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைக் கையாள்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன.

பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுப் பட்டியல் கடந்த 18 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கவேண்டும். ஆனால் இதுவரை இந்தப் பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதன் காரணமாக பிரதேச சபை உத்தியோகத்தர்களின் சம்பளக் கொடுப்பனவு தாமதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனைவிட ஏற்கனவே வரவு, செலவுத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-14)

## ஓமந்தையில் மின்விளக்குகள்

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடிப் பகுதியில் மின் விளக்குகளைப் பொருத்துவதற்கான நடவடிக்கையில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

வவுனியா ஓமந்தைச் சாவடி ஊடாகத் தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் சென்று வருகின்றனர். பயணிகள் இராணுவத்தினரின் பரிசோதனைகளுக்கென வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு மீண்டும் ஏற்றிவிடப்படும் நிலை தற்போது காணப்படுகின்றது.

ஆனால் போதிய வெளிச்சம் இல்லாததால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினர் ஓமந்தை சோதனைச் சாவடியில் 15க்கும் மேற்பட்ட மின் விளக்குகளைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது. (க-402)

## நூலகம் திறந்து வைப்பு

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மேற்குப் பகுதியில் நூலகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இன்று முற்பகல் 11 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற வுள்ளது.

அமரர்களான கனகசபை, ஐயாத்தைப் பிள்ளை ஞாபகார்த்தமாக இந்த நூலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. (க-18)

**ஆள்கள் தேவை**

காகிதாதிகள் விற்பனை ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள், சிட்டை எழுதுநர், சாரதி (A.D.லைசென்ஸ் உள்ளவர்) ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முழு விபரங்களுடன் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி.
விளம்பர இல.4447
மே/பா நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவேற் லிமிட்டெட்
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ப/7358) (5 6 7)

# நன்னீர் மீன் வளர்ப்பில் தாலிக்குளம் ஆர்வம்

வவுனியா, மார்ச் 28

வவுனியா தாலிக்குளம் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் நன்னீர் மீன் வளர்ப்பில் அதிக ஆர்வம் செலுத்தி வருவதைக் காண முடிகின்றது. இவர்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் ஊடாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் கடனுதவிகளும் வழங்கப்பட்டன.

தாம் நன்னீர் மீன் வளர்ப்பில் ஈடுபடுவதற்கு இவை பேருதவியாக அமைந்ததாக இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். தமது காணிகளின் சிறிய இடப்பரப்பில் இதனை மேற்கொள்வதாகக் கூறும் இவர்கள் வீட்டில் இருந்தவாறு தம்மால் வருமானத்தை ஈட்ட முடிவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மீன்களுடன் இறால்களையும் இவர்கள் வளர்ப்பதாகத் தெரிய வந்துள்ளது. மேலும் நுகர்வோருக்குத் தரமான மீன்களைத் தாம் வழங்குவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக வெளிக்கள உத்தியோகத்தரான பொ.கணேசமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்; கொத்தணி முறையில் உருவாக்கப்பட்ட குழுக்களைச் சேர்ந்த மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருவதுடன் அதிக வருமானத்தைப் பெறுவதாகத் தெரிவித்தார். (க-எ)

**சாவகச்சேரி நகராட்சி மன்றம்**
**முக்கிய அறிவித்தல்**
**கண்ணாடிப்பிட்டி இந்து மயான பாவனை**

எதிர்வரும் 01.04.2013 ஆம் திகதி தொடக்கம் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் இறந்த உடல்களை அடக்கம்/தகனம் செய்பவர்கள் சாவகச்சேரி நகராட்சிமன்றத்தில் விண்ணப்ப படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி அதற்கான கட்டணமான ரூபா 500.00 செலுத்தி அனுமதியைப் பெற்ற பின்பே அடக்கம்/ தகன கிரியைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
இம்ரியோல் தேவசகாயம்பிள்ளை
நகராட்சிமன்றம் - சாவகச்சேரி.
(சி/9236)(6.7.45)

# பழைய முறிகண்டி மணல் வெளியிடங்களுக்கு கடத்தல்

அக்கராயன், மார்ச் 28

துணுக்காய் பழைய முறிகண்டிக் கிராமத்தில் இருந்து தொடர்ந்து வெளி இடங்களுக்கு மணல் கடத்தப்படுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில்; குளத்தினுள் காணப்படும் பட்ட மரங்களைக்கூட வெட்டமுடியாது என துணுக்காய்ப் பிரதேச செயலர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சட்ட விரோதமான முறையில் மணல் மற்றும் மரங்கள் புத்துவெட்டுவான் ஊடாகத் தினமும் எடுத்துச் செல்லப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தமது கிராமத்தில் காணப்படும் மணல் மற்றும் மரங்களைப் பாதுகாக்க வேண்டுமெனவும் இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

**பணியாளர்கள் தேவை**

பருத்தித்துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் தங்குமிட விடுதிக்கு (Guest House) பணியாளர்கள் தேவை. பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 077 260 6684
(34927)(5.6.7)

**மரண அறிவித்தல்**



**இராசையா சபாநாயகம்**

பளவத்தை, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சபாநாயகம் 25.03.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராஜேந்திரம், காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மினிதேவியின் அன்புக் கணவரும், பரஞ்சோதி மதனலீலா, யோகராஜா, ஜெயராஜா, கார்த்திகேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜனார்த்தனன், ஜெகனிவாசன், தனஞ்செயன், சித்தார்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்துமதி, தர்சிகா, சுதர்சனா ஆகியோரின் மாமனும், பாலச்சந்திரராஜன், மதிவதனராஜன், ரவிச்சந்திரராஜன், செந்தில்ராஜன், ரமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் வளவு, 3 ஆம் கட்டை,
கல்வியங்காடு. (34926) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## கைவிடப்பட்ட நிலையில் குடியிருப்பு வீதி

தேவிபுரம் கணேஸ் குடியிருப்பு வீதி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக இங்கு வசிக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இது தொடர்பாகப் பல தடவைகள் முறைப்பாடுகள் உரியவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை எதுவுமே இடம்பெறவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இவ் வீதியிலுள்ள பாலமொன்றில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாகப் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகாததால் 3 கிலோ மீற்றர் தூரத்தைச் சுற்றிச் செல்ல வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-555)

**கடை வாடகைக்கு**

NO.124D, பலாலி வீதியில்
(இலுப்பையடிச் சந்திக்கும்
அம்மன் வீதிக்கும் இடையில்)
அமைந்துள்ள
கடைத்தொகுதியில் ஒரு கடை
வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 5819704

**பணியாளர்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு எழுதுவினைஞர்/ விற்பனைப் பிரதிநிதி உதவியாளர் உடன் தேவை. கொழும்பில் தங்கி நின்று பணிபுரிவதற்கும் பணியாளர்கள் தேவை.
தொடர்பு: 077 260 6684
(34928) (5.6.7)

**அன்னைநாகா பூட்சிற்றி**

**பிறிமா சிக்கின் சுப்பர் மார்க்கற்றின் ஊக்குவிப்பு**

திகதி : 2013 மார்ச் மாதம் 29 தொடக்கம் 30 வரை
இடம் : அன்னை நாகா பூட் சிற்றி
இல.175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
பேரன்பு மிக்க வாடிக்கையாளர்களே வருக! வருக!
என உங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
பிறிமா சிக்கின்காரருடன் உங்கள் நகைச்சுவையைப் பகிர்ந்து கொள்ளுங்கள்! பிறிமா சிக்கினின் சுவையை ருசித்து அனுபவியுங்கள்!
பிறிமா சிக்கின் அனுபவம் மிக்க சமையலாளர்களிடமிருந்து பல சமையல் முறைகளை கற்றுக்கொள்ளுங்கள்!
பிறிமா சிக்கின் கம்பனியால் வழங்கப்படும் விலைமதிப்புள்ள அன்பளிப்பு பொருள்களைப் பெறுவதில் வெற்றி கொள்ளுங்கள்!
வேறு பல அன்பளிப்புக்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்!
Prima Chicken
இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!!!
(C7357)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது அணு உலை ஏப்ரலில் செயற்படும்

## பிரதமர் உறுதி



பல்வேறு எதிர்ப்புகள் எழுந்துள்ள நிலையில், கூடங்குளம் முதல் அணு உலை ஏப்ரல் மாதத்தில் செயற்படத் தொடங்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்ள டர்பன் சென்றுள்ள பிரதமர் மன்மோகன் சிங், நேற்று முன்தினம் இரவு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினைச் சந்தித்துப் பேசும் போது இந்த உறுதி மொழியை அளித்தார். சந்திப்பில் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-

கூடங்குளத்தில் முதலாவது அணு உலை அடுத்த மாதம் முதல் செயற்பட ஆரம்பிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 3 மற்றும் 4 ஆவது அணு உலைகள் தொடர்பாக பல்வேறு அனுமதிகளைப் பெறுவதற்கான பணிகள் நடைபெறுகின்றன. அவைக்ளும் விரைவில் செயற்படத் தொடங்கும்-என்றார். (வ)

# பவளப் பாறைகளின் பாலியல்காட்சி லட்சதீவில் திரண்ட விஞ்ஞானிகள்

டில்லி, மார்ச் 28

லட்சத்தீவில் உள்ள பவளப்பாறைகளில் நடக்கும் பாலியல் காட்சியைக் காண அங்கு பெரு மளவில் விஞ்ஞானிகள் குவிந்திருந்தனர்.

லட்சத்தீவில் உள்ள பவளப் பாறைகளில் படிந்துள்ள கடல் வாழ் விலங்குகள் நேற்று கருத்தரிக்கும் செயலில் இறங்கும் என்று ஏற்கனவே விஞ்ஞானிகள் கூறியிருந்தனர். இது ஒரு அரிய காட்சியாகும், அபூர்வ நிகழ்வாகும். நேற்று முழுவதும் இது நடைபெற்றது. இதைக் காணத்தான் விஞ்ஞானிகள் அங்கு குவிந்திருந்தனர். நீருக் குக் கீழ் பவளப் பாறைகளில் நடைபெறும் இந்த அதிசய நிகழ்வைக் காண விஞ்ஞானிகள் பெரும் ஆர்வம் கொண்டிருந்தனர்.

முட்டைகள், விந்தணுக்கள் வெளியீட்டின் காரணமாக தண்ணீரே இளஞ் சிவப்பு நிறத்திலும் பழுப்பு நிறத்திலும் பச்சை நிறத்திலும் மாறிக் காணப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (வ)

# இலங்கைக் கடற்படையினரை இந்தியா கைதுசெய்ய வேண்டும்

## தமிழக காங்கிரஸ் வலியுறுத்து

சென்னை, மார்ச் 28

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கைக் கடற்படையினரை தமிழக அரசு கைது செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர் ஜான் ஜேக்கப் கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து சட்ட சபையில் அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இத்தாலிக் கடற் படையினர் கேரள மீனவர்கள் இருவரை சுட்டுக்கொன்ற சம்பவத்தில் கேரள அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதேபோல் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற் படை வீரர்கள் தாக்கினால் அவர்களை தமிழக அரசு கைது செய்து, உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# பழம் பெரும் நடிகை சுகுமாரி காலமானார்



பழம்பெரும் திரைப்பட நடிகையான சுகுமாரி (74) நேற்று முன்தினம் சென்னையில் காலமானார். சென்னை தியாகராய நகரில் வசித்து வந்த அவர் சில தினங்களுக்கு முன்னர் தீ விபத்து ஒன்றில் சிக்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் அவரது நெருங்கிய தோழியும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா நேரில் மருத்துவமனைக்குச் சென்று அவரை நலம் விசாரித்திருந்தார். இந்தநிலையில் சிகிச்சை பலன் அளிக்காமல் நேற்று முன்தினம் அவர் காலமானார். அவரது மறைவுக்கு தமிழ், மலையாள திரையுலகினர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

1938ஆம் ஆண்டு நாகர் கோயிலில் பிறந்தவரான சுகுமாரி, பாசமலர், பட்டிக்காடா பட்டணமா, வசந்த மாளிகை உள்ளிட்ட புகழ் பெற்ற தமிழ்த் திரைப்படங்களில் நடித்துள்ளார். நம்ம கிராமம் திரைப்படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக 2011 ஆம் ஆண்டு சிறந்த துணை நடிகை விருது பெற்றுள்ளார்.

தனது 10 வயதிலேயே திரைப்படத்துறையில் காலடி எடுத்துவைத்த சுகுமாரி, 2000 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். இந்திய அரசின் பத்மசிறீ, தேசிய திரைப்பட விருது, கேரள மாநில திரைப்பட விருது என பல்வேறு விருதுகளை பெற்றவர் அவர். நான்கு முறை மாநில விருது பெற்றிருக்கிறார்.

# ஆயுதம் தாருங்கள்! நாமே போராடுவோம்

## நாகை மீனவர்கள் போர்க்கொடி



நாகை, மார்ச் 28

இலங்கைக் கடற்படையிடம் இருந்து மீன வர்களைக் காப்பாற்ற எவ்வளவு தான் போராடியும் ஒரு பலனும் இல்லாத நிலையில், ''ஆயுதம் தாருங்கள்.. நாமே போராடிக் கொள்கிறோம்'' என்று வாழ்வா, சாவா போராட்டத்தில் இறங்கியுள்ளனர் நாகை மீனவர்கள்.

நாகை நம்பியார் நகர் மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் அரிவாளால் வெட்டப்பட்ட சம்பவம் மீனவர்கள் மத்தியில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் விளைவாக மத்திய அரசுக்கு எதிராக தொடர் போராட்டங்களை அறிவித்து, நாடாளுமன்றத் தேர்தல் வரை ஓயப்போவதில்லை என்று போராட்டத்தில் களம் இறங்கியுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி நாகப்பட்டினம் தாலுக்காவில் உள்ள நாகூர், ஆரியநாட்டுத் தெரு, சில்லடி, கல்லார், நம்பியார் நகர், கீச்சாங் குப்பம், அக்கறைப் பேட்டை, சாமந்தான் பேட்டை உள்ளிட்ட 8 மீனவக் கிராமங்களைச் சேர்ந்த சகல மீனவர்களும் ஒன்று திரண்டு ஆலோசனை நடத்தி ஒரு முடிவுக்கு வந்துள்ளனர்.

முதல் கட்டமாக கடந்த 22 ஆம் திகதி நாகப்பட்டினம் தலைமைத் தபால் அலுவலகத்துக்கு எதிரே கூடியவர்கள், மத்திய அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினார். கடந்த 25 ஆம் திகதி ரயில் மறியல், அதற்கு அடுத்து சகல தாலுக்காக்களிலும் போராட்டம் என்று தங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தப்போகின்றனர்.

இதுகுறித்து நாகப்பட்டினம் ஒன்றியக் குழுத் துணைத் தலைவரும் அக்கறைப் பேட்டை பஞ்சாயத் தாருமான திருவளர் செல்வனிடம் பேசினோம்.

அண்டை நாடு, நட்பு நாடு என்று இந்தியா நட்பு பாராட்டும் இலங்கை அரசு தான் தொடர்ந்து எங்களைத் தாக்குகிறது. இரும்பு பைப்பால் அடி, உருட்டுக்கட்டையால் அடி, வலைகள் கிழிப்பு, மண்டியிட வைப்பது, துப்பாக்கிச் சூடு. இதெல்லாம் போய் இப்போது அரிவாள் வெட்டு வரை வந்துவிட்டனர்.

இதைவிடப் பெரிய கொடுமை வேறு ஏதாவது உண்டா? இவ்வாறு ஒரு சம்பவம் நடந்து நான்கு நாள் ஆகிவிட்ட பின்னும் இந்திய அரசாங்கம் இதுகுறித்து ஒரு அறிக்கையாவது வெளி யிட்டதா? நாம் என்ன இந்த நாட்டின் அகதிகளா? எங்கள் பாதுகாப்புக்கு யார் உத்த ரவாதம் தருவது? இதுவரை எல்லை தாண்டிவந்ததால் சுட்டோம் என்று சொன்னார்கள்.

இப்போது வெட்டுப் பட்டவர்கள் சாதாரண பைபர் படகில் எமது எல்லைக் குள்தானே தூண்டில் போட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை ஏன் வெட்டினார்கள்? இந்தக் கொடுமையை மத்திய அரசு ஏன் கண்டிக்கவில்லை? எங்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்யும் வரையிலும் இந்தப் போராட்டங்கள் தொடரும்-என்றனர்.

# ஹோலிப் பண்டிகைக் கொண்டாட்டம் பிரதமர், ஜனாதிபதி, சோனியா வாழ்த்து



ஹோலிப் பண்டிகை நேற்று இந்தியா முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியும் பிரதமர் உள்ளிட்ட தலைவர்களும் வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளனர்.

இந்தியாவின் வட மாநி லங்களிலும், தென் மாநி லங்களின் சில பகுதிகளிலும் ஹோலிப் பண்டிகை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மக்கள் ஒருவர் மீது ஒருவர் வண்ணப் பொடிகளைத் தூவியும், இனிப்புகளை வழங்கியும் ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடினர்.

'இந்தப் பண்டிகையை நாட்டு மக்கள் அனைவரும் சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும் கொண்டாட வாழ்த்துகிறேன்' என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்திருந்தார்.

இதேவேளை பிரதமர் மன்மோகன் சிங் தனது வாழ்த்தில்

''ஹோலிப்பண்டிகை, எமது நாட்டில் வாழும் பல்வேறு கலாசார மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த பண்டிகை அனைவருக்கும் நன்மையை அளிக் கட்டும் என்று தெரிவித்திருந்தார்.

எமது பழமையான பண்டிகைகளில் ஹோலிப் பண்டிகையும் ஒன்று. சமூக, சகோதரத்துவத்தை வளர்க்கும் வகையில் கொண்டாடப்படும் இந்த் ஹோலிப்பண்டிகை தினத்தன்று, அனைவருக்கும் அனைத்து நலன்களும் கிடைக்க வாழ்த்துகிறேன் என்று காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி குறிப்பிட்டிருந்தார். (வ)

# திருநெல்வேலி பஸ் நிலையத்தில் வெடிகுண்டு வீச்சு

சென்னை, மார்ச் 28

திண்டுக்கல் பஸ் நிலையத்தில் நபர் ஒருவரால் வீசப்பட்ட நாட்டு வெடி குண்டால் பரபரப்பு ஏற்பட்டது.

வழக்கமான அமைதியில் இருந்த திண்டுக்கல் பஸ் நிலையம் முன் உள்ள வீதியில் திடீர் என பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது. நபர் ஒருவர் தன் கையில் கொண்டு வந்திருந்த 4 நாட்டு வெடிகுண்டுகளை சற்றும் எதிர்பாராத நேரத்தில் திடீர் என வீதியில் தூக்கி வீசினார். அவை வெடித்துச் சிதறின. பலத்த சப்தம் கேட்டது. இந்தத் திடீர் சம்பவத்தில் அந்தப் பகுதியில் இருந்த சிலர் காயம் அடைந்தனர்.

வெடிகுண்டுகளை வீசி விட்டு அந்த நபர் தப்பியோடினார். பொதுமக்கள் விரட்டிச் சென்று, அந்த நபரைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

# இலங்கைத் தூதரை உடனடியாகக் கைது செய்க

## மன்மோகனுக்கு வைகோ கோரிக்கை

சென்னை, மார்ச் 28

இந்தியாவுக்கு உள்ளே இனபேதத்தைத் தூண்டும் இலங்கைத் தூதர் பிரசாத் கரியவசத்தை,உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கையில் உள்ள 75 சதவீதச் சிங்களவர்களை வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று இந்தியாவுக்கான இலங்கைத்தூதர் பிரசாத் காரியவசம் பொய்யான பிரசாரம் செய்து வருகிறார். தனி ஈழம் கோரி தமிழ் நாட்டில் மாணவர்கள் போராடி வருவதற்கு ஆதரவாக வட மாநிலங்களிலும் மாணவர்கள் போராடி வருகின்றனர்.

இதனை முறியடிக்கும் விதமாகவும், இந்தியாவுக்குள் இன பேதத்தைத் தூண்டும் விதமாகவும் பிரசாத் கரியவசம் விஷமப் பிரசாரம் செய்து வருகிறார்.

இது குறித்து பிரதமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இந்தியாவுக்கான இலங்கைத்தூதர் தொடர்ந்து அத்துமீறிச் செயற்பட்டு வருகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, இப்போது இந்தியாவுக்கு உள்ளே தமிழர்களுக்கு எதிராக இனபேதத்தைத் தூண்டும் வகையில் ஒரு கடிதத்தை எழுதி மின் அஞ்சல் வழியாக இந்திய ஊடகங்களுக்கு அனுப்பி உள்ளார். சிங்களவர்கள், வட இந்தியர்களின் வழித் தோன்றல்கள்; எனவே, வட இந்திய மக்கள், பயங்கர வாதிகளான தமிழர்களை ஒடுக்கிய சிங்களவர் களைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அவரது இந்தச் செயல், வரம்பு மீறியது. அண் மையில், இத்தாலியத் தூத ருக்கு எதிராக உச்ச நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொண்டது போல, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 124 (ஏ) ன்படி, பிரசாத் கரியவசத்தை உடனே கைது செய்து சிறை யில் அடைக்க வேண்டும்-என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயத்தமாகிறது வடகொரியா

## இலக்குகளுக்கு ஏதுவாக நகர்கின்றன ஏவுகணைகள்

பியாங்யாங், மார்ச் 28

வடகொரியா போருக்கான முன்னேற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன் எல்லைப் பகுதிகளில் உள்ள வடகொரிய இராணுவ நிலைகளில் அதிக நேரத்தை செலவிடுகிறார் என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் தென்கொரியப் படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு வசதியாக வடகொரியா தனது ஏவுகணை நிலைகளை மாற்றியமைத்து வருகின்றது. குறிப்பாக அமெரிக்காவையும், ஹவாய், குவாம் தீவுகளில் உள்ள அந்த நாட்டு இராணுவ நிலைகளையும் குறிவைத்தே ஏவுகணை நிலைகள் மாற்றியமைக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து வடகொரிய இராணுவத்தலைமையகம்வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''பீரங்கிப் படையணியும், ஏவுகணைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. எப்போது போர் நிகழ்ந்தாலும் அதை எதிர்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய அனைத்துப் படைப்பிரிவுகளும் போருக்கான தயார் நிலையில் உள்ளன'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் எல்லைப் பிரதேசங்களுக்குப் பயணம் செய்து அங்குள்ள இராணுவ வீரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி உற்சாகப்படுத்தி வருகின்றார். வடகொரியா தம்மைப் பாதுகாத்துக் கொள்ள எந்த வகையான தாக்குதலையும் நடத்துவதற்கு தயங்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)



# சோமாலிய மக்கள் மீது பாலியல் துன்புறுத்தல்

நியூயோர்க், மார்ச் 28

சோமாலியாவில் இடப்பெயர்வுக்கு உள்ளான மக்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

அரச படையினர் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்கள் ஆகியவையே இடம்பெயர் மக்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வருவதாக மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில்,

போர் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் அடைக்கலம் கோரி வரும் பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர்.

மனித உரிமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புதிய அரசு அறிவித்துள்ளபோதிலும், மிகச் சொற்பளவிலான மாற்றங்களே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அடைக்கலம் கோரும் மக்கள் தடுத்து வைக்கப்பட்டு, பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதுடன் அவர்களது சுதந்திரமான நடமாட்டத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது''- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



# ஆப்கனில் இருந்து ஆஸி. படை வெளியேறும்

மெல்பேர்ன், மார்ச் 28

ஆப்கனில் உள்ள ஆஸ்திரேலியப் படைகளை மீளப்பெறத் தீர்மானித்துள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.'

ஆப்கனில் அல் குவைதா மற்றும் தலிபான்களுக்கு எதிரான போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளில் அங்கம் வகிக்கும் ஆஸ்திரேலியப் படைகளே திருப்பி அழைக்கப்படவுள்ளன.

இதுகுறித்து ஆஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஆப்கனிலிருந்து ஆஸ்திரேலியப் படைகள் திரும்பும் நேரம் நெருங்கிவிட்டது. கடந்த பத்து ஆண்டுளாக ஆஸ்திரேலியப் படைகள் அங்கு முகாமிட்டுள்ளன. இது நீண்ட காலமாகும். அதனால் அமைச்சரவையின் ஆலோசனைப்படி படைகளை மீளப்பெறும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து ஆஸ்திரேலியப் படைகள் ஆப்கனிலிருந்து வெளியேறும். அங்குள்ள 1650 படையினரில் முதல் கட்டமாக 1000 வீரர்கள் நாடு திரும்புவர்.''-என்றார்.(ற)



மியான்மாரின் சில பகுதிகளில் புத்த மதத்தினருக்கும், இஸ்லாமிய மதத்தினருக்கும் இடையே வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. மெக்திலா நகரில் இஸ்லாமிய வணக்கஸ்தலம் வன்முறைக் கும்பலால் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது. தற்போது பிற நகரங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகத் தொடங்கியுள்ளன. அந்தப்பகுதிகளின் பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# இத்தாலி வெளியுறவுத் துறை அமைச்சர் பதவி விலகினார்

**இத்தாலி கடற்படையினர் விசாரணைக்காக திருப்பி இந்தியா அனுப்பப்பட்டதை எதிர்த்து**



ரோம், மார்ச் 28

இந்திய மீனவர்கள் இருவர் இத்தாலிய கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பில் இத்தாலி அரசு எடுத்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜியுலியோ டெர்சி பதவி விலகியுள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்ட இரு இத்தாலிக் கடற்படை வீரர்களையும் வழக்கு விசாரணைக்காக இந்தியாவுக்கும் மீளவும் அனுப்பியமை தொடர்பில் கடும் கண்டனம் தெரிவித்துள்ள அவர் தனது பதவியை விட்டு விலகுவதாகவும் தெரிவித்துள்ளார்.

''எனது நாட்டுப் படையினர் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டமையைக் கண்டிக்கின்றேன். இந்த முடிவு எடுக்கப்பட்டமைக்காக எனது பதவியில் இருந்து விலகிக் கொள்கின்றேன்''- என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.(ற)

# கடாபியின் உறவினர்கள் லிபியாவில்

நியூயோர்க், மார்ச் 28

லிபியாவின் முன்னாள் தலைவர் முமர் கடாபியின் குடும்ப உறுப்பினர்கள் சிலருக்கு புகலிடம் வழங்கப்பட்டுள்ளது என்று லிபியா அறிவித்துள்ளது.

சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்டுவருவோர் பட்டியலிலுள்ள இருவரும் இதில் அடங்கியுள்ளனர் என்று சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன. எவ்வாறிருப்பினும் அடைக்கலம் வழங்கப்பட்டவர்களை நாடு கடத்துவது தொடர்பான பேச்சுக்கள் அவசியமற்றவை எனவும் லிபியா கூறியுள்ளது.

கடாபியின் ஆட்சிக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட கிளர்ச்சியாளர்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு தலைநகர் திரிப்போலியைக் கைப்பற்றிய பின்னர், அவர்கள் அல்ஜீரியாவில் அகதி அந்தஸ்து கோரியிருந்தனர்.

இந்த நிலையில், கடாபியின் மனைவியும் அவரது மூன்று பிள்ளைகளும் தமது நாட்டில் இருந்து முன்னறிவித்தல் இன்றி நீண்ட நாள்களுக்கு முன்னர் வெளியேறியுள்ளதாக அல்ஜீரியா கடந்த வாரம் அறிவித்திருந்தது. (ற)

# பாக். இடைக்காலப் பிரதமரை சந்தித்தார் இராணுவத் தளபதி

இஸ்லாமாபாத், மார்ச் 28

பாகிஸ்தான் இராணுவ தலைமைத் தளபதி அஷ்பக் கயானி இடைக்கால பிரதமர் மீர் ஹசர்கான் கோசோவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பாகிஸ்தான் நாடளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து இடைக்கால பிரதமராக ஓய்வு பெற்ற நீதிபதி ஹசர் கோசோ தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தே இராணுவத்தளபதி பிரதமரைச் சந்தித்துத்துக் கலந்துரையாடியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்புப் பணிக்கு படை வீரர்களை ஈடுபடுத்த வேண்டும் என தேர்தல் ஆணையம் கோரியிருந்தது. எனினும் படையினர் பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ளமையால், தேர்தல் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவது சிரமமானது என்று படைத்தரப்புத் தெரிவித்திருந்தது. எனினும் பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளில் மட்டும் படையினரைப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்துவது குறித்தே இராணுவத்தளபதி, பிரதமருடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்று கூறப்படுகிறது. (ற)

# தைவானில் நில நடுக்கம்

தைபே, மார்ச் 28

தைவானின் கிழக்குப் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தைவானின் மத்திய பகுதிக்கு அருகே, பூமிக்கு அடியில் 15 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.1 ஆக பதிவாகிவுள்ளதாக அந்தநாட்டின் வானிலை மையம் தெரிவித்துள்ளது. இழப்புகள் குறித்த தகவல் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

1999ஆம் ஆண்டு தைவானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# ஆப்கன் ஜனாதிபதியை சந்தித்தார் கெர்ரி

காபூல், மார்ச் 28

ஆப்கன் ஜனாதிபதி ஹமீது கர்சாயை அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஆப்கனில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் அடுத்த ஆண்டு இறுதியில் நாடு திரும்ப உள்ளன. இந்தநிலையில் ஆப்கனை வலுவிழக்கச் செய்யும் முயற்சியாக தலிபான்களுடன் இணைந்து அமெரிக்கா பேச்சுக்களில் ஈடுபடுவதாக ஆப்கன் ஜனாதிபதி அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி கடந்த திங்கட்கிழமை ஆப்கனுக்குச் சென்று ஹர்சாயுடன் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் பாதித்த பெண்கள் பற்றி கவலைப்பட்ட மகளிர் அமைச்சர்

அம்பாறை,மார்ச் 28

வடக்கு, கிழக்குப் பகுதிகள், கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரால் பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள பெண்கள் பலர் தங்களது குடும்பத் தலைவர்களை இழந்த நிலையில் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

இவ்வாறு சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களின் வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில், அவர்களுக்கு வாழ்வாதார அபிவிருத்திக்கான பொருள்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.



இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஆங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்குப் பகுதிகள் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரால் பல வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள பெண்கள் பலர் தமது குடும்பத் தலைவர்களை இழந்த நிலையில் பல்வேறுபட்ட துன்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்களுடைய வாழ்க்கையில் வசந்தம் ஏற்படும் வகையில் அரசு பல வழிகளிலும் உதவிகளைச் செய்து வருகின்றது. அந்த வகையில்தான் இன்று வாழ்வாதார அபிவிருத்திக்கு ஏற்ப பொருள்கள் வழங்கப்பட்டன.

நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு சகல மக்களும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

இலங்கையில் வாழ்கின்ற சகல சமூகங்களுக்கும் தத்தமது மதங்களைப் பிரதிபலிக்கும் வகையில் மத, கலாசார பாரம்பரியங்களை பேணிப் பாதுகாப்பதற்கான உரிமை உண்டு.

அந்தவிடயத்தில் யாரும், யாரையும் தரக்குறைவாகக் கணிப்பிட முடியாது.- என்றார்.

இந்த நிகழ்வில் 13 லட்சம் ரூபா செலவில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 63 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்துக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச)

## பிராந்தி என்றால் என்ன?

பிராந்தி என்பது மயக்கம். சிந்தையின் மயக்க நிலையாகும். அப்போது சிந்தையானது திரிபுபடுகிறது. உதாரணமாக ஒரு கயிற்றுத்துண்டை பாம்பாகவும், பாம்பைக் கயிற்றுத் துண்டாகவும் தப்பாக எண்ணுதல்.

வேறொருவகையில் விளக்குவதானால் சிந்தையானது உண்மையானதை பிழை என்றும், பிழையானதை உண்மையென்றும் எண்ணிக்கொள்கிறது. தற்காலிகமானதை நிரந்தரம் என்றும் நிரந்தரமானதை தற்காலிகம் என்றும் எண்ணுகிறது.

தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## கொம்பனித்தெரு கொள்ளைச் சம்பவம்: சந்தேகநபர்களிடம் 30 லட்சம் ரூபா மீட்பு

கொழும்பு, மார்ச் 28

கொம்பனித்தெருவில் வர்த்தகரொருவரின் பல லட்சம் ரூபா பெறுமதியான பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 30 இலட்சம் ரூபா மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்தப் பணம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

**கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்தப் பணம் மீட்கப்பட்டது**

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் இதனுடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேகநபர்கள் வெளிநாட்டிற்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த வர்த்தகரொருவர் வெளிநாட்டுப் பணத்தைக் கொம்பனித்தெருவிலுள்ள தனியார் வங்கியொன்றில் மாற்றிக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தபோது சந்தேக நபர்களால் அவர் பயணித்த வாகனமும் பணமும் கொள்ளையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மின்னஞ்சல் மூலம் பணமோசடி செய்த கெமரூன் நபர் கைது

கொழும்பு,மார்ச் 28

மின்னஞ்சல் மூலம் போலியான தகவல்களை வழங்கி பண மோசடியில் ஈடுபட்ட கெமரூன் நாட்டு நபர் ஒருவர் கண்டி, அலவத்து கொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நிறுவனமொன்றின் பங்குதாரர் என தம்மை அடையாளப்படுத்தி அக்குரண பிரதேச வர்த்தகர் ஒருவருக்கு குறித்த நபர் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். கெமரூன் நபர் வர்த்தகரிடம் பணத்தைப் பெற்றுக்கொள்ள வந்திருந்த சந்தர்ப்பத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மின்னல் தாக்கி ஒருவர் சாவு

அநுராதபுரம்,மார்ச் 28

அநுராதபுரம், தம்புத்தேகம பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மின்னல் தாக்கி மூவர் பாதிக்கப்பட்டதோடு, ஒருவர் தலாவ வைத்திய சாலைக்கு கொண்டு சென்றபோது உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10.03.1952

மறைவு 29.03.2010



அமரர்

**நாகமுத்து பரமலிங்கம்**

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

மனைவி, ஜருஷன் (மகன்.)

(34892)(5.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

**கனகரெட்ணம் இரத்தினம்**



தோற்றம்
1932.09.19
மறைவு
2012.04.07
திதி:- 28.03.2013

ஓராண்டு காலம் அதற்குள் ஓடியே போனதோ?
நீ வாழ்ந்த இல்லம் உன் நிழலின்றி வாடுதே!
தாயாகி எம்மை வளர்த்தெடுத்த தெய்வமே!
தாளாது வருந்தும் எமைத்தேற்ற யாருளர்?
ஓயாது உன் நினைவு உள்ளத்தை உருக்குதே!
ஓடோடி வருவாயோ? மீண்டும் ஒருக்கா!
வெளிநாடு வா என்று பிள்ளைகள் அழைத்தும்
என்னைவிட்டுப் போகாத என் தாயே!
இப்போது என்னைவிட்டுப் போக மனம் வந்ததோ?.

**மகள்மார், மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

82/7,செட்டித்தெரு,நல்லூர்,யாழ்ப்பாணம். (34886)(2.6)


ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
Colombo 12. T.P 0777 2776 70




சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567

★ ... ரோயல் குளுக்கோஸ்
★ ... ரோயல் குளுக்கோஸ்
★ ... ரோயல் குளுக்கோஸ்
★ ... ரோயல் குளுக்கோஸ் (C7350)

சந்தைப்படுத்துவோர்:- சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உற்பத்தியாளர்:- ரோயல் இன்டஸ்ரீஸ், ஆல்வொன்டல் ஸ்ரீற், கொழும்பு - 13



O/L 5 பாடம் சித்தியுடன்

பட்டதாரி ஆகும் அரிய வாய்ப்பினை வழங்குகின்றது காமராசர் பல்கலைக் கழகத்தினூடாக புதிய உயர் கல்லூரி உயர் பட்டப்படிப்பு நிறுவனம்.

* இக்கற்கை நெறியானது அடிப்படை நிலைக் கல்வி I, அடிப்படை நிலைகல்வி II ஆகும்.

இக்கற்கை நெறிக்கான காலம் ஒன்றரை (1 ½) வருடங்களாகும்.

இக்கற்கை நெறியினை நிறைவு செய்த பின்னர் பட்ட நெறிகளான B.A, B.Com, B.Sc ஆகிய பட்டநெறிகளில் ஒன்றினைத் தெரிவு செய்து இரண்டரை வருடங்களில் பட்டதாரி ஆகலாம்.

* A/L இல் சித்தி இல்லாதவர்களும் ஒரு பாடம் சித்தியடைந்தவர்களும் (Foundation II) ஒரு வருட கற்கை நெறியான அடிப்படைநிலைக் கல்வி II நிறைவு செய்து பட்டப்படிப்பான B.A, B.Com, B.Sc ஆகியவற்றில் ஒன்றினை தெரிவு செய்து பட்டதாரி ஆகலாம்.

* 1) அடிப்படைநிலைக் கல்வி (Foundation I) ஒன்றுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 30.03.2013 காலை 8.00 மணி
2) அடிப்படைநிலைக் கல்வி II இக்கான விரிவுரைகள் ஆரம்பம் 30.03.2013 காலை 9.00 மணி

குறிப்பு: புதிய ஆண்டுக்கான B.A, B.Com, B.Sc ஆகியவற்றுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

யாழ் இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம்.
T.P: 021 222 8148

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(C7350)(10.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்கென பொத்துவில் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம், சிங்கள மக்களோடு உரையாடுகிறார். இந்த மக்களை பொத்துவில், செங்காமத்தில் சந்தித்த ஜனாதிபதி, மக்கள் தெரிவித்த பிரச்சினைகளுக்கு அந்த இடத்திலேயே தீர்வு பெற்றுக்கொடுத்தார். பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி அதிகாரிகளுடன் தொலைபேசியில் உரையாடுகிறார்.

# ஏகாதிபத்திய அரசை வீட்டுக்கு அனுப்ப காலம் வந்துவிட்டது

## ரணில் திடமான பேச்சு



கொழும்பு,மார்ச் 28

ஏகாதிபத்திய அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய காலம் உருவாகியுள்ளது, வந்துவிட்டது என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பியகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு நாட்டின் நன் மதிப்பை பாதுகாப்பதற்கு விருப்பம் இல்லை. அது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் தெளிவாகியுள்ளது.

நூறு கோடி ரூபா செலவில் மத்தள விமான நிலையம் அமைக்கப்பட்ட போதிலும், அங்கு எரிபொருள் தாங்கி இல்லை.

அண்மையில் சவூதி அரேபியா மற்றும் அமெரிக்காவிலிருந்து தரையிறங்கிய விமானங்கள் எரிபொருள் நிரப்புவதற்காக மீளவும் கட்டுநாயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டு இலங்கையில் தேர்தல் ஒன்றை நடத்த ஐக்கிய தேசிய கட்சி அழுத்தம் கொடுக்கவுள்ளது.

அரசு மக்களின் வயிற்றில் அடித்து வருகிறது. அத்துடன் இந்த அரசு தானாக விலகுவதாகவும் இல்லை. அதனால் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் தேர்தல் ஒன்றை நடத்த ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டுக்கு முன்னர் இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்ற ஐக்கிய தேசிய கட்சி முயற்சித்தது. எனினும் அதனை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

மத்தள விமான நிலையத் திறப்புக் குறித்தே அரசு கவனமாக இருந்தது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாடு போன்ற முக்கிய விடயங்களில் அரசு கவனம் செலுத்தவில்லை. -என்றார். (ச)

# மேல் மாகாணத்தில் ஆசிரியர் சேவைக்கு 225 பட்டதாரிகள்

கொழும்பு,மார்ச் 28

மேல் மாகாணத்தில் ஆசிரியர் சேவைக்கு மேலும் 200 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளை இணைத் துக் கொள்வதற்கு மேல் மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, 168 கலைப்பீட பட்டதாரிகளையும், 34 விஞ்ஞான பீட பட்டதாரிகளையும், 35 வர்த்தக பீட பட்டதாரிகளையும் இணைத்துக்கொள்ள மேல் மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் 102 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பட்டதாரிகளே சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# இந்தியாவை துண்டாடவே இலங்கை மீது அழுத்தங்கள்

## பிரதமர் ஜயரட்ன கருத்து



கொழும்பு,மார்ச் 28

இந்தியாவை கூறு போடுவதற்காகவே சர்வதேச நாடுகள் இலங்கை மீது பழி சுமத்துகின்றன என்று பிரதமர் தி.மு.ஜயரட்ன தெரிவித்தார்.

போகம்பரைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

''வெளிநாட்டு ஆதிக்கங்களை இலங்கை மீது திணித்து இனங்களுக்கிடையில் மோதல்களை ஏற்படுத்தி போரின் மூலம் மனிதப் படுகொலைகளை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சி செய்து வருகின்றன.

நாம் வெளி நாட்டவர்களுடன் எந்த பிரச்சினைக்கும் செல்வதில்லை. எமக்கு யாருடனும் குரோதம் இல்லை. மக்களின் மதம், கலாசாரம் போன்ற விடயங்களில் பிரிவினைகளை ஏற்படுத்தக் கூடாது.

அனைத்து இன மக்களும் இலங்கையில் ஒருமித்து வாழ வேண்டும்.

மதங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டால் எந்த ஓர் இனமும் சுதந்திரமாக வாழ முடியாது. அது எதிர்கால சந்ததிகளைக் கடுமையாகப் பாதித்துவிடும்''-என்றார்.(ச)

# புத்த பெருமானுக்கு மெழுகுச் சிலை

## மாகும்புரவில் பிரமாண்டமாக

கொழும்பு,மார்ச் 28

தெற்காசியாவிலேயே மிகப்பெரிய புத்த பெருமானின் மெழுகுச் சிலை ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த மெழுகுச் சிலை கொட்டாவ, மாகும்புர புரான விகாரைக்கு அருகிலுள்ள வயல்வெளிக்கு மத்தியில் 180 அடி உயரத்தில் அமைக்கப்படவுள்ளது.

தென்மாகாண அதிவேக நெடுஞ்சாலை ஆரம்பமாகும் இடத்துக்கு முன்பாக மாகும்புர நுழைவாயிலில் மெழுகுச் சிலையை அமைப்பது தொடர்பான பேச்சு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

2600 ஆவது வெசாக் தினத்தையொட்டி நிர்மாணிக்கப்படவுள்ள இந்த மெழுகுசிலை சிங்கள கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வண்ணம் அமைக்கப்படும்.

இவ்வாறு புத்த பெருமானின் மெழுகுச்சிலை அமைக்கப்படுவதால் நாட்டுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பதால், ஜனாதிபதியால் 10 லட்சம் ரூபா இதன் நிர்மாணப் பணிக்காக அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த மெழுகுச்சிலை அமைக்கப்படுவதற்கு ஏதுவாக குறித்த இடத்தில் 2600 புத்த பகவானின் சிறிய சிலைகளும் அமைக்கப்படவுள்ளன. (ச)

# புலம்பெயர் மக்களின் உதவி இலங்கைக்கு மிக அவசியம்

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு,மார்ச் 28

நாட்டின் எதிர்கால பயணத்துக்கு உலகம் முழுவதும் உள்ள இலங்கையர்களின் முயற்சி அவசியம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தீவிரவாதம் அழிக்கப்பட்டதன் பின் நாடு வேகமான அபிவிருத்தி பாதையில் சென்று கொண்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்கள் சிலரை அலரி மாளிகையில் சந்தித்து பேசிய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான சர்வதேச சக்திகளுக்கு முகங் கொடுக்க வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுள்ள இலங்கையர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

முதலீடு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கும் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களின் ஆதரவை எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# அரசியலுடன் விளையாட்டுத்துறை தொடர்புபடுவது துரதிஷ்டவசம்

## இந்தியாவுக்கான தூதர் கவலை

கொழும்பு,மார்ச் 28

அரசியலுடன் விளையாட்டுத்துறை தொடர்புபடுவது துரதிர்ஷ்டவசமானது என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் தொலைக்காட்சியொன்றிற்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்களைக் களமிறக்க வேண்டாமெனத் தெரிவித்து தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ள நிலையில், பிரசாத் காரியவசம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழக முதல்வரின் எதிர்ப்பையடுத்து இலங்கை வீரர்களை சென்னையில் நடைபெறும் போட்டிகளில் களமிறக்காதிருக்க ஐ.பி.எல். நிர்வாகம் ஏற்கனவே தீர்மானித்துள்ளது. (ச)

# அனைத்துலகப் பொறிமுறை கொண்டு வருவது சாத்தியமில்லை

## பூச்சாண்டி காட்டுகிறார் பிளேக் என்கிறார் டியு குணசேகர



கொழும்பு,மார்ச் 28

இலங்கை தொடர்பில் அனைத்துலகப் பொறிமுறை ஒன்றைக் கொண்டு வருவது சாத்தியமில்லை என்று அமைச்சர் டியு. குணசேகர தெரிவித்தார்.

போர்க்கால உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான- சுதந்திரமான விசாரணையை இலங்கை நடத்தத் தவறினால், அனைத்துலக விசாரணைப் பொறிமுறை அமைக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் எச்சரித்திருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகாண வேண்டும். அதற்கு அனைத்துலகத் தலையீடு தேவையில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட்டிருந்தால் இவ்வாறான அனைத்துலக அழுத்தங்கள் ஏற்பட்டிருக்கா.

எனவே, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டத் தேவையில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்கான பொறிமுறைகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கையைப் பயமுறுத்தவே ஜெனிவாவில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தது.

இலங்கை தொடர்பாக அனைத்துலக விசாரணைப் பொறிமுறை கொண்டு வருவதாகக் கூறுவதெல்லாம் வெறும் பூச்சாண்டியே. அது குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. தற்போதுள்ள அரசமைப்பின் அடிப்படையில் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த முடியும்.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் விருப்பம்

★ பிடிக்க நான் விரும்புவது பிஸ்ரல் அல்ல பேனா
★ வடிக்க நான் விரும்புவது கண்ணீர் அல்ல கவிதை
★ படிக்க நான் விரும்புவது பாடல் அல்ல பாடம்
★கடிக்க நான் விரும்புவது எலும்பு அல்ல கரும்பு
★ குடிக்க நான் விரும்புவது மதுபானம் அல்ல குளிர்பானம்
★இடிக்க நான் விரும்புவது இதயம் அல்ல இமயம்
★அடைக்க நான் விரும்புவது கதவை அல்ல கடனை
★படைக்க நான் விரும்புவது உணவு அல்ல சாதனை
★துடைக்க நான் விரும்புவது கண்ணாடி அல்ல கவலையை
★ விடைகொடுக்க நான் விரும்புவது சமாதானத்துக்கு அல்ல, சண்டைக்கு.

-வி.கௌதமி,
மீசாலை கிழக்கு.

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே..



இன்றைய சமுதாயத்தில் நவநாகரிக மோகத்தில் நாட்டம் செலுத்துவதும் அதற்காக பெருமளவு நேரத்தை வீண்விரயமாக்குவதும் பெண்களே. முன்னைய காலத்துப் பெண்கள் அமைதி, பணிவு, அடக்கம் என்பவற்றுக்கு ஒரு உதாரணமாகத் திகழ்ந்தார்கள். ஆனால் இன்றைய காலத்துப் பெண்கள் பணிவு, அடக்கம், அமைதி என்பன அற்று நவநாகரிகத்தை நாடிச் செல்கின்றார்கள்.

இன்றைய காலத்துப் பெண்கள் பெற்றோர் முன்னிலையிலேயே நவநாகரிகமான ஆடை அணிந்து செல்கிறார்கள். அதை விரும்பாது கேள்வி கேட்டால் அதுதான் இந்தக் காலத்து 'ஸ்டைல்' ஆடை என்று சொல்கிறார்கள்.

அந்தக் காலத்துப் பெண்கள் தலைமுடியைப் பின்னி பூ வைத்து மிகவும் அடக்கமான உடையுடன் தங்களது வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வார்கள். இன்றைய காலத்துப் பெண்களோ முகத்துக்கு வர்ணப்பூச்சு பூசி அலங்கோலமாக செல்கிறார்கள்.

எனவே, நவநாகரித்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களை விடப் பெண்கள்தான்.

சி.பிரிந்துயா, 2013 (கலைப்பிரிவு),
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

இன்றைய காலத்துப் பெண்கள் தந்தைக்கு முன்னே நவநாகரிகமான ஆடை அணிந்து செல்கிறார்கள். அதை எதிர்த்து கேள்வி கேட்டால் அதுதான் இப்ப 'ஸ்டைல்' ஆடை என்று சொல்கிறார்கள்.

## நீயின்றி நானில்லை....



- தியா.தர்மா, நல்லூர்.



அழகு வதனம் கண்டு,
உன்னிடம் அடைந்தேன்
தஞ்சம்....

கனிவு ததும்பும்
உன் வார்த்தை
தேனைச் சுகித்த இன்பம்
தந்ததடி கொஞ்சம்....

உச்சிமுகர்ந்து - நீ
தழுவுகையில்
என் சித்தம் இதை
விரும்புதம்மா நித்தம்....

எத்தனை ஜென்மம்- யான்
பெறினும் கிடைத்திடா
ஈடு இணையில்லா நின்
அன்பு தந்த பந்தம்...
அத்தனை எளிதல்ல
அன்னை நின்புகழ்,
வர்ணித்திட செந்தமிழும்
முயன்று தோற்றதம்மா....!
உடலும் உயிரும்
தந்தவள் நீ... என்றும்
என் இதயத்தின் சந்தம்...
அம்மா நீ....

ஆதவனைக் கண்ட,
ஆம்பலாய்,
நின்னைக் காண்கையில்
ஆரத்தழுவுதடி நெஞ்சம்....

அன்பு சொரியும்- நின்

அச்சாணி இன்றி
சக்கரம் இல்லை...
அம்மா நீயின்றி..
நானில்லை...

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....



நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?
பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.................................................
முகவரி :- .................................................
.................................................
........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## நட்பு....

பறவையும் வானத்தில்
பறக்கும்
சிறகிருந்தால்
வாழ்க்கையும் பறவையாய்
மாறும்
நட்பிருந்தால்

அன்னை தந்தை
உறவைவிட
நெருக்கமான சொந்தம்
இதயத்தை கனிய
வைக்கும்
உறவு இது

உலகின் வாழ்வு நட்பால்
இயங்கட்டும்
அதைக்கண்டு பலர் மனம்
குளிரட்டும்

நிலவு சிரிக்கட்டும்
பனித்துளியாய்
சூரியன் சிரிக்கட்டும்
சுடர்ஒளியாய்
எல்லோரும் அறியட்டும்
நட்பின் பெருமையை



- ந.கர்ஜனா, ஊரெழு கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர் அறுவடையில் இனத்தூய்மையின் முக்கியத்துவம்



■ கலாநிதி சி.ஜே. அரசகேசரி.
பிரதிப் பணிப்பாளர்,
விவசாய ஆராய்ச்சி, கிளிநொச்சி.
■ ஆ.இளமாறன்
ஆராய்ச்சி உதவியாளர், கிளிநொச்சி.

எமது நாட்டில் பல்வேறு பயிர்வகைகள் தொன்று தொட்டுப் பயிரிடப்பட்டு வருகின்றன. இவற்றில் அனேகமானவை மரபுவழி வந்திருந்தாலும் அவற்றுள் சில, உதாரணமாக சோளம், சோயா அவரை, உருளைக்கிழங்கு மற்றும் தேயிலை போன்றவை அயல் நாடுகளில் இருந்து பல்வேறு காலப்பகுதிகளில் அவ்வப்போது அறிமுகமாகியுள்ளன. இவ்வகைப் பயிர்களின் உற்பத்தி நுகர்வோருக்கும் உகந்ததாக இருப்பின் அவை அதிகளவு சந்தைப் பெறுமானத்தைப் பெற்றுத்தரும் என்பது மட்டுமல்லாது, திறந்த பொருளாதாரக் கொள்கை மற்றும் பல்வேறுபட்ட சர்வதேச நிறுவனங்களின் நியதிகள் போன்றவை அண்மைக் கால விவசாய வர்த்தகத்தில் பெரும் செல்வாக்கைச் செலுத்துவதனால் இந்த வகைப் பயிர்களின் உற்பத்தியின் தரம் மிகவும் முக்கியமாகி விட்டது. அரிசி, உருளைக்கிழங்கு மற்றும் பருப்பு வகைகள் போன்றவை சீரான குணாம்சங்களைக் கொண்டிருத்தல் மிக அவசியமாகும். ஆதலால் முக்கியமாக இவ்விடயத்தில் விவசாயிகளின் கவனம் திருப்பப்படுதல் சமகாலத் தேவையாகியுள்ளது. இந்தக்காரணங்களை மையமாகக் கொண்டு விவசாய உற்பத்தியில் சீரான விளைபொருள்கள் பெறுவதன் முக்கியத்துவம் மற்றும் அதற்குரிய தரமான விதை நடுகைப் பொருள்கள் பெறல் மற்றும் விதைபொருள்களின் உற்பத்தி என்பவற்றின் சில முக்கியமான கருத்துகளை இங்குவிவரிக்கப்படுகின்றன.

### பயிர் வகைகளின் இனப்பெருக்க முறைகள்

விவசாயத்தில் பயிரிடப்படும் பயிர்கள் பிரதானமாக இரு வகைகளில் உற்பத்தியாக்கப்படுகின்றன. மரவள்ளி, இராசவள்ளி, சட்டிக் கருணை, இஞ்சி, வெங்காயம், மஞ்சள் மற்றும் வாழை போன்றவை வெட்டுத்துண்டங்கள், கிழங்குகள் மற்றும் அரும்புகள் போன்றவற்றால் இனப்பெருக்கம் செய்யப்படுவதால் இந்தமுறை பதியமுறை இனப்பெருக்கம் எனப்படும். நெல், குரக்கன், சாமை, தினை, பருப்பு வகைகள் போன்றன வித்துக்கள் மூலம் இனம் பெருக்கப்படுவதனால் இந்தமுறை இலிங்க முறை இனப்பெருக்கம் என அழைக்கப்படும்.

பொதுவாகப் பதிய முறையில் இனம் பெருக்கப்பட்டு இவ்வகைப் பதியங்கள் விவசாய உற்பத்தியில் பயன் படுத்தப்படுகையில் அவ்வகைப் பயிர்கள் ஒரே சீரான வளர்ச்சிப் போக்கையே காட்டி நிற்கும். இவற்றில் வேறுபாடு கள் தோன்றுவதன் சாத்தியம் மிகவும் குறைவு. இருப்பினும் இயற்கை யான இந்த வகைப்பயிர்களில் தோன்றும் பதிய விகாரத்தினால் (Chimeras) மட்டுமே வேறுபாடுகள் தோன்ற வழியுண்டு. இந்த வகைப் பதிய விகாரங்களே தற்காலத்தில் பயிரிடப்படும் பதியமுறை இனப் பெருக்கத்தினால் செய்யப்படும் பயிர்களுக்குக் காரணமாகியுள்ளன.

தானியவகை, பருப்பு வகைகள் போன்றன வித்துக்கள் மூலம் பயிரிடப் படும். இவை இலிங்க முறை இனப்பெருக்கம் என அழைக்கப்படும். இரண்டு இலிங்களான ஆண் மற்றும் பெண் பூக்களில் அல்லது தொடர்புடைய கருக்களின் சேர்க்கை வித்துக்களை உருவாக்குகின்றன. தன் மகரந்தச் சேர்க்கை, மட்டான அயன்மகரந்த சேர்க்கை மற்றும் அயன்மகரந்தச் சேர்க்கைகளினால் வித்துக்கள் தோன்றுகின்றன. இந்த மகரந்தச் சேர்க்கையின் விளைவாகத் தோன்றும் வித்துக்கள் பலவகைகளில் மாறுபட்ட குணாம்சங்களுடைய பயிர்களை உருவாக்க வாய்ப்புக்கள் உண்டு.

இந்தக் காலத்தில் அநேக பயிர்கள் மரபு வழியில் பயிரிடப்பட்டு வந்த முறைமையினால் அடிப்படையிலும் கால நிலை காரணமாக மழை வீழ்ச்சி, பயிர், பீடை நோய்த் தாக்கம் மற்றும் விவசாயிகளின் இயற்கைத் தெரிவுக்கு உட்பட்டது. எனவே பயிர் உற்பத்தியில் சீரான விளைபொருள்களை உருவாக்க முயலும் விவசாயிகள் மேற்போந்த அறிவுகளைப் பெற்றிருத்தலுக்கான காலம் இதுவாகும். எனவே விவசாயிகளோடு தொடர்புபட்ட நிறுவனங்களும் சரி, திணைக்களங்களும் சரி விவசாயிகளைத் தகுந்த முறையில் அறிவூட்டுதல் மிக முக்கியமானதாகும்.

### சீரான விதை நடுகைப் பொருள்கள்

ஒவ்வொரு தன்வினைவகை தாய்த் தாவரத்தின் அதே குணாம்சங்களை விளை பொருள்கள் கொண்டிருத்தல் பதியமுறை இனப்பெருக்கப் பயிர் வகைகளில் இலகுவானதொன்றாகும். பொதுவாக விவசாயிகள் இந்த வகைப்பொருள்களைத் தாமாகவே உற்பத்தி செய்து விடுவதுடன் உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளில் நடுகைப் பொருள்களைச் சரியான வழிமுறைகளில் பெற்றுக்கொள்வதால் இந்த வகைப்பொருள்களின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு பாதிப்பு ஏற்படுவதில்லை. அண்மைக்காலப் பரிசோதனைகளுக்கு அமைவாக இழைய வளர்ப்பு மூலம் (Tissue Culture) ஒரு தாய்த் தாவரப் பகுதி ஒன்றில் இருந்து அதே குணாம்சங்களையுடைய அநேக நாற்றுக்கள் உற்பத்தியாக்கப்பட்டு மிகவும் உகந்ததாக பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இந்த வகை நாற்றுக்கள் ஒரே வகையான வளர்ச்சிப் போக்கு, விளைபொருள் கள் என்பவற்றை காட்டுவதால் இந்த முறையில் பயிரிடப்படும் பயிர்கள் சீரான உற்பத்தியைத் தருகின்றன. மேலைத்தேச நாடுகளில் இந்த வகையில் உற்பத்தியாக்கப்படும் அநேக பயிர்கள் இருப்பினும் இந்த முறை இலங்கையில் பிரபல்யமாவதற்கு சில வருடங்கள் தேவைப்படும். வாழைக்கன்றுகள் இந்த வகையில் இலங்கையில் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தானிய வகைகளான நெல், குரக்கன் சாமை, தினை போன்றவற்றில் விதைபொருள்களைப் பெற்றுக்கொள்வதில் விவசாயிகள் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். எடுத்துக்காட்டாகப் பழைய நெல் வர்க்கங்களான மொட்டைக்கறுப்பன், பச்சைப் பெருமாள் போன்றவை தற்காலத்திலும் இலங்கையின் சில பகுதிகளில் பயிரிடப்பட்டு வருகின்றன. நெல்லில் இயற்கையாகவே மாற்றங்கள் ஏற்படுவது குறைவாயினும் நீரோட்டம், பட்டங்கு, சூடு மிதிக்கும் இயந்திரம் மற்றும் நாற்று நடுகையின் போது கலப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றாகியுள்ளது. இவை மட்டுமல்லாது இந்தக் கலப்புப் பற்றிய தெளிவான கவனம் செலுத்தப்படாமை துர் அதிர்ஷ்டவசமானதும், தவிர்க்கப்பட வேண்டியதுமாகும். ஒரு நெல்மணியில் இருந்து தோன்றும் நெற்பயிரானது சராசரியாக 5-7 மட்டங்களை உருவாக்கும். இந்த மட்டங்களில் இருந்து உருவாகும் கதிரொன்று குறைந்தது 100 நெல் மணிகளைக் கொண்டிருக்கும். ஆதலால்நெல்விதைப்பொருள்களில் ஒரு மணி கலந்திருந்தால் அடுத்த சந்ததிக்கு 700 கலப்புக்களைப் பரப்பிவிடும். இந்த 700 கலப்புக்களும் அதற்கு அடுத்த சந்ததியில் எண்ணிக்கையற்ற கலப்புக்களைத் தோற்றுவிப்பது தெளிவாகின்றது. இந்தக் கலப்புக்களால் தோன்றும் நெல்மணிகள் நிறத்திலோ, பருமனிலோ, அரிசியின் வகைகளிலோ பல்வேறுபட்டுக் காணப்படும். இந்தப் பல்வகைத்தன்மை, நெல்லின் சந்தைப் பெறுமானத்தைக் குறைத்து விடுவது கண்கூடு. ஆகையால் வித்துக்கள் மூலம் இனம் பெருக்கப்படும் பயிர் வகைகளில் இனத்தூய்மை முக் கியமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. புதிய வகை நெல் மற்றும் வேறு பயிர் வகைகளின் விதைகளை விவசாயத் திணைக்களத்தில் இலகுவில் பெற்றுக்கொள்ளலாம். கலப்பு பிறப்பாக்கம் இல்லாது பெறப்படும்விதைகளைத்தொடர்ந்து பாவிக்க முடியுமாயினும் தொடர் பாவனையால் விளைச்சல் குன்றுவதனால் இனத்தூய்மை அற்றுப் போக வாய்ப்புண்டு.

### பயிர்களில் இனத்தூய்மையைப் பேணும் வழிமுறைகள்

விவசாயத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு பயிர் வகைகளுக்குப் பரிந்துரைக்கப்படும் விதைகள் சந்தையில் கிடைக்கும். இவை தரத்தில் சிறந்தவை. விவசாயிகளின் முதலான தெரிவு தரமான விதையாக இருக்க வேண்டும். இவ்வகை நடுகைப்பொருள்கள் போதிய அளவில் கிடைக்காத சந்தர்ப்பங்களும் உண்டு. அந்நேரங்களில் விவசாயிகள் சுயமாகத் தமது விதைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். தானியம் மற்றும் பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் சுயவிதை உற்பத்தி இலகுவானது. விவசாயிகள் தாம் விரும்பும் நற்குணாம்சங்களைக் கொண்டிருக்கும் பயிர்களைத் தெரிவு செய்து அவற்றிலிருந்து பழங்கள் அல்லது கதிர்களை வேறாக்கிச் சேமித்து வைக்கும் விதைகளிலிருந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

மிளகாய், கத்தரி போன்றவற்றில் இனக்கலப்பு ஏற்படுவது சாதாரணமானது. ஆகையால் சுயவிதை உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் இப் பயிர்கள் பயிரிடப்படும் இடங்களைச் சுற்றி வேலி அடைத்து அவ் வேலிகளில் பாகல், புடோல் போன்ற பயிர்களை வளர்ப்பதனால் இனக் கலப்பற்ற மிளகாய், கத்தரி விதைகளைப் பெற்றுக் கொள்வதுடன்; வேலியில் பயிரிடப்படும் பயிர்களின் உற்பத்தியிலிருந்து மேலதிக இலாபத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். சுயவிதை உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் தாம் பயிரிட்டுள்ள பயிர்வகைகளில் ஒரே சீரானவற்றைத் தெரிவு செய்து அவற்றிலிருந்து விதை பொருட்களைப் பெற வேண்டும்.

### சில பயிர்களில் இனக்கலப்பின் முக்கியத்துவம்

புதுவகை இனங்களை உற்பத்தியாக்குவதற்கு இனக்கலப்பே வழிவகுக்கின்றது. சீரான வழிமுறைகளின் மூலமாக இவ்வினக்கலப்பின் தொடர் சந்ததிகள் புதிய இனங்களைத் தோற்றுவிக்கும். ஆனால் மட்டுவில் பிரதேசத்தில் காணப்படும் கத்தரி வர்க்கங்களை சில ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பரிசித்துப் பார்த்ததில் முக்கியமான தரவொன்று கிடைக்கப்பெற்றது. மட்டுவில் பிரதேசத்தில் காணப்படும் கத்தரிப் பயிர்களில் இரண்டு, மூன்று வகையான நிறங்களையுடைய கத்தரிக்காய்கள் பெறப்படுகின்றன. அப்பிரதேச விவசாயிகள் அவ்வகைக் கலப்புள்ள கத்தரி விதைகளையே தொடர்ந்து பயன் படுத்துகின்றனர். இயற்கையாக நடைபெறும் இனக்கலப்பின் மூலம் அடுத்த சந்ததியின் வீரியம் பேணப்படுவது ஆராய்ச்சிகளின் முடிவாகும். இவ்வகை வெவ்வேறு நிறக் காய்களை வேறு படுத்திச் சந்தைப்படுத்துவதால் தகுந்த சந்தைப் பெறுமானத்தை அவ் விவசாயிகள் பெறுகின்றனர். எனவே அறிந்தோ அறியாமலோ பேணப்பட்டுவரும் இவ்வகை இனக் கலப்புக் கத்தரியைப் பொறுத்த வரையில் மட்டுவில் பிரதேச மக்களுக்கு அது மேன்மையான தொன்றாகும்.

### வெங்காயத்தில் இனக்கலப்பு

அதிகமாக வெங்காயம் பயிரிடப்படும் இடங்களில் வெங்காயக்குமிழ்களின் உற்பத்தியில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபட்ட குமிழ்களினால் வெங்காயத்தின் சந்தைப்பெறுமானம் குறைவடைந்து விடுகின்றது. திருநெல்வேலி ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2010 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட "திருநெல்வேலி சிவப்பு" எனும் சிறிய வெங்காயத்தின் குமிழ்கள் சீரான தோற்றத்தை கொண்டிருப்பதால் விளைபொருள்களில் கலப்புத் தோன்றுவதில்லை. இருப்பினும் பெரிய வெங்காய உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்டு பயிரிடப்படும் வெங்காய விதைகள் சில வேளைகளில் ஒரே சீரானவெங்காயக்குமிழ்களைத் தோற்று விப்பதில்லை. எனவே விவசாயிகள் இவ் விடயத்தில் கவனமாயிருப்பது நல்லது.

முடிவாகவிவசாயிகள் தங்களது உற்பத்தியின் தன்மையைப் பேணுவதற்கு தகுந்த இடத்தில் விதைகளைப் பெற்றுக் கொள்வதும், தவறும் பட்சத்தில் சுயவிதை உற்பத்தியில் முறையாக ஈடுபடுதலும் இங்கு பரிந்துரைக்கப்படுகின்றது. இது சம்பந்தமான மேலதிகமான அறிவுரைகள் மற்றும் செய்தொழில்நுட்ப முறைகள் என்பவற்றை அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடமிருந்தோ அல்லது மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தரிடமிருந்தோ பெறலாம் என்பதனையும், எதிர்காலங்களில் சீரான நடுகைப் பொருள்களை உள்ளடக்கிய பயிர்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதையும் விவசாய உற்பத்தியாளர்கள் கருத்தில் கொள்வது அவசியமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மத்தளவில் இருந்து புறப்பட்ட விமானம் மயிரிழையில் தப்பியது

கொழும்பு,மார்ச் 28

இலங்கையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மத்தள சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்று விபத்தில் இருந்து மயிரிழையில் தப்பியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மாலேயில் இருந்து இலங்கை வந்த யு.எல்- 114 என்ற விமானம், மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு புறப்பட்டுச் சென்றபோதே, இந்த விபத்து நேரிட்டதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில், பறவைக் கூட்டம் ஒன்று விமானத்தின் முன்புறத்தில் தாக்கியது. அதனால் விமானத்தின் முன்புறக் கண்ணாடிகள் சேதமடைந்தன.



விமானம் அவசரமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதும், சிறிலங்கன் எயர் லைன்ஸ் மூத்த அதிகாரிகளும், விமானிகளும் சேதங்களை ஆய்வு செய்தனர்.

முன்புறக் கண்ணாடியில் விரிசல் ஏற்பட்டுள்ளதுடன், துப்பாக்கிக் குண்டுத் துளை போன்ற பல துளைகளும் காணப்பட்டதாக மூத்த விமானி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விமானத்தில் சுமார் 40 பயணிகள் இருந்தனர். அவர்களில் மத்தளவில் இருந்து கட்டுநாயக்க செல்வதற்காக ஏறிய ஜனாதிபதியின் நான்கு உறவினர்களும் உள்ளடங்குவர். எனினும் அந்த விமானம் மத்தளவில் பயணிகள் எவரையும் இறக்கி விடவில்லை என்பது குறிப்படத்தக்கது. பறவைகள், மற்றும் வனவிலங்குகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியிலேயே மத்தள விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு விமானங்களின் இரைச்சல் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு தொந்தரவாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## சிறைச்சாலை கலவர அறிக்கை விரைவில்

கொழும்பு,மார்ச் 28

வெலிக்கடை சிறைக் கலவரத்தை ஆராய்ந்த மூன்று அங்கத்தவர் குழுவால் தயாரிக்கப்பட்ட 100 பக்க அறிக்கை இன்னும் சில தினங்களில் வெளியிடப்படவுள்ளது.

கலவரத்துக்கு காரணமாக இருந்தவர்கள் யாராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு கூறியுள்ளது.

கலவரத்தின் போது சிறைக்காவலர்களின் நடத்தை, கலவரத்துக்கு இட்டுச் சென்ற சூழல், கைதிகளால் எவ்வாறு வெளியே வர முடிந்தது, ஆயுத களஞ்சிய சாலை எவ்வாறு கலவரக்காரர்கள் வசமானது என்பன பற்றிய விளக்கங்கள் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ச)

## இலங்கை செல்லும் பிரிட்டன் நபர்களுக்கு பயண எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 28

இலங்கைக்குக்குச் செல்லும் பிரிட்டன் நபர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்குலக நாடுகளுக்கு எதிரான நிலைப்பாடு வலுப்பெற்று வருகிறது என்று பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பிரிட்டனுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பயண எச்சரிக்கை காரணமாக இலங்கைக்கு சுற்றுலா வரும் பிரிட்டன் நபர்களின் எண்ணிக்கை குறையலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## 2000 ஏக்கரில் சோயா, அவரை பயிரிடத் திட்டம்

கொழும்பு,மார்ச் 28

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுமார் 2000 ஏக்கரில் சோயா, அவரை பயிரிட விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

தற்போது தரிசாகக் காணப்படுகின்ற வயல் காணிகள் மற்றும் வேறு செய்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள தரிசு நிலங்கள் என்பவற்றை இதற்காகப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செய்கையாளர்களுக்குத் தேவையான விதைகள், உரம் மற்றும் அவர்களின் அறுவடைகளை விற்பனை செய்வதற்கும் தேவையான வசதிகளை விவசாய திணைக்களம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)


### ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

* நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, சருமவியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டு வலி. முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
* இந்நோய்களுக்குப் பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

### ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

* எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆஸவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள்,சிறப் வகைகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
* மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோச்னை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீலி பேதிக் குளிசைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

### சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!

இளமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/7356)(2.6) தொலைபேசி: 021 222 2567

### பணியாளர்கள் தேவை

**உதவி சமையலாளர்** பதவிக்கும்
**சப்ளை** செய்வதற்குமான
பணியாளர்கள் தேவை.
வயது 25 - 35 உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 330 5253,
(34952) (45.8.7) 021 205 0014.

### வவுனியாவில்

Mobile Phone Repairing Course

| | |
|---|---|
| 4Days ஆரம்பம் 29.03.2013 | பாடநெறிக்கு செலுத்திய கட்டணம் ஒரு மாதத்தில் சம்பாதிக்க முடியும். |

★ இலவச கையேடு ★ CD
★ 1000 இற்கு மேற்பட்ட தொழில் ரகசியங்கள்

பிரபல ஆசிரியர் Ganesh .K
072 623 9776
024 222 6649 (26196)(5-6)

### TV கள் மலிவு விற்பனை

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில்
SONY Wega Flat TV கள் 21"- 12000/= முதல், 25"- 13600/=, , 29"- 16000/=
Panasonic (பனசோனிக்) 29" -15000/= DTS
அம்பிளிபயர், Box வகைகள், DVD -3000/=
தொடர்பு: 0770440570 (அப்பவர்)
சோனி ரேட்ற் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
(34912)(2.6) 56, K.K.S வீதி, சுன்னாகம்.

### வவுனியாவில் கடை வாடகைக்கு உண்டு

58 அடி நீளமும், 11 ¼ அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் முன்பாக) வாடகைக்கு விடப்படும்.
★ தனியார் வகுப்புகள் நடத்துவதற்கும்.
★ வெளிநாட்டு பயண ஒழுங்குகள் செய்வதற்கும் பொருத்தமான இடம்.
★ தரகர்கள் தேவையில்லை.
முகவரி: இல. 66 1/1, இரண்டாவது மாடி, புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா. தொ.பே. 024 222 0112
(26195) (45.6)

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில்
1946.03.27
ஆண்டவன் அடியில்
2008.03.22
திதி:- பிரதமை

திருமதி முருகையா அன்னலட்சுமி
(கிளி ஆச்சி)

அன்பெனும் உருவிலே பண்பெனும் கோயிலிலே
பார்போற்ற வளர்த்தீர்கள் அம்மா
உங்கள் பிள்ளைகளின் முகம் காணாது
எங்கே அம்மா பறந்து சென்றீர்கள்
ஈர் நான்கு திசைகளிலும் உங்கள்
முகம் காணாமல் துடிக்கின்றேன் அம்மா
எனக்கு நோய் வந்தவுடன் — கண்
விழித்து காவல் இருந்தாயம்மா
உன் கண் அசைவில் உங்கள்
கருத்தை அறிவேனம்மா
ஐந்தாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் முகம் காணத் துடிக்கிறேன் அம்மா



உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்
முருகையா (கணவர்), பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
ஜெயராணி (மகள் - பி.வை.அளவெட்டி)
பன்னாலை, தெல்லிப்பழை.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 23.12.1945
உதிர்வு 27.02.2013



வேலணை மேற்கைச் சேர்ந்த
திருமதி
**இராசலட்சுமி சிவபுரநாதன்**
[குஞ்சியக்கா]

லட்சுமி கரமாக புன்னகை தவழ் முகத்துடன்
அன்புடனும் பண்புடனும் வாழ்வுக்கு இலக்கணமாய்
பாசத்தை ஊட்டி நல்வழி காட்டினீர்கள் -அம்மா
தீராத கவலை நெஞ்சை வாட்டுதம்மா.
தேடுகின்றோம் நின் பூமுகத்தை நிதமும்
நாள்கள் பல சென்றாலும் தீருமோ எம் துயரம்
மறவாது என்றும் உங்கள் ஞாபகம் அம்மா
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 27.02.2013 புதன்கிழமை சிற்பனை முருகன் திருவடியடைந்த எம் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த, ஆறுதல் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் இன்று வரை பக்கத் துணையாகி இருந்த உறவினர்கள், நண்பர்கள் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் இருகரம் கூப்பி எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இன்று (28.03.2013) வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு நாவலர் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலையத்தில்** (TCT) நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

255,அரசடி வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 லட்சம் இலங்கையர்கள் பார்த்த தேசத்துக்கு மகுடம்

அம்பாறை,மார்ச் 28

அம்பாறை ஹாடி உயர் தொழில் நுட்பவியல் நிறுவன வளாகத்தில் நான்காவது நாளாக நடைபெற்றுவரும் தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியைப் பார்வையிட நேற்றுமுன்தினம் மட்டும் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வருகை தந்திருந்தனர்.

அதற்கமைய கடந்த நான்கு நாள்களுக்குள் 10 லட்சம் பேர் கண்காட்சியைப் பார்வையிட வருகை தந்துள்ளனர் என்று கண்காட்சி நடவடிக்கைச் செயலகம் அறிவித்தது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விடுமுறை தினம் என்பதால் காலை முதல் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கண்காட்சியைப் பார்வையிட வருகை தந்த வண்ணம் இருந்தனர். திடீரென பெருந்திரளான மக்கள் ஒரே நேரத்தில் வருகை தந்த போதிலும், எந்தவித தடையுமின்றி அவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பாடசாலை மாணவர்களில், கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் அதிகளவு வருகை தந்ததைக் காண முடிந்தது.

கண்காட்சியை முன்னிட்டு பிரதான கேட்போர் கூடத்திலும், காட்சிக் கூடங்களிலும் பல்வேறு அமைச்சர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் விமானப் படை மற்றும் முப்படையினரின் பரசூட் சாகசங்கள் இடம்பெற்றன. இராணுவம், கடற்படை, விமானப் படை, விஷேட அதிரடிப் படையினரின் சாகசங்களைப் பார்வையிட பெருந்திரளான மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

மாணவர்களை அழைத்து வந்து கண்காட்சியை பார்வையிட வைப்பது பெற்றோர்களினது கடமை என்று கண்காட்சி ஏற்பாட்டுக் குழுத் தலைவரும், தொலைத்தொடர்புகள் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (ச)



மாத்தறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு விவசாய உபகரணங்களை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் செயற்திட்டமொன்றை மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சமாதி சமூக அபிவிருத்தி மன்றப் பணிப்பாளரும், தலைவருமான புத்திக பத்திரண ஆரம்பித்துள்ளார். இந்தத் திட்டத்தின் கீழ் கம்புறுபிட்டியா தேர்தல் தொகுதியில் பிபுலேவெல ஐக்கிய விவசாய இயக்கத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உபகரணங்களை அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம்.

# மின்கட்டண அதிகரிப்பு குறித்து வாய்மூல முறைப்பாடு பதிவு

கொழும்பு,மார்ச் 28

மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்கும் யோசனைக்கு எதிர்வரும் 4ஆம் திகதி முதல் வாய்மூல கருத்துக்களை முன்வைப்பதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இவ்வாறு இலங்கை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுமார் 100 பேரிடமிருந்து எழுத்துமூல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பான முறைப்பாடுகள் இன்று வியாழக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்பட உள்ளது என்று ஆணைக்குழுவின்பணிப்பாளர் தமித குமாரசிங்க குறிப்பிட்டார்.

இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனத்தில் வாய்மூல கருத்துக்களை முன்வைப்பதற்கான அனுமதியை எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

வாய்மூல மற்றும் எழுத்துமூல முறைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு அரச கொள்கையின் பிரகாரம் மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்கும் யோசனை தொடர்பான இறுதித் தீர்மானத்தை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு மேற்கொள்ளும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# தபால் கட்டணங்களில் திருத்தம்; அதற்கான யோசனைகள் அரசிடம்

கொழும்பு,மார்ச் 28

தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.

அதற்கான யோசனைகள் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தபால் மா அதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்தார்.

அந்த யோசனைகள் அமைச்சு மட்டத்தில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். எனினும் கடந்த 6 வருடங்களாக தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச)

# ஆஸி.செல்ல முயற்சித்த 97பேர் வசமாக சிக்கினர்

அம்பாறை,மார்ச் 28

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த 97 பேர் அம்பாறை கடற்பரப்பில் நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் புத்தளம், வாழைச்சேனை, திருக்கோவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர். கைதுசெய்யப்பட்ட வர்கள் ஒலுவில் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் இல.120, 3ஆம் குறுக்குத்தெருவில் சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு (கீழ், மேல்) வாடகைக்குண்டு. தொடர்பு: 077 6055 555
(34908) (45.6.7)

## வீடு விற்பனைக்கு

அராலி வீதி, சங்கானையில்
பத்துப் பரப்புக் காணியுடன்
கிணறு சகல வசதிகளுடன் கூடிய
நல்ல நிலையில் உள்ள நாற்சார
வீடு விற்பனைக்குண்டு. (34880) (45.6.7)

தொடர்பு: 0212221329,
0774733893, 0776253040.

## மிருதங்க இசை அரங்கேற்றம்

பன்னாலையைச் சேர்ந்த
செல்வன் கலியுகவரதன் பிரார்த்தனன்
அவர்களின் மிருதங்க இசை அரங்கேற்றம்
நாளை (29.03.2013) வெள்ளிக்கிழமை பிற்பகல்
2 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன்கோயில்
மண்டபத்தில் ஓய்வு நிலை இசை ஆசிரியர்
கலாவித்தகர் சிற்றம்பலம் சிவஞானராஜா
அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.
இசை ஆர்வலர்கள், ரசிகர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
கலியுகவரதன் குடும்பம்
பன்னாலை, தெல்லிப்பழை.
(34880) (45.6)

## நீங்காத நினைவலைகள்

2ஆம் ஆண்டு | 30ஆம் ஆண்டு | 30ஆம் நாள்



தில்லையம்பலம் அரியரத்தினம்
பிறப்பு 04-10-1959
இறப்பு 20-03-2011



தில்லையம்பலம் நந்தகுமாரன்
06-03-1964
14-04-1983



திருமதி சுந்தரலிங்கம்
கிருஷ்ணவேணியம்மா (பெரமகள்)
19-06-1949
28-02-2013

திதி: அபரபக்க பிரதமை (28-03-2013)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வத்திராயன் தெற்கு,
தாளையடி.

என்றும் நினைவில்
தில்லையம்பலம் குடும்பத்தினர்.
(34650) (10,6,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**இடபம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி கிட்டும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**கடகம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளை தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன்பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து அதிகரிக்கும்.

**சிங்கம்:** கடன் பிரச்சினைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**கன்னி:** அடுக்கடுக்கான வேலைகளால் அவதிப்படுவீர்கள். சிலர் உங்களை விமர்சிப்பார்கள். உணர்ச்சிவசப்பட்டுப் பேசி யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் பிறரின் குறைகளை நாசூக்காகச் சுட்டிக் காட்டுங்கள்.

**நாளை**

பங்குனி-16 வெள்ளிக்கிழமை 29.03.2013
திதி: திருதியை பி.ப. 01.02 வரை
நட்சத்திரம்: சித்திரை மரண மு.ப. 09.25 வரை
சுபநேரம்: 06.13- 07.43 வரை
இராகுகாலம்: 10.43- 12.13 வரை

**துலாம்:** எளிதாக முடிய வேண்டிய விடயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாள்களிடம் தொழில் சம்பந்தமான இரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதத்தைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**தனுசு:** நீண்ட நாள்களாகத் தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**கும்பம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மீனம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 2 | | | | | 6 | |
| 8 | | | 9 | | 6 | | | 2 |
| | 6 | 1 | 8 | | 7 | 5 | | 4 |
| | 2 | | 4 | 5 | 1 | | | |
| 1 | | | | | | | | 9 |
| | | | 3 | 9 | 2 | | 8 | |
| 2 | | 9 | 5 | | 4 | 1 | 3 | |
| 4 | | | 7 | | 3 | | | 5 |
| | 1 | | | | | 8 | | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 4 | 1 | 3 | 5 | 9 | 8 | 6 |
| 5 | 3 | 9 | 6 | 7 | 8 | 1 | 4 | 2 |
| 8 | 1 | 6 | 2 | 4 | 9 | 5 | 3 | 7 |
| 3 | 4 | 1 | 5 | 9 | 7 | 6 | 2 | 8 |
| 9 | 8 | 2 | 3 | 6 | 4 | 7 | 5 | 1 |
| 7 | 6 | 5 | 8 | 1 | 2 | 3 | 9 | 4 |
| 1 | 5 | 7 | 4 | 2 | 3 | 8 | 6 | 9 |
| 4 | 9 | 8 | 7 | 5 | 6 | 2 | 1 | 3 |
| 6 | 2 | 3 | 9 | 8 | 1 | 4 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகத்தில் உதவி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றும்

செல்வி ச. கோதை

அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னையா சதாசிவம்**

கடந்த 23.03.2013 சனிக்கிழமை இறைபதம் அடந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ். மாவட்டச் செயலக நலன்புரி கழகம்.*

(34919) (45.6.7)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
20.10.1942

மறைவு
26.02.2013

**திருமதி திலகவதி இராசரத்தினம்**

கடந்த 26.02.2013 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள். ஒத்தாசைகள் புரிந்தோருக்கும் தொலைபேசி மூலமும், இறுதிக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தி அனுதாபம் தெரிவித்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (28.03.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(34920)(2.6)

- குடும்பத்தினர்.


## அதிபருக்கு சிங்கள மோகம்: மக்கள் விசனம்

வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற சிங்கள மொழியில் இசைக்கப்பட்ட தாலாட்டுப் பாடலுடனான நடனம் குறித்து விசனம் தெரிவித்துள்ள பெற்றோரும் நலன் விரும்பிகளும் அதிபருக்கு ஏற்பட்டுள்ள சிங்கள மோகம் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

விழாவில் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு இசைக்கப்பட்ட தலாட்டுப் பாடலுடனான சிறுவர்களின் நடன நிகழ்வும் இடம் பெற்றது.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்று அரசு அறிவித்திருந்ததற்குப் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில் அதிபர் சிங்கள மொழியில் சிறுவர்களின் நடனத்தை அரங்கேற்றியது பெற்றோர் மத்தியில் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.(வ-115)


# மரண அறிவித்தல்

## இறப்பியேல் பேரின்பநாயகம்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், பலாலியை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.157, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியேல் பேரின்பநாயகம் (27.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலோமினா மேரி றோஜின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் அன்ரன் ஜெயக்குமார் (லண்டன்), கிறிஸ்ரினா, வசந்தராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமாரன் (கங்கா), ஐறின் மரியறோஸ் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற லில்லிறோஸ், கென்றிகூப்பர், ஜெயசீலி புனிதமலர், மதுரநாயகம், அருமைநாயகம், இராசநாயகம், சுகிர்தமலர் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான EM.ஜோசேப், M.ஜோசப்புமேரி ஜீலியற் மற்றும் சூரியகுமாரி, றீற்ரா மேரி றோஸ், அனிற்றா மேரிறோஸ் (டென்மார்க்) அலெக்ஸ் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், தேவதாஸின் (டென்மார்க்) சகலனும், தபித்தா ஐறின் (ஸ்ரெபி), றொபேட் அனோஜ் (சச்சின்), ஏஞ்சலா, ஜோர்ஜ் கிளார்க் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி இன்று (28.03.2013) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இலக்கம் 157, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள (ஐந்து சந்தி அருகில்) அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்க ஆராதனை முற்பகல் 11 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம் பெற்று புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கா. ஜெயக்குமாரன் (கங்கா மருமகன்)
இல.157, நாவலர் வீதி,
(ஐந்து சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.

(34921)(2.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் கட்டட அடிக்கல் நடும் விழா நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆடியபாதம் வீதி திருநெல்வேலி வடக்கில் இடம்பெற்றது. யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி என்.சிவராஜா மாற்றுவலுவுடையோருக்கான தொழிற்பயிற்சி, விற்பனை நிலையத்திற்கான இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடத்துக்கான அடிக்கல்லை நடுகிறார். (வ-ரி)

## சிங்கள மொழி கற்கை நெறி

அச்சுவேலி, மார்ச் 28

யாழ்.கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான சிங்களப் பாடநெறி அச்சுவேலி மத்தியகல்லூரியில் ஏப்ரல் முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அச்சுவேலி மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ள சிங்கள பாடநெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் மத்தியகல்லூரி அதிபர் அலுவலகத்தில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என சிங்கள பாட நெறி போதனாசிரியர் என்.நாகராசா அறிவித்துள்ளார். (த-11)

## இயேசுவுக்கு முதலிடம்

லியோனார்ட் டாவின்சி, "இரா உணவு" என்ற உலகப் புகழ் பெற்ற "கிறிஸ்துவின் இரவு உணவு" படத்தை வரைந்திருக்கிறார். கிறிஸ்துவினுடைய சாயலை மிகவும் கவனத்துடன் வரைந்தார். விண்ணக அருள் ஒளி வழிந்தோடி நிற்கும் கிறிஸ்துவின் முகச் சாயலையும் கிறிஸ்து தமது வலக்கையில் திராட்சை இரசம் நிரம்பிய பான கலத்தையும் பிடித்திருப்பதையும் இந்தப் படத்தில் காணலாம். நோன்போடும் செபத்தோடும் மூன்று ஆண்டுகள் எடுத்து இதை வரைந்து முடித்தார். மிக்க மகிழ்ச்சியுற்றார். தனது நெருங்கிய நண்பனை அழைத்து அப்படத்தை அவருக்குக் காட்டி அவருடைய கருத்தைக் கேட்டார். அதற்கு அந்த நண்பர் "இயேசுவின் கரங்களிலிருக்கும், இரசம் நிறைந்த இரசப்பாத்திரம் மனதை மிகவும் கவரக்கூடியதாக இருக்கின்றது" என்றார். லியோனார்ட் டாவின்சி ஒரு வினாடி கூட காத்திராமல் அதை அழிப்பதற்கு ஒரு பிரஷை கலர் பெட்டியில் அழுத்தினார். இதைக் கண்ட அந்தநண்பன் மனதைத் தொட்டு போனார். லியோனார்ட், தன் நண்பனைப் பார்த்து,




"இயேசுவைக் காட்டிலும் அதிக கவர்ச்சியான எதுவும் இந்தப் படத்தில் இருக்கலாகாது" என்று கூறினார். யேசுவுக்கு யாரெல்லாம் வாழ்வில் முதலிடம் கொடுக்கிறார்களோ அவர்களின் வாழ்வு இறைவனின் ஆசீர் பெற்று செழித்தோங்கும். ஏனெனில் அவர் தனது வாழ்வை மனுக்குலம் அனைத்துக்காகவும் தியாகம் செய்ததோடு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வாழ்வில் வெற்றி கண்டார்.

பெரிய வியாழக்கிழமை பாஸ்கா திரிதினத்தின் முதலாம் நாளாகும். இந்த நாளில் யேசு பல முக்கியமான, உலகிற்கு என்றும் புதுவாழ்வு கொடுத்து மனித வாழ்வை என்றும் சோர்வடையாமல் உயர்த்தி நிற்பதற்கு முக்கியமான பல திரு நிகழ்வுகளை நிகழ்த்தினார். இறுதி இராப் போசனத்தின் ஆரம்பத்தில் தனது சாதாரண, பாமர மனிதராகிய சீடரின் பாதங்களை கழுவினார். இது அடிமைகள் மட்டும் செய்கின்ற செயல். ஆனால் யேசு கற்பிக்கும் பாடம் ஒருவர் ஒருவரின் பாதங்களை கழுவ வேண்டும். அதாவது ஒருவர் ஒருவருக்கு தாழ்மையோடு சேவை செய்ய வேண்டும் என்று கூறினார். இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார். இதன் வழியாக தனது பிரசன்னத்தை உலகிலே விட்டுச் சென்றார். இந்த திவ்விய நற்கருணை எமக்கு என்றும் ஆறுதலாக, அருமருந்தாக இருக்கிறது. இயேசு குருக்களை ஏற்படுத்தினார். தனது அப்போஸ்தலர்களை குருக்களாக ஏற்படுத்தி அவர்கள் வழியாக தொடர்ந்து குருக்களை திருச்சபையில் அபிஷேகம் செய்கிறார். குருக்கள் யேசுவின் கல்வாரித் திருப்பலியை நாளாந்தம் நிறைவேற்றி நற்கருணையையும் ஏற்படுத்தி மக்களுக்கு வழங்குகின்றனர். மேலும் குருக்கள் மறைமாவட்டங்களில் பங்குத் தளங்களில் போதிக்கும் பணி, புனிதப்படுத்தும் பணி, வழிநடத்தும் பணி என முப்பெரும் பணிகளை ஆற்றுகிறார்கள். யேசு ஒரு புதிய கட்டளையை சீடருக்கு கொடுக்கிறார். "நான் உங்களை அன்பு செய்தது போல நீங்கள் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்" யேசு எல்லாவற்றிலும் அடிமையின் அளவுக்கு தன்னை தாழ்த்தினார். எனவே இறை தந்தை அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார்.

# ஆகக் குறைந்த சம்பளம் 9,500

## ■ கண்டிப்பாக தனியார் நிறுவனங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 28

தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் குறைந்த பட்ச அடிப்படைச் சம்பளமான 9 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் குறைவாக சம்பளம் பெறுபவர்களாயின் அது தொடர்பில் தொழில் திணைக்களத்தில் முறையிடலாம்.

அவ்விதம் முறையிடுவதன் மூலமாக அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதோடு அதற்கு முன்னரான இழப்பீட்டுத் தொகையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடமாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு கடந்த வருடம் வரை குறைந்த பட்ச அடிப்படைச் சம்பளமாக 8 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டு வந்தது. இந்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டத்தில் தனியார் நிறுவன பணியார்களுக்கான அடிப்படைச் சம்பளம் 1000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

தனியார் நிறுவனங்களில் சில வகையான நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 8 ஆயிரத்து 500 ரூபாவாகவும் இன்னும் சில வகையான தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 9 ஆயிரத்து 500 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

புதிய நடைமுறையின் படி 8 ஆயிரத்து 500 ரூபா அடிப்படைச் சம்பளம் பெறுபவர்களுக்கு 9 ஆயிரத்து 500 ரூபாவும், 9 ஆயிரத்து 500 ரூபா அடிப்படைச் சம்பளம் பெறுபவர்களுக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் அடிப்படைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

இது தவிர பணியாளர்களுக்கு மேலதிக வேலை நேரக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். இவை உரிய முறையில் கிடைக்கப் பெறாத பணியாளர்கள் தொழில் திணைக்களங்களில் முறைப்பாடு செய்யலாம். அல்லது தொழில் திணைக்களத்துக்கு அறிவிக்கமுடியும்.

அவ்வாறு முறைப்பாடு செய்வதனூடாக பாதிக்கப்படும் பணியாளர்களுக்குரிய அடிப்டைச் சம்பளத்தை பெற்றுத் தர முடிவதோடு முன்னர் அடிப்படைச் சம்பளத்தைப் பெறாத காலத்துக்குரிய இழப்பீட்டுத் தொகையையும் பெற்றுத் தர முடியும்

எனவே தனியார் நிறுவன உரிமையாளர்கள் உரிய அடிப்படைச் சம்பளத்தை வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் பணியாளர்கள் எமக்கு அறியத் தரவும்- என்றார் கனகேஸ்வரன். (4)



வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார் வல்வெட்டித்துறைப் பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானப்பணிகளை மேற்கொண்டனர். நிலையப் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.குமரசிங்கா தலைமையில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பசந்த காமகே முன்னிலையில் 35 ஆண், பெண் பொலிஸார் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (வ-253)

## மகளிர் தின விழா

நவாலி, மார்ச் 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர்தின விழா இன்று வியாழன் பி.ப. ஒரு மணிக்கு பிரதேசசெயலர் க.முரளீதரன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் யாழ்.பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளருமான கோசலைமதனும், சிறப்பு விருந்தினராக யாழ்.கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி செயலாளர் திருமதி வேதவல்லி செல்வரட்ணமும் கலந்து கொள்வார்கள். (வ-100)

## குருநகரில் வீடு உடைத்து திருட்டு

வலி.வடக்கு மார் 28

குருநகர் மாடி வீட்டுத் தொகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இதுகுறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

குருநகர் மாடி வீட்டைச் சோந்த பத்தமராசா கலைமகள் என்பவர் செய்துள்ள முறைப்பாட்டில் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் ரூபா பெறமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

குறித்த களவு சம்பந்தமாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றபோதிலும் இதுவரையும் யாரும் கைது செய்யப்படவில்லை.

எனினும் குறித்த சம்பவம் சம்பந்தமாக பொலிஸார் யாழ். நீதிமன்றில் நேற்று முன் தினம் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (வ-86)

## பூங்காவனம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

நீர்வேலி வடக்கு காளி அம்மன் ஆலய பூங்காவனத் திருவிழா நாளை வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு விசேட ஆராதனையுடன் ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு அம்பாள் திருவீதியுலா வருவார். (வ)

# யாழ். சிவில் பாதுகாப்புக் குழுவுக்கு அடையாள அட்டை இதுவரையில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்.மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பணம் செலுத்தியும், அவர்களுக்குரிய அடையாள அட்டைகள் இன்றுவரை வழங்கப்படவில்லை.

ஒரு பகுதியினருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுப் பின்னர் பாவனைக் காலம் நிறைவடைந்த போதும் அடையாள அட்டைகள் புதுப்பிக்கப்படவில்லை என்று சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ் மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி சிவில் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவும் இத்தகைய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

குறித்த கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள இளைஞர்கள் இதற்குச் தெரிவு செய்யப்பட்டனர்.

கிராம அலுவலரின் வழிப்படுத்தலில் அந்த உறுப்பினர்கள் செயற்பட்டு வந்தனர். வழிப்பறி, கொள்ளை எனக் குறித்த பகுதிகளில் நடைபெறும் அசம்பாவிதங்களைத் தடுக்கவும், கண்காணிக்கவும் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர். [illegible] பாதுகாப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகளிலும் பொலிஸாருடன் இணைந்து இந்த உறுப்பினர்கள் செயற்பட்டு வந்தனர்.

அவர்களுக்கு வருடாந்தம் அடையாள அட்டை புதுப்பிக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்திருந்தனர். அதன்படி ஒருவரிடமிருந்தும் தலா 200 ரூபா வீதம் பொலிஸார் கடந்த 2011 ஆம் ஆண்டு பெற்றிருந்தனர். அவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தாம் கொடுத்த பணத்துக்கு என்ன நடந்தது என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தவிர அடையாள அட்டைகள் மிகுதிப் பேருக்கு வழங்கப்பட்டன. ஆனால் இந்த அடையாள அட்டைகள் கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதியுடன் வலுவிழந்துவிட்டன.

அதன் பின்னர் அந்த அடையாள அட்டைகளை புதுப்பிக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.

அடையாள அட்டைகளின் பாவனைக்காலம் நிறைவுடைந்ததிலிருந்து பொலிஸார் ரோந்துப் பணியில் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள் ஈடுபடுத்துவதும் அரிதாகிவிட்டது.

எனவே தமது அடையாள அட்டைகளைப புதுப்பிக்குமாறும் இதுவரை அட்டை வழங்கப்படாதவர்களுக்கும் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (த-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் காணி தேவையானோர் விண்ணப்பம் சமர்ப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடமாகாணத்தில் காணி தேவையாகவுள்ளவர்கள், காணிக்குரிய ஆவணங்கள் இல்லாதவர்கள், காணி தொடர்பில் பிரச்சினையுடையவர்கள், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் காணி தொடர்பான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு காணி ஆணையாளர் நாயகம் பி.ஆர். ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரின் பின்னர் வடமாகாணத்தில் அரச காணி தொடர்பாக மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காகக் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் விசேட துரித வேலைத் திட்டத்தை வட மாகாணக் காணி ஆணையாளர், அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஆரம்பித்துள்ளது.

இதன் பிரகாரம் சட்ட ரீதியாக அல்லது தற்பொழுது அரச காணியை வைத்திருப்பவர்கள், அரச காணியில் அத்துமீறல் செய்திருந்தால் அல்லது தற்போது அத்துமீறியிருந்தால், வடமாகாணத்தில் வசித்துக் கொண்டுள்ள நிலையில் அரச காணியைக் கோரியுள்ளவர்கள் அல்லது உரிமையாக்க விரும்புபவர்கள் சம்பந்தப்பட்ட காணி தொடர்பாக ஏதேனும் பிரச்சினையை எதிர்கொண்டிருந்தால் அந்தப் பிரச்சினையைக் காணி அமைந்துள்ள கிராம சேவையாளர் ஊடாக பிரதேச செயலகத்துக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். அல்லது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் காணி விடயத்துக்கான குறித்த படிவத்தைக் கிராம சேவையாளர் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி படிவத்தைக் காணி ஆணையாளர் நாயகத்தின் இணையத்தளமான www.landcommdept.gov.lk என்ற முகவரிக்குச் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

பிரச்சினைகளைப் பிரதேச செயலகம் ஏற்றுக்கொண்டதும் அதற்கான பற்றுச்சீட்டு பதிவிலக்கத்துடன் வழங்கப்படும் என்றார். (த-5)

## சைவ வாலிபர் சங்க பரிசளிப்பு விழா

அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் 95 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டமும் பரிசளிப்பு விழாவும் சங்கத் தின் தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக சின்மயா மிஷன் இலங்கை - யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்யா சுவாமிகள் கலந்து கொண்டார். சங்கத்தால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் சின்மயா மிஷன் வெளியீடாக வெளிவந்த சமய நூல்களும் விழாவில் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. சமயப் பெரியோர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பெருந்திரளானோர் விழாவில் கலந்துகொண்டனர்.(வ)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.




# போத்தல் கள் நிலையம் நாவற்காட்டில் திறப்பு

வரணி, மார்ச் 28

வரணி தனிவளை நாவற்காட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை போத்தல் கள் அடைப்பு நிலையம் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.வீ.கே. அருந்தவநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

ஆ.சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி க.பிரதாபன், நாவற்காடு கிராம அலுவலர் நா.இராசகுமாரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.இரத்தினசிங்கம், தென்மராட்சி ஈழமக்கள் ஜனநாயக்கட்சி அமைப்பாளர் அலெக்சாண்டர் சாள்ஸ், பனை அபிவிருத்திச் சபை விரிவாக்க உத்தியோகத்தர் கோ. பாலகிருஸ்ணன் மற்றும் பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-122)

# தங்கம் கடத்திய இலங்கையர் விமான நிலையத்தில் கைது

## திருச்சியில் சம்பவம்

இலங்கையில் இருந்து திருச்சிக்கு தங்கம் கடத்திச் சென்ற இலங்கை நபர் ஒருவர் திருச்சி விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து இந்திய ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை, கொலன்னாவைப் பகுதியைச் சேர்ந்த முகமது கான் என்பவரின் மகன் முகமது இத்தியாஸ் (48 வயது). இவர், சுற்றுலா பயணிகள் கடவுச் சீட்டில் அடிக்கடி தமிழ்நாடு வந்து சென்றுள்ளார்.

கடந்த ஆண்டு இலங்கையில் இருந்து பெங்களூருக்கு தங்கம் கொண்டு செல்லும்போது, விமான நிலைய சுங்க அதிகாரிகள் இத்தியாசை கைது செய்தனர். அவரது கடவுச் சீட்டில் தடை முத்திரையிடப்பட்டது.

இந்தநிலையில் சென்னை வந்த இத்தியாஸ் கடவுச்சீட்டில் போலி முத்திரையிட்டு இலங்கை சென்றார். நேற்று முன்தினம் 25 பவுண் தங்கத்துடன் திருச்சி வந்தபோது சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

அதிகாரிகள் தங்கத்தை பறிமுதல் செய்து விமான நிலையப் பொலிஸாரிடம் அவரை ஒப்படைத்தனர். விமான நிலைய பொலிஸார் அவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் - என்றுள்ளது. (வ)

# இளைஞர் சேவைகள் மன்றத்தில் யாழ்ப்பாணத்தில் 400 கழகங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்டத்தில் 400 இளைஞர் கழகங்கள் தற்போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் இ.ஈஸ்வரராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இளைஞர்களின் முன்னேற்பாட்டுச் செயற்றிட்டங்களை முன்னெடுத்துவரும் இளைஞர் சேவைகள் மன்றம் கிராம ரீதியிலான கழகங்கள் ஊடாகவே அதனை விரிவுபடுத்தி வருகிறது.

யாழ். மாவட்டத்தில் தற்போது 400 இளைஞர்கழகங்கள் எமது மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தொழில் வாய்ப்பொன்றை எதிர்பார்ப்பவர்களாக உள்ளனர்.

இவர்கள்குறிக்கப்பட்ட 4,5 வருடங்கள் இவ்வாறு காத்திருக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

ஏனெனில் தமது கல்வித் தகைமைக்கு ஏற்ப தொழில் வாய்ப்புகள் கிடைக்கவேண்டும் என்பதாலேயே இந்தக் காத்திருப்புத் தொடர்கிறது. இதனை மாற்றியமைத்து இளைஞர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதே தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தற்போதைய வேலைத்திட்டமாகவுள்ளது.

மன்றத்தில் பதிவு செய்துள்ள கழகங்கள் ஊடாக கிராம மட்ட ரீதியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.- என்றார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கடதாசி நிறுவன காணியை அபகரிக்க திட்டம்

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மார்ச் 28
வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள தேசிய கடதாசி நிறுவனத்தை மூடிவிட்டு, அந்த நிறுவனம் அமைந்துள்ள காணியைச் சுவீகரிக்க அரசியல்வாதிகள் சிலர் திட்டமிட்டனர்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

வாழைச்சேனை தேசிய கடதாசி ஆலைக்குச் சென்ற அவர் ஆலையின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த தேசிய கடதாசி நிறுவனத்தில் எனது தந்தையின் உழைப்பும் அடங்கியிருப்பதால் இங்கு இதுவரை காலமும் என்ன நடந்தது என்று எனக்கு தெரியும்.

இந்த கடதாசி ஆலையில் சகல இனங்களும் ஒற்றுமையாகப் பணிபுரிகின்றனர். குறித்த கடதாசி ஆலையை கட்டியெழுப்புகின்றபோது மூவின இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையும் இங்கிருந்து கட்டியெழுப்பப்படும்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில், இந்தத் தேசிய கடதாசி ஆலை தொடர்பாக பலர் பல கேள்விகளைத் தொடுத்தபோது அவை தொடர்பாக நான் சிறந்த விளக்கங்களைக் கொடுத்துள்ளேன்.

இந்தப் பிரதேசத்திலுள்ள அரசியல்வாதிகள் கடதாசி நிறுவனத்தை மூடிவிட்டு காணியை சுவீகரிக்க திட்டமிட்டிருந்தனர்.

ஜப்பான் தூதரக அதிகாரிகளுடன் விசேட பேச்சை நடத்தி இந்தக் கடதாசி நிறுவனத்தை புனரமைப்புச் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளேன். இந்தப் பூமி யாருக்கும் சொந்தமல்ல. வாழும் வரை மட்டுமே எமக்குச் சொந்தமானது. எனவே எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.-என்றார். (ச)



## ஆலய திருப்பணி வேலை குறித்த விசாரணை ஏப்ரலுக்கு ஒத்திவைப்பு

வலி.தென்மேற்கு, மார்ச் 28
ஆலயத்தில் ஆரம்பிக் கப்பட்ட திருப்பணி வேலையை இடைநிறுத்தி வைத்துள்ள மல்லாகம் நீதிவான் மேல் விசாரணையை அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் பாலஸ்தானம் செய்யப் பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்தன.

ஆலயத்திலுள்ள இராஜ கோபுரத்துடன் இணைந்த வெளிமண்டபத்தின் திருப்பணி வேலைகளை மேற்கொள்வதில் ஆலய தர்மகர்த்தா சபையினருக்கும் ஆலயத்தின் 12 ஆம் திருவிழா உபயகாரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு பொலிஸ் நிலையம் வரை சென்றது.

இது குறித்த விசாரணையை மேற்கொண்ட மானிப்பாய் பொலிஸார், இரு பகுதியினரும் இணக்கப்பாட்டுக்கு வராததால் இந்தப் பிரச்சினையை உடனடியாக மல்லாகம் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இரு பகுதியினரையும் விசாரணை செய்த நீதிவான் முன் மண்டபத்தின் திருப்பணி வேலையை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டு மேல் விசாரணையை அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளார்.

இதேவேளை, ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணி வேலை தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலரால் நடத்தப்பட்ட விசாரணையின் போதும் தீர்வு எட்டப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-115)

## கட்சிச் செயற்பாட்டிலிருந்து நானாகவே விலகினேன்

### பிரதீப் மாஸ்டர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 28
கட்சி எம்மை நீக்கும் முன்னர் நாமாகவே கட்சியின் செயற்பாட்டினை இடைநிறுத்திக் கொண்டோம்.

இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர் எட்வின் கிருஸ்ணானந்தராஜா (பிரதீப் மாஸ்டர்) தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் இருந்து அவரும், அவருடைய சகோதரர் கைலேஸ்வரராஜாவும் நீக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவர் என்னை படிப்படியாக ஓரங்கட்டி கட்சிக்குள் எனக்கிருந்த அதிகாரங்களை குறைத்து வந்தார். இந்தநிலைமையை அவதானித்த நான் பல கட்சிக் கூட்டங்களில் என்னை ஓரங்கட்டும் செயற்பாட்டைக் கைவிடுமாறு பலமுறை வேண்டிக் கொண்டேன்.

எனினும் கட்சித் தலைவர் என்னை ஓரங்கட்டி மக்கள் மத்தியிலிருந்து வெளியேற்றும் செயற்பாட்டை தொடர்ச்சியாக செய்து வந்தார். அத்தோடு கட்சியில் எனக்கிருந்த அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டது.

எனவே எதிர்வரும் காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளோம்.-என்றார். (ச)

## சுயதொழிலை ஊக்குவிக்க கிழக்கில் விசேட வேலைத் திட்டம்

மட்டக்களப்பு,மார்ச் 28
மட்டக்களப்பு,வாழைச்சேனை மற்றும் வாகரை பிரதேச செயலர் பிரிவுகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பை முன்னெடுக்க வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை நடைபடுத்துவது தொடர்பான கூட்டம் வாழைச்சேனை மற்றும் வாகரை பிரதேச செயலகங்களில் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவரும், கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் பட்டதாரி பயிலுநர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது.

தும்புத் தொழில், பாதணிகள் தயாரித்தல், மட்பாண்ட பொருள்கள், பனம் பொருள்கள், மெழுகுதிரி தயாரித்தல், மீன்பிடி போன்ற சுய தொழில்களில் ஈடுபடுகின்ற மக்களை அடையாளம் கண்டு அவர்களை அந்தத் துறையில் ஊக்கப்படுத்துவதற்கான திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தச் சுயதொழில்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் சுயதொழிலில் ஈடுபடுகின்ற வீடுகளுக்குச் சென்று பட்டதாரி பயிலுநர்கள், இது குறித்த தகவல்களைப் பெற்று பிரதேச செயலகங்களில் ஒப்படைத்துள்ளனர். (ச)

## தேங்காய் விலை திடீரென குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 28
யாழ். குடாநாட்டில் தேங் காயின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளனர்.

குறிப்பாக சாவகச்சேரி, கொடிகாமம், திருநெல்வேலி, சுன்னாகம், சங்கானை மற்றும் யாழ்.நகர் போன்ற மரக்கறி விற்பனை சந்தைகளில் தேங்காய்க்கு கிராக்கி அதிகரித்துள்ளது. யாழ். நகர் சந்தையில் நேற்று முன்தினம் 50 ரூபாவாக விற்கப்பட்ட தேங்காய் நேற்றுச் சடுதியாக 60 ரூபாவாக அதிகரித்துள்ளது.

தேங்காய் ஒன்றின் விலை 80 ரூபா வரைக்கும் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.

புத்தளத்தில் இருந்து தேங்காய் எடுத்து வரப்படுவது வீழ்ச்சியடைந்ததே விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணம் என்று வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

தேங்காயின் கடந்த போக உற்பத்தியும் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தென்னைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-17)

## அச்சுவேலி வைத்தியசாலைக்கு புதிய அதிகாரி

அச்சுவேலி, மார்ச் 28
அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய மருத்துவர் சி.விமலேந்திரன் குருநகர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவர் சி.விமலேந்திரன் 12 வருடங்கள் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேவையாற்றியுள்ளார்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக மருத்துவர் சீ.கணேசலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றியவராவார். (த-11)

## நெல் உற்பத்தியில் 20% சம்மாந்துறை தருகிறது

கொழும்பு,மார்ச் 28
சம்மாந்துறை பிரதேசம் நாட்டின் நெல் உற்பத்தியில் 20 வீதமான நெல்லை உற்பத்தி செய்கின்றது.

நாட்டில் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்தில் 110 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நெல் ஆராய்ச்சி நிலையத்தை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்மாந்துறையில் அமைக்கப்பட்ட நெல் ஆராய்ச்சி நிலையம் அம்பாறையில் பல புதிய கண்டு பிடிப்புக்களையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ள உதவும்.

விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி தமது தொழிலில் நட்டங்களை அனுபவித்து வருகின்றனர். இதனை மாற்றியமைக்கவே ஜனாதிபதி புதிய ஆலேசனைகளை முன்வைத்துள்ளதுடன், கூடுதலான நிதியையும் ஒதுக்கி வருகின்றார்.

இந்த ஆராய்ச்சி நிலையம் அம்பாறையில் முன்மாதிரியான நிலையமாக செயற்பட்டு, விவசாய பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்.

அதற்காக நல்ல திட்டமிடல்களை மேற்கொள்ள அதற்குத் தேவையான ஆராய்ச்சி அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.-என்றார். (ச)

## யாழ். குடாநாட்டு விவசாயிகள் சிறுதானிய செய்கையில் ஆர்வமிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்.குடாநாட்டில் காலம் கடந்து பெய்த மழையால் சிறுதானியச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை.

அண்மையில் பெய்த மழையால் வயல் நிலங்களில் வெள்ளம் தேங்கியதால் சிறுதானியச் செய்கையை மேற்கொள்ள முடியாது விவசாயிகள் சிரமத்தை எதிர்நோக்கினர்.

தற்போதும் தாழ்ந்த வயல் நிலங்களில் வெள்ளம் தேங்கிக் காணப்படுவதால் சிறுதானிய செய்கைக்கான காலம் கடந்த நிலையில் விவசாயிகள் அதிகமானோர் இச்செய்கையை கைவிட் டுள்ளனர்.

எனினும் தென்மராட்சிப் பிரதேசத்தில் சில வயல் நிலங்களில் விவசாயிகள் குறித்த பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். வலிகாமம் மேற்கு, வலி.கிழக்கு ஆகிய பிரதேச வயல்களில் அதிகமான விவசாயிகள் சிறுதானிய செய்கையில் ஆர்வம் காட்டவில்லை.

இதேவேளை காலம் கடந்து பெய்த மழையின் தாக்கமே சிறுதானியப் பயிர்ச் செய்கை பெரியளவில் பாதிக்கப்பட்டதற்கு காரணம் என்று விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-17)

எனினும்
தென்மராட்சிப்
பிரதேசத்தில் சில
வயல் நிலங்களில்
விவசாயிகள் குறித்த
பயிர்ச் செய்கையை
மேற்கொண்டு
வருகின் றனர்.

## தென்மராட்சி வலயத்தில் விரைவில் கணிதபாட வினாவிடை போட்டி

தென்மராட்சி,மார்ச் 28
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக் கிடையிலான வலய மட்ட கணித பாட வினாவிடைப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

உரிய விண்ணப்பப் படிவங்களை ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருள்களுக்கு சந்தை வாய்ப்பு அதிகரிப்பு

## எதிர்ப்புக்கு மத்தியிலும் வழங்குகிறது இந்தியா

கொழும்பு,மார்ச் 28

இந்தியாவுக்கு இலங்கையின் ஆயத்த ஆடைகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி ஏற்றுமதி செய்வதற்கான பரந்துபட்ட சந்தை வாய்ப்பை இந்தியா அதிகரித்துள்ளதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கை அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, 50 லட்சம் பருத்தி ஆடைகள் வரை இந்தியாவுக்குத் தீர்வையின்றி இறக்குமதி செய்யலாம் என்ற கட்டுப்பாட்டை இந்தியா தற்போது 80 லட்சம் பருத்தி ஆடைகள் வரை அதிகரித்துள்ளதாக இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு கடந்த ஆண்டு இந்திய வர்த்தக, தொழில் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் ஆனந்த சர்மா அவர்கள் சென்ற போது, இந்த ஆடை ஏற்றுமதியில் இருக்கும் கட்டுப்பாட்டை விலக்குமாறு இலங்கை அரசால் கேட்கப்பட்டதாகவும்,

அதற்கிணங்கவே 80 லட்சம் பருத்தி ஆடைகள் வரை தீர்வையற்ற வகையில் ஏற்றுமதி செய்ய இலங்கைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தல் முறைப்படி, இலங்கை வணிகத் திணைக்களத்தின் தலைமை இயக்குநரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தியத் தூதரகம் கூறியுள்ளது.

அத்துடன் தெற்காசிய சுதந்திர வணிக உடன்படிக்கையின் அடிப்படையில் துணி வகைகளுக்கான தீர்வை கூட இந்தியாவினால் இலங்கை இறக்குமதிகளுக்கு 11 வீதத்தில் இருந்து 5 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான சுகாதாரத் தரத்தை உறுதி செய்யும் இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரத்தின் காலத்தை இந்தியா 6 மாதங்களில் இருந்து ஒரு வருடமாக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் இலங்கை ஏற்றுமதிகளுக்கு ஒரு பரந்துபட்ட சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலேயே இந்தச் சலுகைகளைச் செய்துள்ளதாகவும் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் கூறியுள்ளது.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழகத்தில் இருந்து ஆளும் அ.தி.மு.க. உட்பட பல தரப்பினரும் கோரிவரும் நிலையில் இந்திய தூதரகத்தின் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது. (த)

# தமிழர்கள் இலங்கையில் அமைதியாக உள்ளனராம்

## முத்தையா முரளிதரன் கூறுகிறார்

இலங்கையில் கடந்த காலங்களில் போர்ச்சூழல் இருந்தது.

ஆனால் தற்போது தமிழர்கள் இலங்கையில் அமைதியாகவே வாழ்கின்றனர். இதனை இந்திய அதிகாரிகள் இலங்கையில் தமிழர்களாகிய நாங்கள் எப்படி வாழ்கிறோம் என்பதை வந்துபார்க்க வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் நடந்ததை மறக்க வேண்டும். தற்போதைய நிலையில் மற்றொரு போர்ச் சூழலை இலங்கைத் தமிழர்கள் விரும்பவில்லை என்று குறிப்பிட்டுள்ள முரளிதரன், ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடும் இலங்கை வீரர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை வருத்தமளிக்கிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியன் பிரீமியர் லீக் 20/20 கிரிக்கெட் போட்டியின் 6 ஆவது சீசனில், சென்னையில் நடைபெற உள்ள லீக் ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் விளையாடமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து கூறியுள்ள றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் விளையாடும் முரளிதரன் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் 'இது கிரிக்கெட்டுக்கு வருத்தமான நாள்' என்றும் அவர்கூறியுள்ளார். எனினும், இது அரசின் முடிவு என்னும்போது அரசே எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியவில்லை என்னும் நிலையில் நாங்கள் எச்சரிக்கையுடன் இருப்பதே நல்லது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து கூறிய முரளிதரன், 'இலங்கைத் தமிழராகிய தான் கடந்த 20 ஆண்டுகளாக இலங்கை அணிக்காக விளையாடியுள்ளதாகவும், ஒரு தமிழனாக இலங்கையில் தமக்கு எந்தவித பிரச்சினையும் ஏற்பட்டதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.தாம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்த சமயங்களில் இலங்கை அரசும், இலங்கை கிரிக்கெட் சபையும் தமக்கு ஆதரவாகதான் செயல்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

எங்களை அனுமதித்தால் நாங்கள் மறுக்காமல் சென்னையில்விளையாடுவோம் என்றும் சென்னை தமக்கு இரண்டாவது வீடு. ரசிகர்களுக்காக மட்டுமே நாங்கள் கிரிக்கெட் விளையாடுகிறோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# திருமண மண்டபம் மீது ஆவரங்காலில் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஆவரங்கால் பகுதியில் உள்ள திருமண மண்டபமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விசமிகள் சில ரால் சேதமாக்கப்பட்டுள் ளது.

ஆவரங்கால் வரலாறு தொடர்பான நூலில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய சில கருத்துக்களால் எழுந்த முரண்பாட்டை அடுத்தே குறித்த மண்டபம் தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணியளவில் மண்டபத்தினுள் புகுந்த ஒரு குழுவினர் அங்கிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை தீ மூட்டி கொளுத்தினர். இன்னொரு மோட்டார் சைக்கிளை அடித்து நொருக்கினர். அத்துடன் 50 இற்கும் மேற்பட்ட கதிரைகள் முற்றாக சேதமாக்கியதுடன், மண்டபத்தின் கதவுகள் மின்சார உபகரணங்கள், கண்ணாடி யன்னல்கள் என்பவற்றைச் சேதமாக்கினர்.

இதன்போது மண்டப ஆலோசனைக்குழு உறுப்பினர் ஒருவரையும் இந்தக் குழுவினர் அடித்துக் காயப்படுத்தியுள்ளனர்.

குறித்த தாக்குதல் மண்டபத்துக்கு பல லட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேல் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ங-11)


## மரண அறிவித்தல்

### கிறிஸ்துதாஸ் தேவரத்தினம்



நவாலி தெற்கு, நவாலியைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கிறீஸ்துதாஸ் தேவரத்தினம் 26.03.2013 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறீஸ்துதாஸ் - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் இரத்தினதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமி தம்பதியரின் அருமை மருமகனும் தேவமனோகரி (லண்டன்), தேவசுதந்தரி (இத்தாலி), தேவனேஸ்வரி, தேவறமணி, தேவசுதர்ஷினி (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி), தேவகலா (இத்தாலி), தேவதர்ஷன் (ஆசிரியர், வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தன் (லண்டன்), சபா (இத்தாலி), லூயீஸ், சுசந்தன், அமுதன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் பிரண்டன் (லண்டன்), ஷாரோன் (லண்டன்), ஆரோன் (இத்தாலி), டிறோன், ஷேறா, ஷாமிறா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெயசிங்கம், காலஞ்சென்றவர்களான ஜீவவதனா, யோகராஜா மற்றும் தேவவதனா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராசமணி, காலஞ்சென்ற மருதபிள்ளை, மற்றும் சின்னத்துரை, டாக்டர் இராஜரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.03.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி கொத்துக்கட்டி மயானத்துக்கு அடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
0213734188

(34954) (23- 6-)

தகவல்:
குடும்பத்தினர்.


# பொலிஸாரின் நடமாடும் சேவை

வலி. வடக்கு
மார்ச் 28

சுன்னாகம் பொலிஸார் மாதாந்தம் நடத்தும் நடமாடும்சேவை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலயத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எல். துஸ்மந்த தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் சிறிய பிணக்குகள் சம்பந்தமான விசாரணைகள் மற்றும் தொலைந்து போன தேசிய அடையாள அட்டைகள், சாரதிகள் அனுமதிப் பத்திரம் சம்பந்தமான முறைப்பாடுகள் உட்பட மருத்துவ சேவை என்பனவும் இடம்பெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு பயன் பெற முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-86)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03.10.1943 மறைவு 24.05.2010



அமரர்
வேலுப்பிள்ளை
ஆறுமுகம்
(திருவிளங்கம்)

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
ஆண்டுகள் நூறு சென்றாலும்—எம்
நினைவில் எண்ணங்களில் உணர்வுகளில்
நிலையாக வாழ்ந்து கொண்டிருப்பாய்
எம் ஐயா நீ.

(7360)(8.6)

விஸ்வநாதன் ஒழுங்கை,
அல்வாய் வடக்கு,
அல்வாய்,

குடும்பத்தினர்:
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

திருமதி கமலாம்பிகை பாலசுப்பிரமணியம்(கமலம்)



கொட்டியவளை பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை பாலசுப்பிரமணியம் (கமலம்) நேற்று (27.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியத்தின்(நடுவில்) அன்பு மனைவியும் ஸ்ரீமுருகானந்தன்(சுவிஸ்), காலஞ்சென்ற பாமதி மற்றும் ஸ்ரீபாலமயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற புவனேஸ்வரி(பெரியக்கா) மற்றும் அன்னலட்சுமி, திலகவதி, மனோகரிதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சிறீசாயி இல்லம்"
கொட்டியவளை,
பத்மமேனி, அச்சுவேலி.

தகவல்:
சர்வேஸ்வரன்(பெறாமகன்)

### ஞானமுத்து பிலோமினா



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், தேவாலய வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து பிலோமினா நேற்று (27.03.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தேவாலய வீதி,
மல்லாகம்.

(34953) (10,6)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப அதிபர்
**ஆ.க.இரவீந்திரன்** அவர்களின்
பாசமிகு தந்தை



## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)
கடந்த 25.03.2013 திங்கட்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் ஆறாத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(23..-16) ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.





ஒளிமயமான எதிர்காலத்துக்கான முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் !!

காலம் : 03 மாதங்கள் / 120 மணித்தியாலங்கள்

USAID | SRI LANKA

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| ICDL International Computer Driving Licence Just 6,500/= ONLY | e - Citizen Just 3,500/= ONLY |

மேலதிக தகவல்களுக்கு :
GATEWAY
LANGUAGE & ICT CENTRE Nelliyady
55,Pointpedro Road, Nelliyady.
Phone:- 0212262395 / 0215677606


# நகரசபை உறுப்பினரை தாக்கிய குற்றவாளி ஏன் கைதாகவில்லை?

## சபைத் தலைவர் உரத்துக் கேள்வி

தென்மராட்சி, மார்ச் 28

''சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் தாக்கப்பட்டு ஒரு வாரமாகியும் இதுவரை குற்றவாளிகளை பொலிஸார் கைது செய்யாதது ஏன்? தாக்கியவர்களை இனங்காட்டிய போதும் பொலிஸார் அவர்களைக் கைது செய்ய பின்னடிப்பது பொதுமக்களிடையே பொலிஸார் மீது வைத்துள்ள நம்பிக்கையை வீணடித்துள்ளது''-என்று விசனப்படுகிறார் சாவகச்சேரி நகர சபைத் தலைவர்.

நேற்று தென்மராட்சி பிரதேச சபை செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை இந்தக் கேள்வியை எழுப்பினார்.

''மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிக்கே தாக்கப்பட்டமைக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்காதிருப்பின் பொலிஸார் மீது பொதுமக்களுக்கு எவ்வகையில் நம்பிக்கை பிறக்கும்.

தன்னைத் தாக்கியவர்கள் மற்றும் அவருடன் இணைந்து செயற்பட்டவர்கள் அனைவரின் விவரங்களையும் தனது வாக்கு மூலத்தில் உறுப்பினர் கொடுத்து ஒரு வாரமாகியும் இதுவரை பொலிஸார் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யாதது கவலை தருகிறது- என்றார் தலைவர்.

தென்மராட்சி பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர். (உ-9)


2 மணித்தியாலத்தில் கணினி திருத்தம் (Computer Repair)
கணினிகள் 2 மணித்தியாலத்தில் திருத்தித் தரப்படும் விரைவு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
Quick Service
Computer Software and Hardware
GUNAA BEST PC T.P 0779086737
52, Hospital Road, Jaffna. (34639)

பாவித்த கணினிகள் மலிவு விலையில்
HP, DELL, IBM, P4 கணினிகள்
மலிவு விலையில்
விலை (Full Set) 15000/=
இருந்து
தொடர்பு: 0774444438


# ஐ.பி.எல். ரிக்கெட் தாமதமாக விற்பனை

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் கிடுக்குப் பிடியினால் சென்னையில் ஐ.பி.எல்.'ரிக்கெட்' விற் பனை நேற்றுப் புதன் கிழமை நண்பகலுக்குப் பின்னரே ஆரம்பமாகியுள்ளது.

சென்னையில் இடம்பெறும் ஐ.பி.எல்.ஆட்டங்களில் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் என்று யாரும் பங்கேற்கக் கூடாதென இந்தியக் கிரிக்கெட் சபைக்குப் பிரதமர் மன்மோகன் சிங் அறிவிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயல லிதா கடிதம் எழுதியிருந்தார்.

இதனையடுத்து ஐ.பி.எல்.அமைப்பின் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அவசரக் கூட்டத்தில் இலங்கை வீரர்கள் சென்னையில் இடம்பெறும் போட்டிகளில் பங்கெடுக்க மாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதும் ஆட்டம் இடம் பெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான 'ரிக்கெட்' விற்பனை நேற்று புதன்கிழமை காலை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் பொலிஸாரின் உத்தரவுக்கு அமைய 'ரிக்கெட்' விற்பனை சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகவில்லை.

இலங்கை வீரர்கள் பங்குபற்றமாட்டார்கள் என்ற உறுதிமொழி தமக்கு எழுத்து மூலம் இன்னமும் தரப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கப்பட்டால் மாத்திரமே 'ரிக்கெட்' விற்பனையை ஆரம்பிக்க அனுமதியளிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதன் பின்னர் நேற்று நண்பகல் குறித்த உறுதிமொழி எழுத்து மூலமாக வழங்கப்பட் டதைத் தொடர்ந்து 'ரிக்கெட்' விற்பனை தொடங்கியது. (த-5)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகில் கல்வி கற்கும் முதலாம் இரண்டாம் மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று ஆரியகுளம் டி.எம்.ஐ. நிறுவனத்தில் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக உடற்கல்வி டிப்ளோமா மாணவாகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்த மாணவாகளையும் கலந்துகொள்ளும் படி கோரப்பட்டுள்ளது. (ஐ -86)

# மரண அறிவித்தல்

## சுசிலாதேவி சுப்பிரமணியம்



கற்பக்குணை, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசிலாதேவி சுப்பிரமணியம் கடந்த (25.03. 2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுவேந்திரகுமார் (சுவிஸ்), சுகிந்தன் (லண்டன்), றாகினி (சுவிஸ்), றஜனி, சிவானந்தன், லதா ஆகியோரின் அன்புத் தாயும் றஜினா காவேரி (சுவிஸ்), ஈசன் (சுவிஸ்), கரன், லதாங்கி, பிரபா ஆகியோரின் மாமியும் இந்திராதேவி (கனடா), ராசேந்திரம் (வவுனியா), காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் தர்மதாஸ் (கந்தரோடை), மனோகரி (வவுனியா), ராசமோகன் (சங்குவேலி), தெய்வேந்திரம் (இளவாலை), சிவஞானம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்பக்குணை, உடுவில். (3 8 (23- 14-16) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவமணி சின்னராசா



இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி சின்னராசா நேற்று(27.03.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சின்னராசாவின் அன்பு மனைவியும், பத்மலோஜினி(கனடா), பத்மரஜனி(புனிதம்-சுவிஸ்), சிவசத்தியநாதன்(சிவா), பத்மரஞ்சினி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயும், கௌரியம்மா, பராசக்தி, காலஞ்சென்ற அருளாநந்தம் மற்றும் அருள்நந்தி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிதரன், இராசலிங்கம்(செட்டி), பிருந்தா, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மாமியும், தரணியா, நிரோஜன், லக்ஷாயினி, தரணியன், கிருத்திகா, துஷாந், மிவுத்திகா, பானுஜன், அபிநயா ஆகியயோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னத்தம்பிப் புலவர் வீதி,
இணுவில் கிழக்கு.
021 320 2483

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி செல்வராணி கிருஷ்ணசாமி



நயினாதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இத்தாலி பயல்லாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி செல்வராணி கடந்த 23-03-2013 சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அமராவதி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும், குமரகுரு (டென்மார்க்), குலேஸ்வரி (சுவிஸ்), குமரேசன் (இத்தாலி), குமரேஸ்வரி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயும், கெங்காதரன் (சுவிஸ்), நிஷாந்தினி (இத்தாலி), கார்த்திகேயன் (ஈசன்- இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, பாலசிங்கம் மற்றும் மயில்வாகனம், கனகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சோமசுந்தரம், மனோன்மணி, செல்லம்மா மற்றும் பராசக்தி (இத்தாலி), காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கமலாம்பிகை, சங்கரலிங்கம் (டென்மார்க்), காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிதர்சனன், மதீசன், மதுமிதா, மதுஷ்ஜா, கபீசன், காருண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28,03,2013 வியாழக்கிழமை இத்தாலியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ம் வட்டாரம் நயினாதீவு ,
தொடர்புகளுக்கு:- 0213001910. (7370) (23- 6-16)

தகவல்
குடும்பத்தினர் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட மட்ட கபடிச் சம்பியன்கள்

# ஆண்களில் சண்டிலிப்பாய் பெண்களில் தெல்லிப்பழை



சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி



தெல்லிப்பழை பிரதேச செயலக அணி



2 ஆம் இடம் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி



2 ஆம் இடம் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி

யாழ்ப்பாணம்,மார்ச் 28

மாவட்ட ரீதியான கபடிச் சுற்றுப் போட் டியில் ஆண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் தெல்லிப் பழை பிரதேச செயலக அணியும் சாதனை படைத்து சம்பியனாகின.

துரையப்பா விளையாட்ட ரங்கில் நேற்று முன்தினம் இந்த சுற்றுப்போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதி யாட்டங்கள் நடைபெற்றன.

இதில் ஆண்கள் பிரிவில் அரையிறுதியாட்டத்தில் பல ஆண்டு காலமாக சம்பியன் பட்டத்தை தனதாக்கி வைத் திருந்த பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் இறங்கிய பருத் தித்துறை அணிக்கு இந்த ஆட்டம் ஏமாற்றத்தையே வழங்கியது. இரு அணிகளும் புள்ளிகள் மாறி, மாறி பெற்றுக்கொண்ட போதும் சண்டிலிப்பாய் அணி வீரர்கள் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நடப்புச் சம்பியனான பருத்தித்துறை அணி இறுதிக் கட்டத்தில் புள்ளிகளைப் பெற முடியாது திணறினர். இதனால் பருத்தித்துறை அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தெரிவாகியது சண்டிலிப்பாய் அணி.

**30 வருடத்தின் பின் சம்பியன் வென்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியினர் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது**

இதன் பின்னர் இறுதியாட் டத்தில் சண்டிலிப்பாய் அணி தெல்லிப்பழை அணியை எதிர்கொண்டது. இந்த இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் போட்டி போட் டுக்கொண்டு புள்ளிகளைக் குவித்தன.

எந்த அணி இறுதிப் போட்டியை வெற்றிகொள் ளப் போகின்றது என்பதை கடைசிக் கணம் வரை எவ ராலும் ஊகிக்கமுடியாதி ருந்தது. அந்தளவுக்கு இரு அணி வீரர்களதும் ஆட்டத்தில் அனல் பறந்தது.

சண்டிலிப்பாய் அணியை இலகுவாக வென்றுவிடலாம் என்ற நம்பிக்கையுடன் கள மிறங்கிய தெல்லிப்பழை அணியின் கனவையும் தவிடு பொடியாக்கினர் சண்டி லிப்பாய் அணியினர்.

ஆட்டநேர நிறைவில் சண்டிலிப்பாய் அணி தெல் லிப்பழை அணியை 36:34 எனும் புள்ளிகள் வித்தியா சத்தில் வெற்றி கொண்டு சம்பியனானது.

இதன் மூலம் கபடிப் போட்டியில் 30 வருடத்தின் பின் சம்பியன் வென்று சண்டி லிப்பாய் பிரதேச செயலக அணியினர் சாதனை படைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் பெண்க ளுக்கான கபடிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நடைபெற்றது. இந்த இறுதி யாட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை அணி களமிறங்கியது.

இதில் ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மிக இலகுவாக 65:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஊர்காவற்றுறை அணியை வெற்றி கொண்டது. (ந-422-86)

# முஸ்லிம் மகா வித்தியாலய அணி 19 வயது உதைபந்தில் சாதித்தது

வவுனியா,மார்ச் 28

வவுனியா வலயப் பாட சாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டியின் 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் முஸ்லிம் மகா வித்தியாலயம் வெற்றி பெற்றுச் சம்பியனாகியுள்ளது.

இந்தப் போட்டியின் இறு தியாட்டம் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயமும், முஸ்லிம் மகாவித்தியால யமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சமபலம் கொண்டதால் போட்டி பர பரப்பாக அமைந்து பார்வை யாளர்களுக்கு விருந்தளித்தது.

ஆட்டம் ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் முஸ்லிம் மகாவித்தியாலய வீரன் றிம்சான் தனக்கு கிடைத்த பந்தை எதிரணியின் தடுப் புக்களையும் மீறி உட்புகுந்து நேர்த்தியான கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார். இதனைத் தொடர்ந்து பதிலடி கொடுக் கும் நோக்கில் தமிழ் மத்திய மகாவித்தியாலய அணி வீரர்கள் தமது வேகத்தை அதிகப்படுத்தினர்.

இதேவேளை முன்னே றித்தாக்கும் முயற்சிகளை கைவிட்டு முஸ்லிம் மகாவித் தியாலய அணியினர் எதிர ணியினரின் கோல் அடிக்கும் முயற்சிகளை தடுக்கும் வகையில் தற்காப்பு ஆட்டத் தில் இறங்கினர். ஆனால் முதற்பாதி ஆட்டம் முடிவ டைவதற்கு இரண்டு நிமி டங்கள் இருக்கையில், அந்த வியூகங்களை தன்னுடைய சாதுரியமான பந்து நகர்த்தலின் மூலம் உடைத்தெறிந்து கொண்டு ஊடுருவிய தமிழ் மகாவித்தியாலய அணி வீரன் டிலக்ஷன் அருமையான கோல் ஒன்றை அடித்து எதிரணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

இதனால் 1:1 என்று இரு அணிகளும் சமநிலையில் இருந்த போது ஆட்டம் இடைவேளைக்காக நிறுத் தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரு அணியினரும் மேலதிக கோல் ஒன்றைப் பெற்று சம்பியனாக வேண்டும் என்ற வேகத்துடன் விளையாடினார் கள். இந்தச் சூழ் நிலையில் முஸ்லிம் மகாவித்தியால்ய முன்கள வீரர் ருஷான் தனது அணிக்காக கோல் ஒன்றை அடித்து தனது அணியை முன்னிலைபெறச் செய்தார்.

இந்த நிலையில் ஆட்டநேர நிறைவில் 2:1 என்ற கோல் அடிப்படையில் முஸ்லிம் மகாவித்தியாலய அணி சம்பியனானது.

இந்தச் சுற்றுத் தொடரில் மூன்றாமிடத்தினை செட் டிக்குளம் மகாவித்தியாலய அணி பெற்றுக்கொண்டது. (ந-400)

# நெளுக்குளம் கலைமகள் வென்றது உதைபந்தில்

வவுனியா,மார்ச் 28

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கு இடையி லான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம் சம்பிய னானது.

வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதா னத்தில் நடைபெற்ற இறுதி யாட்டத்தில் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மும், செட்டிக்குளம் மகாவித் தியாலயமும் மோதின.

ஆரம்பத்தில் இரு அணி களும் சமபலத்துடன் மோதிக் கொண்ட போதும் நேரம் செல்லச் செல்ல செட்டிக் குளம் மகாவித்தியாலயத்தின் ஆட்டத்தில் தளர்வு ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்ட கலைமகள் மகா வித்தியாலய அணி 2 கோல் களை அடித்து, 2:0 என்ற ரீதியில் சம்பியனானது.

இதில் மூன்றாமிடத்தை சைவப்பிரகாச மகளிர் கல்லூரி பெற்றது.

முதல் மூன்று இடங் களையும் பெற்ற அணிகள் மாவட்ட மட்டப் போட்டி களில் பங்குபற்றவுள்ளன என வவுனியா தெற்கு வலய உடற்கல்வி உதவிப் பணிப் பாளர் ஏ.எம்.சுபைர் தெரி வித்தார்.

(ந-400)



கிளிநொச்சி வலய மட்ட கராத்தே சுற்றுப் போட்டிகளில் [illegible] கிளிநொச்சி நாச்சிக்குடா அணி வீரர்களுடன் உடற்கல்வி ஆசிரியர் மற்றும் பயிற்றுநர்கள் (ந-400)

## பரந்தன் இளைஞர் அணி சம்பியன்

கண்டாவளை பிரதேச செயலகபிரிவில் பெண் ளுக்கான கபடிச் சுற்றுப் போட்டியில் பரந்தன் இளைஞர் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது

இந்த இறுதிப் போட் டியில் வலைப்பாடுபரந்தன் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்மடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்ட நிறைவில் பரந்தன் இளைஞர் விளையாட்டுக்கழக அணி [illegible] என்ற புள்ளி [illegible] இலகு வெற்றிபெற்றது. (ந-23)

## இன்றைய ஆட்டங்கள்



கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு - 7.30 மணி

(வலிகாமம் பிரிவு)

தாவடி காளி அம்பாளும் வி.க. எதிர் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம்

★ ★ ★

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பி.ப. 4.மணி

கரவெட்டி நவசக்தி வி.க. எதிர் கரணவாய் கொலின்ஸ் வி.க. (ந-400-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்கு முன்னரே தெரியும்



"இரண்டு உலக கிண்ணங்களைப் பெற்றுத்தந்த டோனி ஆஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரையும் முழுமையாக வெல்வார் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்கனவே இருந்தது"– என்று புகழ்ந்து தள்ளியுள்ளார் பி.சி.சி.ஐ., தலைவர் சீனிவாசன். இந்தியா சென்ற ஆஸ்திரேலிய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. சென்னை, ஹைதராபாத், மொஹாலி மற்றும் டெல்லியில் நடந்த போட்டிகளில் ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி தனது 81 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில் முதன் முறையாக 4–0 என்று தொடரை முழுமையாக வென்றது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் [பி.சி.சி.ஐ.,] தலைவர் சீனிவாசன் கூறுகையில், "ஆஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி முழுமையாக வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. டிராவிட், லக்ஸ்மண் உள்ளிட்ட மூத்தவீரர்கள் ஓய்வு பெற்ற நிலையில் அணித்தலைவர் டோனி தலைமையிலான இளம் இந்திய அணி மீது நம்பிக்கை வைத்திருந்தோம். அது வீண்போகவில்லை. ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்திய வீரர்கள் விளையாடுகின்றனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சில நேரங்களில் தோல்வியை சந்திக்கின்றனர்.

கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கெதிரான டெஸ்டில் அதிர்ஷ்டம் கை கொடுக்காததால் சொந்த மண்ணில் தோல்வியை சந்திக்க வேண்டியதாயிற்று. இதனால் அணியில் ஒரு சில மாற்றங்கள் செய்து ஆஸ்திரேலிய தொடரில் களமிறக்கினோம். கிடைத்த வாய்ப்பை இளம் வீரர்கள் ...ாக பயன்படுத்தி சாதித்துக் காட்டினர்.

இவர்களது வெற்றிநடை அடுத்து நடைபெறவுள்ள தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் தொடரவேண்டும். இந்திய அணிக்கு தென்னாபிரிக்கத் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். இந்தத்தொடருக்கு முன், போதிய பயிற்சிகளை மேற்கொண்டு வீரர்கள் தயாராக வேண்டும்.

அணியில் வீரர்களை சேர்ப்பதும், நீக்குவதும் தெரிக்குழுவின் தனிப்பட்ட முடிவு. இதில் தலையிட விரும்பவில்லை. எதிரணிக்கு ஏற்ப வீரர்களின் உடற்தகுதி, ஆட்டத்திறன் மற்றும் முன்னைய போட்டிகளின் செயற்பாடு என்பவற்றைக் கருத்தில் கொண்டே வீரர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

இவர்கள் எப்போதுமே சிறந்த அணியை தேர்வு செய்வார்கள் என நம்புகிறேன். இந்தத்தொடரில் தொடக்க வீரர்களாக களமிறங்கிய முரளி விஜய், புஜாரா, ஷிகர் தவான் ஆகியோர் சிறப்பாக செயற்பட்டனர். இதேபோல பந்துவீச்சில் அஷ்வின், ரவிந்திர ஜடேஜா கைகொடுத்தனர்.

எப்போதுமே அணித்தலைவர் டோனி சிறப்பாக விளையாடுவார். இவரது தலைமையில் இரண்டு முறை இந்திய அணி உலகக் கிண்ணத்தை [20/20 மற்றும் ஒருநாள் போட்டி] வென்றதை மறக்க முடியாது. அணித்தலைவராக சிறந்த அனுபவம் பெற்றுள்ள இவர், ஏற்றத்தாழ்வுகளை சமாளித்து அணியைக் கரை சேர்த்து வருகிறார். ஐ.பி.எல்., தொடரில் இலங்கை வீரர்கள் பங்கேற்பதில் எவ்வித சிக்கலும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப்பிரச்சினையை தமிழக அரசு சிறந்த முறையில் கையாளும் என நம்புகிறேன்." –என்றார். (ங)

# மோசமான அணி

## -பாயும் ஆஸி ஊடகங்கள்

கடந்த 34 ஆண்டுகளில் படுமோசமான கிரிக்கெட்டை வெளிப்படுத்திய ஆஸ்திரேலிய அணி கிளார்க் தலைமையிலான அணியே என்று ஆஸ்திரேலிய ஊடகங்கள் அந்த அணிக்கு எதிராகப் பாய்ந்துள்ளன.

இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணி 0–4 என்று முழுமையாகத் தோற்றது. இது குறத்து ஆஸ்திரேலிய ஊடகங்கள் ஆவேசமான கருத்துக்களை வெளியிட்டுள்ளன. அவற்றில் சில வருமாறு–

**தி டெலிகிராப்:**

2013இல் ஆஸ்திரேலிய அணியின் இந்தியத் தொடர் மிக மோசமானதாக அமைந்து விட்டது. கடந்த 34 ஆண்டுகளில் இருந்த அணிகளில் இது தான் மட்டமான அணி.

கிளார்க் அணியினருக்கு மோசமான வரவேற்பு தான் இங்கு கிடைக்கும். அணியின் பந்து வீச்சாளர்களான சிடில் [51மற்றும் 50 ஓட்டங்கள்], ஸ்டார்க் [99] கூட அரைச்சதம் அடித்து விட்டனர். ஆனால், அணியின் துணைத்தலைவர் வொட்சன், இந்தத்தொடரில் ஓர் அரைச்சதம் கூட அடிக்காதது பெரும் ஏமாற்றம்.

* இந்தத்தொடரில் வொட்சனை [239 பந்து] விட அதிக நேரம் களத்தில் இருந்தார் சுழல் பந்து வீச்சாளர் லியான் [244 பந்து]. லியானின் சராசரியை [18 ஓட்டங்கள்] விட, வொட்சனின் சராசரி [16.5] மோசம்.


**ஹெரால்ட் சன்:**

தற்போதைய பெரிய கவலை ஆஸி. அணியின் துடுப்பாட்டம் தான். ஆஷஸ் தொடர் தொடங்கவுள்ள நிலையில் இது கவலை தருகிறது. இந்தத் தோல்வியில் இருந்து ஆஸ்திரேலிய வீரர்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டால் நல்லது. இந்தத்தொடரில் கிளார்க்குக்கு அடுத்து, தனிப்பட்ட வீரராக வேகப்பந்து வீச்சாளராக ஸ்டார்க் [99] தான் அதிக ஓட்டங்கள் எடுத்தார். இந்தியாவிடம் தோல்வியடைந்தது குற்றம் அல்ல. தோல்வியடைந்த விதத்தைத் தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இதுபோன்ற கருத்துக்களை சிட்னி மோர்னிங் ஹெரால்ட் உள்ளிட்ட பல பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. (ங)

# 12 கோடியை உதறிய கிளார்க்



காயம் காரணமாக ஓய்வு எடுக்க வேண்டியுள்ளதால் தன்னைத் தேடி வந்த 12 கோடி ரூபாவை உதறிய மைக்கல் கிளார்க் ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்க மறுத்துள்ளார்.

ஆறாவது ஐ.பி.எல்., தொடருக்கான ஏலத்தில் புனே வாரியர்ஸ் அணியால் 2.12 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்டவர் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க். சமீபத்தில் இந்தியா வந்த இவரது தலைமையிலான ஆஸ்திரேலிய டெஸ்ட் அணி, மோசமான தோல்வியுடன் நாடு திரும்பியது.

இந்தத் தொடரின்போது முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக, டில்லியில் நடைபெற்ற டெஸ்டில் பங்கேற்காமல், அணித்தலைவர் கிளார்க் ஆஸ்திரேலியா திரும்பினார். இவரது காயத்துக்கு குறைந்தது 7 முதல் 10 வாரங்கள் ஓய்வு எடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அப்போது தான் வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் பங்கேற்கும் வகையிலான முழுமையான உடற் தகுதியை கிளார்க் பெற முடியும்.

இதையடுத்து, ஆறாவது ஐ.பி.எல்., தொடரில் இருந்து விலகுவது என, முடிவெடுத்துள்ளார் கிளார்க். இவருக்கு ஏலத்தில் கொடுக்கப்பட்ட பணத்தை விட ஐந்து மடங்கு அதிகமாக, அதாவது 12 கோடி ரூபா வரை கொடுக்க முன்வந்தது புனே அணி நிர்வாகம். இருப்பினும், ஐ.பி.எல்., தொடரில் இருந்து அவர் விலகினார்.

இதுகுறித்து கிளார்க் கூறுகையில், "காயத்துக்கு 'ஸ்கான்' எடுத்து பார்த்தோம். இப்போதைய நிலையில், ஐ.பி.எல்., தொடரில் இருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை," என்றார். (ங)

# படையெடுத்த பாம்புகள்



'ஐ-லீக்' உதைபந்துப் போட்டி நடைபெற்ற மைதானத்துக்குள் திடீரென 6 க்கும் மேற்பட்ட விஷப் பாம்புகள் படையெடுத்ததால் ரசிகர்களும், விளையாட்டு வீரர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்தியாவின் முன்னணி உதைபந்துத் தொடரான 'ஐ-லீக்'கில் மோகன் பகான், பெய்லன் ஆரோஸ் அணிகள் மோதிய லீக் போட்டி கொல்கத்தாவின் கல்யாணி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் 3:2 என்ற கோல்கள் கணக்கில் மோகன் பகான் அணி வெற்றிபெற்றது. இந்தப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 6க்கும் அதிகமான கொடிய விஷப் பாம்புகள் மைதானத்துக்குள் ஊர்ந்தன. இவைதவிர, 10 முதல் 15 வரையான பாம்புகள் வீரர்கள் உடைமாற்றும் அறையிலும், மாடிப்படிகளிலும் நடமாடின. எனினும் உடனடியாக பாம்புகளை மைதான நிர்வாகிகள் பாதுகாப்பாக வெளியேற்றினர்.

இது குறித்து நகராட்சித் தலைவர் பி.கே.சர் கூறுகையில், "இது பாம்புகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிதான். வெப்பம் அதிகமாக இருந்ததால்தான் அவை வெளியே வந்துள்ளன. பாம்புகள் அதிகமான இடத்தில் தான் நாம் உள்ளோம். இதை விடுத்து பாம்புகளை குறை சொல்ல முடியாது. எனினும் போட்டிகளின் போது பாம்புகள் பிரசன்னமானால் அது தேவையற்ற விபரீதங்களை ஏற்படுத்திவிடும். எனவே மைதான நிர்வாகம் இது குறித்து அக்கறை எடுக்க வேண்டும்"–என்றார். (ங)

# உறுமினார் வுட்ஸ் மீண்டும் முதலிடம்

ஆர்னோல்ட் பாமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 'கோல்ப்' தொடர் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஆர்லான்டோவில் நடைபெற்றது. 4 சுற்றுக்களைக் கொண்ட இந்தத் தொடரில் அமெரிக்க வீரர் டைகர் வூட்ஸ் அபாரமான ஆட்டத்தை நீண்ட நாள்களுக்குப் பின்னர் வெளிப்படுத்தி முதலிடத்தை பிடித்து சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். அவருக்கு 6 கோடி ரூபா பரிசுத்தொகையாகக் கிடைத்தது.

இங்கிலாந்தின் ஜஸ்டின் ரோஸ் 2ஆவது இடத்தையும், அமெரிக்காவின் மார்க் வில்சன் 3ஆவது இடத்தையும் பெற்றனர். இந்தப் பருவ காலத்தில் டைகர் வூட்ஸ் பெறும் 3ஆவது பட்டம் இதுவாகும். பி.ஜி.ஏ தொடரில் அவரது 77ஆவது பட்டமாகும்.

இந்தப் போட்டியில் மகுடம் சூடியதன் மூலம் 37 வயதான டைகர் வூட்ஸ், 'கோல்ப்' வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் அயர்லாந்தின் ரோரி மெக்ல்ராயை பின்னுக்குத் தள்ளிவிட்டு மீண்டும் முதலிட அரியணையில் ஏறியுள்ளார். 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குப் பிறகு முதன்முறையாக முதலிடத்தை எட்டியுள்ளார் டைகர் வூட்ஸ். இவர் ஏற்கனவே 623 வாரங்கள் முதலிடத்தில் இருந்து சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ங)



# புஜாரா சந்தேகம்



இந்திய டெஸ்ட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான புஜாரா ஆஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரில் இரட்டைச் சதம் அடித்து முத்திரை பதித்தார்.

இந்த டெஸ்ட் தொடரின் போது அவருக்கு வலது கையின் நடுவிரலில் காயம் ஏற்பட்டது. இந்தக் காயம் காரணமாக ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணி விளையாடும் முதல் 4 ஆட்டங்களில் புஜாரா ஆடுவது சந்தேகமாகியுள்ளது.

ஐ.பி.எல். தொடருக்கான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் தொடங்கியுள்ளது. எனினும் இதில் புஜாரா காயம் காரணமாகப் பங்கேற்கவில்லை. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குருமதி அர்ஜுன்



கொக்குவில் கிழக்கு, றெயில் றோட், நந்தாவில் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நோர்வே ஒஸ்லோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குருமதி அர்ஜுன் நோர்வேயில் 22.03.2013 அன்று காலமானார்.

அன்னார் உதயமூர்த்தி - மனோன்மணி (சாந்தா) தம்பதியரின் அன்பு மகளும் அர்ஜுனின் அன்பு மனைவியும் உதயமதி (பவா, நோர்வே), அரவிந்தன் (நோர்வே), கிரிதரன் (கிரி, நோர்வே) ஆகியோரின் சகோதரியும் அப்புத்துரை - இரத்தினம் தம்பதியரின் பேர்த்தியும் பாஸ்கரனின் (கண்ணன், நோர்வே) மைத்துனியும் வர்ஷன், வர்ஷிகா, ஷஜி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 04.04.2013 வியாழக்கிழமை நோர்வே (ஒஸ்லோவில்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பவா - 004791745095,
கிரி - 46238933, சாந்தா - 21386549

(7364) (23- 6-)

## K.K. விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம்



பாலாவோடை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகம், 45/1, சடைலேன் வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (26.03.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் -தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்பு கனவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- பார்பதிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45/1, சடைலேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மகா சங்க பொதுக் கூட்டம்

தென்மராட்சி, மார்ச் 28

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி மகா சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பிரதேச செயலர் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளதாகப் பிரதேச சமுர்த்திச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)


### இடம் தேவை

பொருள்கள் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற வீடு தேவை. நல்லூர், திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு- 0777730303
(சி/7366)

அரியாலை நகரில்

### SofTTech COMPUTER EDUCATION

Microsoft Office, Desktop publishing
Dip in Office Automation
Dip in Graphics Designing
Dip in Graphics and Animation
Dip in Computer Programming
Kids Courses மற்றும்
கணிணிபயிற்சிநெறிகள் அனைத்தையும்
75% கட்டணக்கழிவுடன் மிகக்குறைந்த கட்டணத்தில் கற்றுக்கொள்ளலாம்.
தொகுதி/தனிப்பட்ட வகுப்புகள் 05/04/2013 வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

சிங்கள,ஆங்கில வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
Sinhala,English (Spoken)

அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கு:
[illegible]

### இன்று முதல் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக் குறைப்பும் இலவச பொருள்களும்




6 கதிரைக்கு ரீப்போ FREE

மற்றும் TV ஸ்ராண்ட், மரமேசைகள், சோக்கேஸ், றெசின்ரேபிள், பிளாஸ்ரிக் மேசைகள், bookshelf மற்றும் வீட்டு அலுவலக தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள

இல-230, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
[இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்]
T.P- 0773583879, 0778314201


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 * 05 * 1969



ஆண்டவன் அடியில் 08 * 04 * 2012

அமரர்
### பொன்னுத்துரை அன்பழகன் (அன்பு G.S)

(முன்னாள் கிராம உத்தியோகத்தர் நயினாதீவு)

எங்கள் குடும்பத்தலைவனாக இருந்து
எங்களை நல்வழிப்படுத்தி நன்னெறி
புகட்டித் திடீரென படைத்தவன் அழைப்பை
ஏற்று பாருலகம் விட்டு வானுறையும் தெய்வமாகி
விட்டீர் ஆண்டொன்று ஆயினும்
ஆறவில்லை எம்துயரம்

இன்று (28.03.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வதுடன், இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

4 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.

(34956) (8.6)


தற்போது யாழ் நகரில்...



BTEC HND in
# BIOMEDICAL SCIENCE
Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி

ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives
Macro Ads
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

### போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

கி.சேவகர் மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கான யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவில் இந்த வார வகுப்புக்கள் சனிக்கிழமை 12.30 மணிக்கு நடைபெறும். அடுத்த வாரம் முதல் ஒவ்வொரு ஞாயிறும் நடை பெறும்.
தொடர்பு:0751164564

### THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE - JAFFNA

2014 A/L PHYSICS
## ஒளியியல்
பிரிவு I MON, WED 6.30-7.30 AM
பிரிவு II SAT, SUN 11-12 AM
ஆரம்பம் - 30.03.2013 சனி
By - செல்வன்
(c7362)(6.8)

### காணி விற்பனைக்கு

கலட்டி வீதி, சங்கரத்தை, வட்டுக் கோட்டையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 0776544746

### சாரதி தேவை

40 வயதுக்கு மேற்பட்ட கார்ச்சாரதி தேவை.
தொடர்பு:
021568909O

## கனடாவில் < படிக்க உழைக்க

## அதிவேக சட்ட ஆலோசனை

### கனடா விசா ஆசோசனைப் பிரிவு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(7 நாள்களும் காலை 8மணி - இரவு 8 மணி வரை)



(34931)(8.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.